ஈழத்தில் கண்ணகி கலாச்சாரம்

முனைவர் பால. சுகுமார்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

ஈழத்தில் கண்ணகி கலாச்சாரம்

முனைவர் பால. சுகுமார்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES
இரண்டாம் முதன்மைச் சாலை
மையத் தொழில்நுட்பப் பயிலக வளாகம்
தரமணி, சென்னை - 600 113

சி.பா. ஆதித்தனார் அறக்கட்டளைச் சொற்பொழிவு
(அறக்கட்டளை நிறுவியவர்: சி.பா. ஆதித்தனார் கல்வி நிறுவனம்)
வரிசை எண் : 7

BIBLIOGRAPHICAL DATA

Title of the Book	:	Īḻattil kaṇṇakik kalāccāram
Author	:	Prof. Dr. Bala. Sukumar Former Dean, Department of Fine Arts Eastern University, Sri Lanka
General Editor	:	Prof. Dr. K.A. Gunasekaran Director International Institute of Tamil Studies Tharamani, Chennai-600 113
Publisher & ©	:	International Institute of Tamil Studies II Main Road, C.I.T. Campus, Chennai-600 113 Ph: 22542992
Publication No.	:	637
Language	:	Tamil
Edition	:	First
Year of Publication	:	2009
Paper Used	:	18.6 Kg TNPL Maplitho
Size of the Book	:	1/8 Demy
Printing type used	:	10 Point
No. of Pages	:	viii + 88
No. of Copies	:	1200
Price	:	Rs. 30/- (Rupees Thirty Only)
Printed by	:	United Bind Graphics 189-D, Royapettah High Road Mylapore, Chennai - 600 004.
Subject	:	Kannaki Cult in Sri Lanka (Study of Folk Culture)

அறக்கட்டளைச் சொற்பொழிவாளர் கருத்துகட்கு நிறுவனம் பொறுப்பன்று.

பேரா. முனைவர் கரு. அழ. குணசேகரன்
இயக்குநர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை-600 113

அணிந்துரை

கண்ணகி தமிழ்நாட்டில் கலாச்சாரச் சொல்லாடலின் இன்று வரை முக்கியமான ஒரு குறியீடாக தொழிற்பட்டுவருவதை நாம் காணலாம். தமிழ்நாட்டில் அறுபட்டுப்போன பல பண்பாட்டு சுவடுகளாக ஈழத்தில் இன்றும் நடைமுறையில் உள்ளன. அதில் கண்ணகி கலாச்சாரமும் ஒன்று. வெறுமனே வழிபாட்டு மரபாக மாத்திரமல்லாமல் ஒரு கலாச்சாரப் பாரம்பரியத்தை இன்றளவும் பேணிக் காக்கின்ற பண்பினை ஈழத்தில் பார்க்கலாம்.

நூலாசிரியர் பால. சுகுமார் ஈழத்தில் கண்ணகி கலாச்சாரம் பற்றியதான இந்த நூலில் நாம் புதிதாக பல தகவல்களை அறியக்கூடியதாக உள்ளன. நாம் மறந்துபோன பல விழுமியங்கள் இன்று நமக்கு நினைவுப்படுத்துவனவாக உள்ளன.

ஈழமக்களின் வாழ்வின் வாசல்கள் தோறும் கண்ணகி முக்கியக் குறியீடாக விளங்குவதை இந்நூல் வழியே நாம் அறியமுடிகிறது.

இந்தியாவும் ஈழமும் ஒரு காலத்தில் ஒன்றாக இருந்தமையின் வழிவழி வந்த பண்பாட்டு உறவுகளின் தடயங்களை நாம் இந்த நூலில் வெளிப்படுவதை அவதானிக்க முடிகிறது.

கண்ணகி வழக்குரை, கண்ணகி ஊர்சுற்றுக் காவியம், கண்ணகி குளுர்த்தி ஆகிய கண்ணகி சார் இலக்கியம் பற்றிய தகவல்களும் ஆய்விலக்கியம் பற்றிய விளக்கங்களும் செம்மொழி இலக்கியமான சிலப்பதிகாரம் பொதுமக்கள் மத்தியில் பல்வேறு வகையான இலக்கியங்களின் தோற்றத்திற்கு அடிப்படையாக அவர் தலைமைக் காணமுடிகிறது.

சிங்கள மக்கள் மத்தியிலும் சிலப்பதிகாரத்தின் வேர்கள் ஆழமாக ஊன்றியிருப்பதை சிங்கள மொழியில் உள்ள கண்ணகி தொடர்பான இலக்கியங்கள் என்ற பகுதி விளக்கி நிற்கிறது.

தகவல்கள் அடங்கியுள்ள நூலைத் தந்துள்ள அன்பர் பேரா. பால. சுகுமார் அவர்களுக்கு என் பாராட்டுக்கள்.

இந்த அறக்கட்டளையை நிறுவிய சி.பா. ஆதித்தனார் கல்வி நிறுவனத்திருக்கும் எனது பாராட்டுக்கள்.

இந்நிறுவன வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து வருவதோடு தம் தனிப்பட்ட அக்கறையைக் காட்டிவரும் **நிறுவனத் தலைவரும் தமிழக அரசின் முதல்வருமான மாண்புமிகு டாக்டர் கலைஞர்** அவர்களுக்குத் தமிழுலகம் என்றும் நன்றிக்கடன்பட்டுள்ளது.

தமிழ்ப்பணிகளுக்கு ஆற்றுப்படுத்தி வரும் **மாண்புமிகு தமிழக நிதியமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன்** அவர்களுக்கு எம் நன்றி என்றும் உரியது.

நிறுவனச் செயல்பாட்டுக்கு உறுதுணையாக இருந்துவரும் **தமிழ் வளர்ச்சி, அறநிலையம் மற்றும் செய்தித் துறை அரசுச் செயலாளர் திரு க. முத்துசாமி இ.ஆ.ப.** அவர்களுக்கும் நன்றி.

இச்சொற்பொழிவின் எழுத்துருவை மெய்ப்புத் திருத்தம் செய்த முனைவர் ஆ. தசரதன் அவர்களுக்கும், இச்சொற்பொழிவு மற்றும் நூல் வெளியீடு தொடர்பான அனைத்து ஏற்பாடுகளையும் செய்த நிறுவனப் பணியாளர்கள் மற்றும் கணிப்பொறியாளர் திருமதி எ.ம. லட்சுமி ஆகியோருக்கும் எம் நன்றிகள் என்றுமுண்டு. இந்நூலை அழகுற அச்சிட்டுத் தந்த யுனைடெட் பைண்ட் கிராபிக்ஸ் அச்சகத்தாருக்கு எம் பாராட்டுகள்.

இயக்குநர்

ஆசிரியர் பற்றி....



பேரா. பால. சுகுமார் அவர்கள் இலங்கை திருகோணமலை மாவட்டம் சேனையூர் என்ற ஊரில் பிறந்தவர் (18-10-1955). 54 அகவை நிரம்பியவர். பெற்றோர் திரு. காளியப்பு பாலசிங்கம் - திருமதி தெய்வநாயகம். இலங்கை கிழக்குப் பல்கலைக் கழகத்தில் விரிவுரையாளராக, நுண்கலைத் துறை தலைவராக, கலை கலாசார பீடத்தின் முதன்மையராக, சுவாமி விபுலானந்தா அழகியல் கற்கைகள் நிறுவனத்தின் இணைப்பாளராக பணியாற்றி தற்பொழுது இலண்டனில் வசித்து வருகின்ற இவர், ஈழத்தமிழர் இசை நடனம் தொடர்பான ஆய்வுப் பணிகளில் ஈடுபட்டுள்ளதோடு, நாடகப் பயிலரங்குகள், ஈழத்தமிழர் கூத்து நடனம் தொடர்பான பயிலரங்குகளையும் நார்வே, ஃபிரான்ஸ், இலண்டன் ஆகிய இடங்களில் நடாத்தி வருபவர். நவீன கலை இலக்கியம் தொடர்பான புதிய தேடல்களோடு பழைய மரபுகளில் மிகுந்த ஈடுபாடு கொண்டும் உழைப்பவர்.

நாடக நடிப்பு, எழுத்து, இயக்கம், இசை என எல்லாத் தளங்களிலும் பணியாற்றக்கூடியவர். பாடசாலை ஆசிரியர் பணியில் பத்தாண்டு அனுபவமும், பல்கலைக்கழகப் பணியில் பதினாறு ஆண்டு அனுபவமும் கொண்டவர். பேரா. கா. சிவத்தம்பி, பேரா. க. கைலாசபதி, பேரா. சி. மௌனகுரு, பேரா. கரு.அழ. குணசேகரன் ஆகியோரிடம் கல்விப் பயின்ற சிறப்புக்குரியவர்.

பேரா. கே. இராமானுஜம், பேரா. சி. மௌனகுரு, பேரா. கரு.அழ. குணசேகரன் ஆகியோரின் நாடகங்களில் நடித்த அனுபவமும், தானே பல நாடகங்களை இயக்கிய அனுபவமும் கொண்டவர். இவர் மேடையேற்றிய கொங்கைத் தீ, குறிஞ்சிப் பாட்டு, கருஞ்சுழி ஆகிய நாடகங்கள் ஈழத்து தமிழ் நாடக வரலாற்றில் முக்கியத் தாக்கத்தை ஏற்படுத்தின. தமிழில் இவர் எழுதிய நூல்கள்: 1. பால. சுகுமார் நாடகங்கள், 1993, 2. உலக நாடக அரங்கு, 1996, 3. தமிழில் நாடகம், 1995, 4. திருகோணமலை நாடக அரங்கப் பாரம்பரியம், 1994, 5. சூர்ப்பனகை இடது கை வாங்கிய இராவண தனுசு, 1997, 6. பேரா. சி. மௌனகுரு மணிவிழா (தொ.ஆ.), 2003, 7. சின்ன தேவதை (தொ.ஆ.), 2005, 8. அனாமிகா (தொ.ஆ.), 2007,

தமிழ் புலமைசார் மார்பில் முற்போக்கு நோக்குக் கொண்ட இவர், ஈழத்தில் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய நாடகர்களில் ஒருவர்.

அறிமுக உரை

நீண்ட நாட்களாக என்னுள்ளிருந்த கனவு ஒன்று இன்று நனவாகி இருக்கிறது. கண்ணகி என் உணர்வுகளோடு கலந்து வளர்ந்த ஒரு கலாசார பிம்பம். என் இளவயது தொடக்கம் இன்று வரை என்னைப் பாதித்த கலாசார மரபின் தொடர்ச்சியாக கண்ணகியை நான் பார்க்கிறேன்.

என்னுடைய பாட்டனார் எங்களூரிலுள்ள கண்ணகி கோயிலின் பூசகர். என்னுடைய தந்தையார் கண்ணகி குளுர்த்தப் பாடுகிறபொழுது, உடுக்கடித்து மகிழ்பவர். கண்ணகி சடங்கின் போது நடக்கிற அந்த நிகழ்ச்சி, அந்த இசை இப்பொழுதும் என் காதுகளில் ஒலித்துக்கொண்டிருக்கிற பூபாளம். என்னை அவ்வப்பொழுது உசுப்பிவிடுகிற வல்லமை அந்த இசைக்கு உண்டு. அந்த உந்துதலின் வெளிப்பாடுத்தான் இந்த நூல்.

இந்த நூல் ஒரு கலாசார மரபின் தொடர்ச்சியை அல்லது நீட்சியை நமக்கு வெளிப்படுத்தி நிற்கிறது. எங்கோ அறுந்து போன மரபின் மிச்சங்களை நமக்கு எடுத்துக்காட்டுகிறது. நாம் மறந்து போனவற்றை மீண்டும் ஞாபகப்படுத்துகிறது.

தமிழ்நாட்டில் ஒரு காலத்தில் பலமாக பேசப்பட்ட ஒரு கலாசார மரபின் தொடர்ச்சியை நீங்கள் இந்த நூலில் பார்க்க முடியும். சிலப்பதிகாரத்தையும், கண்ணகியையும் முன்னிறுத்திய கலாசார மரபுகள் தொடரப்பட வேண்டும்.

கண்ணகி தமிழர் கலாசாரத்தில் மிகப் பழமையான குறியீடு என்பதை இந்த நூல் உங்களுடன் பேசுகிறது. சிலப்பதிகாரம் நமது இசை நடன நாடக மரபுகளை மிகச் சிறப்பாக வெளிப்படுத்திய நூல். அதனை நாம் சரியாக நம் தமிழ் சமூகத்திற்கு அறிமுகப்படுத்தியிருக்கிறோமா? என்பது கேள்விக் குறியாகவே தொக்கி நிற்கிறது. சிலப்பதிகாரம் பற்றியும் கண்ணகி பற்றியும் இன்னமும் நிறையவே ஆய்வுகளும் நூல்களும் வெளிவர வேண்டியது அவசியமாகிறது. இத்தகைய செயற்பாடுகள் மூலமாக நமது மரபுகளின் தொடர்ச்சியையும் நீட்சியையும் நாம் பேண முடியும்.

இந்த நூல் வெளிவருவதில் மிகுந்த அக்கறை கொண்டவர் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் இயக்குனர் பேரா. கரு.அழ. குணசேகரன் அவர்கள். அவர்களுக்கு எனது நன்றிகள். கணினி அச்சுருவாக்கத்தில் திருமதி எ.ம. லட்சுமி மிகுந்த உதவியாக இருந்தார். அவர்களுக்கும் பிரதியாக்கம் செய்வதில் உதவிய திரு. கிரிவாசன் அவர்களுக்கும், பிழை திருத்தம் செய்து உதவிய முனைவர் ஆ. தசரதன் அவர்களுக்கும் நன்றிகளாகுக.

பொருளடக்கம்

	பக்கம்
ஈழத்தில் கண்ணகி கலாச்சாரம்	1
ஈழத்தமிழ் மக்களிடையே எழுந்த கண்ணகி இலக்கியங்கள்	18
சிங்களவர் மத்தியில் கண்ணகிக் கலாச்சாரம்	26
சிங்கள மக்களிடையே உள்ள கண்ணகி இலக்கியங்கள்	28
வடக்கில் கண்ணகிக் கலாச்சாரம்	32
கொம்பு விளையாட்டு	41
கொம்பு வாரம்	43
ஈழத்தில் கூத்து மீளுருவாக்கம்	61
பிற்சேர்க்கை - 1 கண்ணகை அம்மன் ஊர்சுற்றுக் காவியம்	62
பிற்சேர்க்கை - 2 கண்ணகை அம்மன் குளுத்திப்பாடல்	79



இலண்டன் அருங்காட்சியகத்தில் உள்ள
கண்ணகி சிலையின் ஒரு தோற்றம்

ஈழம் என்ற சொல் இன்று அரசியல்மயமாக்கப்பட்டதாக இருந்தாலும் பல்லாயிரம் ஆண்டு வரலாற்றுப் பாரம்பரியத்தில் அது கலாச்சார அரசியல் சார்ந்த ஒரு சொல்லாடலாய்த் தொடர் நீட்சியைப் பெற்றுள்ளது. சங்கப் புலவர் ஈழத்துப் பூதந்தேவனார் முதல் ஈழத்து "உணவு காளகத் தாக்கமும்" என்ற சொற்றொடர் இன்று வரை தொடர்கிற கலாச்சாரச் சொல்லாடலை நாம் யாரும் மறுத்து விடமுடியாது.

இன்றைய தமிழ்நாட்டுச் சூழலில் கண்ணகி என்ற சொல் பல சர்ச்சைக்கு முகமாகக் கொடுத்துச் சிலர் கண்களுக்குக் கரடி பொம்மையாக்கிய கதைகளையும் நாம் இங்கு நினைவு கொள்ள வேண்டும். கண்ணகி சிலை அகற்றலும் அதன் பின்பு அதனை

மீண்டும் நடுகையும் தமிழ்க் கலாச்சாரத்தின் இருப்பைப் பிரதிபலித்து நிற்கின்றன. கண்ணகி தமிழர் கலாச்சாரத்தின் ஒற்றைக் குறியீடு இதை நாம் ஏற்றுகொள்ள வேண்டும். தமிழ்நாட்டில் பல கண்ணகி கோயில்கள் இருந்தன. ஆனால் அவையெல்லாம் மறைந்து கேரள எல்லையில் உள்ள ஒரு கண்ணகிக் கோயிலோடு சுருங்கிப் போயுள்ளது. தமிழ்நாட்டில் கண்ணகி ஒரு கலாச்சாரமாகவே ஆட்சி பெற்றதைத் துளசி ராமசாமியின் "கண்ணகி கோட்டம்" என்ற நூல் எடுத்தியம்புகிறது. ஆனால் அதன்பின் அதன் தொடர்ச்சி நீளவில்லை.

நாம் இன்று கம்பனுக்கு விழா எடுக்கிறோம். இளங்கோவுக்கு விழா எடுக்கிறோமா? நாம் கொண்டாட வேண்டியது காவியக் கவிஞன் இளங்கோ. ஆனால் நாம் வடநாட்டில் பிறந்த காப்பியத்தின் பெயரால் விழா எடுத்து நம் பண்பாட்டை மறந்து நிற்கிறோம்.

சேரன் செங்குட்டுவன் வடநாட்டிலிருந்து கல் எடுத்து வந்து கண்ணகிக்குச் சிலை நாட்டி விழா எடுத்தான். ஆனால் நாம் கண்ணகி சிலையைப் பிடுங்கி எறியப்பட்டதைக் கரடி பொம்மையோடு ஒப்பிட்டு மகிழ்ச்சி கண்டோம். இவையெல்லாம் அபத்தங்களின் நீட்சி.

ஈழத்தில் கண்ணகி கலாச்சாரம் வடக்கு, தெற்கு, கிழக்கு என எல்லாப் பிரதேசங்களிலும் சிங்களத் தமிழ் மக்களிடையேயும் பரவியுள்ள ஒரு பண்பாட்டுப் படர்ச்சியை நாம் காணலாம் என்பது இன்று முரண்பட்டு நிற்கிற இரண்டு இனமக்களிடையேயும் தொடர்ச்சியான பேணலை வெளிப்படுத்தி நிற்கிறது.

ஈழத்திற்கும் கண்ணகிக்குமான தொடர்புகள் எப்படி ஏற்பட்டன. இன்று வரை அங்குத் தொடர்வதற்கான காரணங்கள் என்ன? சிலப்பதிகாரம் கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் எழுதப் பட்டாலும் கண்ணகி பற்றிய செய்திகள் சங்க இலக்கியத்தில் காணப்படுகின்றன. இளங்கோவடிகள் பழங்குடி மக்கள் சொல்லக் கேட்ட கதையைக் காவியமாக்கினார். ஈழம் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு தென்னிந்தியாவில் இருந்து பிரிக்க முடியாத நிலமாகவே இருந்தது. கண்ணகி கதை நடந்த காலம் அந்தப் பிரிக்கப்படாத நிலப்பகுதியில் நிகழ்ந்திருக்க வேண்டும். கடல்கோள் நிலத்தைப் பிரித்த போது அந்த மக்களோடு சேர்ந்து

அந்தக் கதை சென்றிருக்க வேண்டும். அதனால் தான் அதன் தொடர்ச்சியை இன்று வரை காணமுடிகிறது.

ஈழத்தில் பத்தினி கலாச்சாரம் பற்றி ராஜவலிய என்கிற சிங்கள நூல் பின்வரும் தகவலைத் தருகிறது. கி.பி. 112-134 வரை இலங்கையை ஆண்ட கஜபாகு மன்னன் பத்தினி வழிபாட்டை இலங்கையில் அறிமுகப்படுத்தினான் என்று சொல்கிறது. சேர மன்னன் செங்குட்டுவன் தன்னுடைய தலைநகராகிய வஞ்சியில் கண்ணகிக்குப் பெருவிழா எடுத்த பொழுது கஜபாகு மன்னனை அழைத்ததாகவும் அந்த விழாவில் கலந்துகொண்டு கண்ணகி மேல் பக்தி கொண்ட கஜபாகு மன்னன் ஒரு காற் சிலம்பையும், கண்ணகி சிலையையும் இலங்கைக்குக் கொண்டு சென்று வழிபாடு செய்த தாகவும் தகவல்கள் உள்ளன.

கேரளாவிலிருந்து நடந்த குடியேற்றங்கள் மூலம் யாழ்ப்பாணம் வழியாகக் கண்ணகி வழிபாடு வந்ததற்கான வரலாற்றுச் சான்றுகளை ஆராய்ச்சியாளர்கள் குறிப்பிடுவர். கிழக்கில் கேரளத்திலிருந்து வந்த சீர்பாத குலஅரசி மூலமாக இந்தக் கண்ணகி வழிபாடு வந்த செய்தி சீர்பாத குல அரசி வரலாறு மூலமும் மதுரையில் இருந்து கி.பி. 2ஆம் நூற்றாண்டில் கிழக்குக் கரையோரம் இறக்கப்பட்ட கண்ணகி சிலைகள் மூலமும் இவ்வழிபாடு இங்கு வந்துள்ளது என்ற செய்தி அறியப்படுகிறது. ஆனால் பெரும்பாலான சிங்களத் தமிழ்ப் புலமையாளர்கள் கஜவாகு மன்னன் மூலம்தான் கண்ணகி வழிபாட்டை அறிந்தார்கள் என்ற செய்திகளைத் தருகின்றனர். பல வழிகளில் பரவிய கண்ணகி கலாச்சாரம் கஜவாகு மூலமும் வந்திருக்கிறது என்பதையும் நாம் ஏற்றுக் கொள்ள வேண்டிய ஒ ன்று.

ஈழத்தில் வடக்கு, கிழக்குவாழ் தமிழ் மக்களிடையே கண்ணகி கலாச்சாரம் என்பது இன்று வரை தொடர்ச்சியாக, உயிர்ப்புள்ள ஒரு கலாச்சாரப் பெறுமானம் உடையதாகவே உள்ளது. மட்டக்களப்பில் கண்டெடுக்கப்பட்ட கண்ணகி சிலைதான் பிரித்தானிய தொல்பொருட் காட்சிச் சாலையில் தென் ஆசியப் பகுதியின் நுழைவாயிலில் கம்பீரமாகக் காட்சியளிக்கிறது. யார் என்ன சொன்னாலும் கண்ணகி ஒட்டுமொத்தத் தமிழ் மக்களுடைய கலாச்சாரக் குறியீடாகக் கொண்டாட வேண்டியவள்.

கிழக்கில் கண்ணகி கலாச்சாரம்

கிழக்கு மாகாணத்தின் தொடக்ககால நம்பிக்கையாகக் கண்ணகி வழிபாடு இருந்திருக்கிறது என்பதற்குப் பாணம் தொடக்கம் பாலம் பட்டலாறு வரை பரவியிருக்கிற கண்ணகி கோயில்களே சாட்சியாக உள்ளன. இங்கு ஊருக்கு ஒரு கண்ணகி கோயில் உள்ளமையைக் காணலாம். பெரும்பாலும் எல்லா ஊர்களோடும் தொடர்புபட்டுக் கண்ணகி கோயில்கள் உள்ளன. உதாரணமாக மட்டக்களப்பு நகரோடு இணைந்ததாக நான்கு கண்ணகி கோயில்கள் உள்ளன. கல்லடி, மாமாங்கம், ஊறணி, நகரின் மத்தி என இந்தக் கோயில்கள் அமைகின்றன.

கண்ணகி இங்கு, கண்ணகித் தாய், கண்ணகியம்மாள், பத்தினித் தாய், பத்தினித் தெய்வம் என மக்களால் தங்களோடு ஒருவராக இணைத்துப் பார்க்கின்ற பண்பு காணப்படுகிறது. தங்களிலிருந்து கண்ணகியை இவர்கள் வேறுபடுத்திப் பார்ப்பது இல்லை. தங்களுக்குக் கண்ணகி காவல் தெய்வமாக வருடம் முழுவதும் இருப்பதாக நம்புகின்றனர்.

கிழக்கில் அமைந்துள்ள பெரும்பாலான கண்ணகி கோயில்கள் இயற்கை எழில் சூழ்ந்த இடங்களாகவே உள்ளன. பெருமரங்களும் மரங்களிடையே மிளிரும் குளக்கரையும் இக்கோயில்களுக்கு எழில் சேர்க்கின்றன.

இக்கண்ணகி கோயில்களில் பெரும்பாலானவை வருடம் முழுவதும் திறக்கப்படுவது இல்லை வைகாசிப் பௌர்ணமியை ஒட்டித் திறக்கப்படுகின்றன. அந்தப் பௌர்ணமிக்கு அடுத்து வரும் திங்கட் கிழமையில் முடிவடையும். ஏழு நாட்கள் சடங்கு. ஏழாம் நாள் பின்னிரவில் குளுத்திப் பாடலுடன் சடங்கு முடிவடையும். சில ஆலயங்கள் நான்கு நாட்கள் சடங்குடன் முடிய ஒரு சில நாட்கள்/ஒரு நாள் சடங்குடன் முடிவடைகின்றன.

செட்டிபாளையம் கண்ணகியம்மாள் கோயில் சடங்கு நான்கு நாட்களுடன் முடிவடைகிறது. கோரகல்லிமடு, பாலம் பட்டாறு, சேணையூர் சம்புக்களி, நிலாப்பாளை என்பன ஒரு இரவு ஒரு பகலோடு முடிவடைகின்ற சடங்குகளாக உள்ளன.

ஒவ்வொரு கோயிலும் தனக்கான கதையைக் கொண்டுள்ளன. அந்தக் கதைகள் வேறுபட்டதாக இருந்தாலும் எல்லாக்

கதைகளிலும் ஒரு ஒத்த தன்மையை நாம் காணலாம் தான். கண்ணகி இன்றும் மதுரையில் இருந்து வருவதாகவும் மதுரையை எரித்த என்னை இளைப்பாற்றுங்கள் நான் இந்த இடத்தில் இருக்கிறேன் எனக்குக் கோயில் கட்டிப் பொங்கலிட்டு என்னை வழிபடுங்கள் என்றும் சொல்ல அதன் பின்பே அக்கோயில்கள் உருவாக்கப்பட்டதாகவும் கதைகள் உள்ளன. எல்லாக் கோயில் களிலும் கண்ணகியைக் குளிர்வித்தல் முக்கிய ஒரு நிகழ்வாக உள்ளது.

கிழக்கில் முக்கியமான கண்ணகி கோயில்களாகப் பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

1. தம்பிலிலுவில் கண்ணகி அம்மன் கோயில்
2. காரைதீவு கண்ணகி அம்மன் கோயில்
3. பட்டி நகர் கண்ணகி அம்மன் கோயில்
4. சம்மாந்துறை கண்ணகி அம்மன் கோயில்
5. வீரமுனை கண்ணகி அம்மன் கோயில்
6. களவாஞ்சிக்குடி கண்ணகி அம்மன் கோயில்
7. கல்முனை கண்ணகி அம்மன் கோயில்
8. துறை நீலாவனை கண்ணகி அம்மன் கோயில்
9. விடத்தல் முனை கண்ணகி அம்மன் கோயில்
10. பாளந்துறா கண்ணகி அம்மன் கோயில்
11. கல்லாற்று கண்ணகி அம்மன் கோயில்
12. புன்னச்சோலை கண்ணகி அம்மன் கோயில்
13. சத்ருகொண்டான் கண்ணகி அம்மன் கோயில்
14. வாலைச்சேனை கண்ணகி அம்மன் கோயில்
15. வந்தாறு மூலை கண்ணகி அம்மன் கோயில்
16. சித்தாண்டி கண்ணகி அம்மன் கோயில்
17. கிரான் கண்ணகி அம்மன் கோயில்
18. முறகெட்டான் சேனை கண்ணகி அம்மன் கோயில்
19. செட்டிப்பாளையம் கண்ணகி அம்மன் கோயில்
20. ஆரையம்பதி கண்ணகி அம்மன் கோயில்
21. பாணம் கண்ணகி அம்மன் கோயில்

22. கோரக்கல்லிமடு கண்ணகி அம்மன் கோயில்
23. நீலாப்பளை கண்ணகி அம்மன் கோயில்
24. பாலம் போட்ட ஆறு கண்ணகி அம்மன் கோயில்
25. சேனையூர் சம்பூக்களி பத்தினி அம்மன் கோயில்
26. கன்னங்குடா கண்ணகி அம்மன் கோயில்

என வரிசைப்படுத்தலாம்.

பெரும்பாலான ஆலயங்கள் வைகாசி மாதத்தில் வருகிற பௌர்ணமியை அடுத்து வருகிற திங்கள் இரவில் இறுதி நாள் சடங்கு முடிவடைவதாக அமையும். முதல் ஏழு நாட்களும் ஒவ்வொரு வகையான சடங்குகள் நிகழ்த்தப்பட்டு இறுதி நாளில் கண்ணகியைக் குளிர்விப்பதாக இந்தச் சடங்குகளில் ஒரு வரன்முறை காணப்படுகிறது. வருடத்தில் ஏழு நாட்கள் மட்டுமே கண்ணகி கோயில்கள் திறக்கப்பட்டு பூசைகளும், சடங்குகளும் நடத்தப்படுகின்றன. ஏனைய நாட்களில் பூசைகள் நடைபெறு வதில்லை. சடங்கு அனுஷ்டானங்களும் இல்லை. ஆனால் கண்ணகி மீது பக்தி கொண்டவர்கள் ஆலயத்திற்கு வெளியே

காரைத்தீவு கண்ணகி கோயில்





காரைத்தீவு கண்ணகி கோயில்

தம்பிலுவில் கண்ணகி கோயில்



மட்டக்களப்பு நகரில் உள்ள கண்ணகி கோயில்



கிழக்கிலுள்ள கண்ணகி கோயில்

கிழக்கிலுள்ள கண்ணகி கோயில் ஒன்று

பொங்கல் இட்டுத் தங்கள் நேர்த்திக் கடன்களை நிறைவேற்றுவதும் உண்டு. இன்றைய சூழ்நிலையில் ஒரு சில கண்ணகி கோயில்களில் சமஸ்கிருதமயமாக்கலுக்கு உட்பட்டுக் கும்பாபிஷேகம் அல்லது குடமுழுக்குச் செய்யப்பட்டுத் தினப் பூசை நடைபெறும் ஆலயங்களாகவும் வருடாந்திர திருவிழாக்கள் நடைபெறும் ஆலயங்களாக்வும் மாற்றப்படுகின்றன. இத்தகைய முயற்சியும் பலத்த எதிர்ப்புக்கு மத்தியில் நடைபெற்று முடிந்திருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

ஏழு நாள் சடங்கு கண்ணகி கோயில்களில் நடைபெறும்.

1. கதவு திறத்தல்
2. எழுந்தருளப் பண்ணுதல்
3. பூசை
4. சடங்கு செய்தல்
5. கன்னிமார் வைத்தல்
6. கண்ணகை, கோவலன் கதை படித்தல்
7. உரு ஆடுதல்
8. கட்டுச் செல்லுதல்
9. கல்யாணக் கால் வெட்டுதல்
10. கல்யாணக் கால் நாட்டுதல்
11. தாலி கூறை கொண்டு வருதல்
12. கல்யாணச் சடங்கு செய்தல்
13. கும்பம் ஊர் சுற்றுதல்
14. திருக்குளுத்திப் பாடுதலும், ஆடுதலும்
15. திருக்கதவு அடைத்தல்

இச்சடங்கு முறையானது கிழக்கில் உள்ள பெரும்பாலான எல்லாக் கண்ணகி அம்மன் கோயில்களிலும் நடைமுறையில் உள்ளது.

கதவு திறத்தல் என்பது வருடத்திற்கு ஒரு முறை மட்டுமே இவ்விழா நடைபெறுகிறது என்பது குறிப்பிடத்தகுந்த ஒன்று ஆகும். வருடம் முழுவதும் பூட்டப்பட்டு இருக்கிற கதவு இச்சடங்கு காலத்திலேயே ஆகும். கதவு திறப்பதற்கான விழா அல்லது சடங்கு என்பது அந்த ஊர் முழுவதுமே இணைந்து செய்யப்படுகிற

ஒரு சடங்கு ஆகும். ஊரில் பிரசித்தமான வேறு ஒரு ஆலயத்தில் இருந்து சடங்குக்கு எரிய பொருள்கள் என்பன சேகரிக்கப்பட்டு உரிய கட்டாடியார் என்று அழைக்கப்படுகின்ற பூசகர் தலைமையில் பறை மேளம், உடுக்கு, சிலம்பு ஆகிய வாத்தியங்கள் முழங்க ஊர்வலமாக வந்து இந்தக் கதவு திறத்தல் சடங்கு நடைபெறும். கதவு திறத்தலோடு குறிக்கப்பட்ட அந்த ஊர் முழுவதும் மச்சம் சாப்பிடுதல் நிறுத்தப்பட்டு எல்லோரும் மரக்கறி சாப்பிடுகிற முறையே உள்ளது. இக்காலங்களில் பல்வேறு விதமான நோய்கள் துன்பங்களில் இருந்து கண்ணகி தங்களைக் காப்பாற்றுவாள் என்ற நம்பிக்கை மேல் ஓங்கி இருக்கும். கதவு திறத்தலோடு கண்ணகி தங்களோடு வாசம் செய்வதாகவே நம்பிக்கை கொண்டுள்ளனர். இந்த ஏழு நாட்களில் கண்ணகி விரும்பாத எந்த விஷயத்தையும் தாங்கள் செய்யக்கூடாது என்ற நம்பிக்கை இவர்களுக்கு உள்ளது. அதனால் வீடுகள், வீதிகள் முதலியவற்றைச் சுத்தமாகவும் அசுத்தங்கள், அழுக்குகள் அண்டாமல் பார்த்துக் கொள்கின்றனர்.

இச்சடங்குகளில் அடுத்து முக்கியம் பெறுவது கல்யாணச் சடங்கு ஆகும். கோவலனுக்கும் கண்ணகிக்கும் நடைபெற்ற கல்யாணமே இங்கு நிகழ்த்திக் காட்டப்படுகிறது. ஊரவர்களே இக்கல்யாணத்திற்கான ஏற்பாடுகள் எல்லாவற்றையும் செய்வர். கிழக்கு மாகாணத் தமிழகப் பண்பாட்டில் ஒரு கல்யாணத்திற்கு என்ன என்ன சடங்குகள் நடைபெறுமோ அவை எல்லாம் இந்தக் கல்யாணச் சடங்கிலும் நடைபெறும். பலகாரப் பெட்டி எடுத்து வரல், கூறை கொண்டுவருதல் என நிகழச்சிகள் ஒன்றன்பின் ஒன்றாக நடைபெறும். சடங்கின் நான்காம் நாள் கல்யாணத் திற்கான ஆயத்தங்கள் நடைபெறும். இதனில் கல்யாணக் கால் வெட்டுதல் என்பது முக்கியமான சடங்கு ஆகும். ஊரியல் அதற்கெனத் தெரிவு செய்யப்பட்ட இடத்தில் கல்யாணக் காலாகப் பூவரச மரக்கிளை வெட்டப்படுகிறது. வெட்டப்படுகின்ற பூவரசம் கிளை பூசை செய்யப்பட்டு ஊர்வலமாக மேளதாளத்துடன் கொண்டு வரப்பட்டு ஆலய முன்றிலில் கல்யாணக்கால் நடப்படும். ஐந்தாம் நாள் சடங்கு கல்யாணச் சடங்காக அமையும். இந்தக் கல்யாணச் சடங்கின்போது தங்கள் உறவினர் ஒருவரது கல்யாணத்தில் எத்தகைய உணர்வு வெளிப்பாடு இருக்குமோ அத்தகைய உணர்வு வெளிப்பாட்டைக் காணலாம். இந்த நாளில்

கிழக்கில் கண்ணகி கோயிலொன்றில் சடங்கு

கிழக்கில் கண்ணகி கோயிலொன்றில் சடங்குக் காண கூடியிருக்கும் மக்கள்

கண்ணகி சடங்கிற்கான அலங்காரம்

கண்ணகி சடங்கிற்கான அலங்காரம்

வான வேடிக்கைகள் கொண்டாட்டங்கள் என ஊர் முழுவதுமே திருவிழாக் கோலம் பூண்டிருக்கும். பல்வேறு வகையான கலை நிகழ்ச்சிகளும் ஆலய முன்றிலில் நடாத்தப்படும். கோலாட்டம், கும்மி என மகிழ்ச்சி பொங்கும். குறிப்பாக வசந்தன் ஆட்டம் இந்த நாட்களில் சிறப்பான அரங்க அளிக்கைகளாக வெளிப்படும்.

ஏழு நாள் சடங்குகளில் கடைசி நாள் நடைபெறுகின்ற ஏழாம் நாள் சடங்கு முக்கியமானது ஆகும். மதுரையை எரித்துக் கோபம் தணிந்து கொண்டதாக நம்புகின்றனர். ஏழாம் நாள் பின்னிரவில் ஆரம்பமாகின்ற திருக்குளுர்த்தி சடங்கு எட்டாம் நாள் அதிகாலையில் முடிவடைகிறது. குளுர்த்தி சடங்கில் முக்கியமாக வாழைப்பழம், வெல்லம், வெங்காயம், தயிர் என்பனவெல்லாம் கலந்து நீர் நிறைந்த குளுர்த்திப் பானையில் வைக்கப்படும். அவ்விடத்தில் குளுர்த்திப் பாடல் பாடுவோர் குளுர்த்தி ஏட்டுக்குப் பூசை செய்து குளுர்த்திப் பாடலைப் பாடத் தொடங்குவர். பாடுகிறபோது குளுர்த்திப்பானையில் உள் நீர் கண்ணகி அம்மனைத் தொழுகின்றவர்களுக்குத் தீர்த்தமாக வழங்கப்படும். குளுர்த்திப் பாடல் காப்புப் பாடலுடன் தொடங்கி வாழி பாடலுடன் முடிவடையும். மொத்தம் 92 பாடல்கள் இதிலுள்ளன. கண்ணகியுடைய கதையை மிகச் சுருக்கமாகக் கூறிக் கண்ணகியைக் குளிர்விப்பதாக இப்பாடல்கள் அமைக்கப் பட்டிருக்கின்றன. பல பாடல்கள் குளிர்ந்தருள்வாய் என்று முடிவடைகின்றன. உதாரணமாக, பின்வரும் பாடல்களைக் குறிப்பிடலாம்.

காளி புடைசூழல் காவிரிப்பூம் பட்டினத்தில்
வாழ்வணிகர் தங்குலத்து மாதேகு ளிர்ந்தருள்வாய்

இளவேம்பின் கீழே இருந்து வருந்தாமல்
வளமை பெரிதுடைய மாதேகு ளிர்ந்தருள்வாய்

மீகாம னுக்கு மிகுத்த வரங்கொடுத்து
நாகமணி வாங்க நலந்தாய்கு ளிர்ந்தருள்வாய்

சொற்பெரிய மாநகர் துய்யகுலத் தேயுதித்து
சிற்பமணி தளாணிந்த தாயேகு ளிர்ந்தருள்வாய்

எண்ணியமுன் எண்ணம் இயல்வணிகர் கோவலற்காய்
வுன்னிவழி நடந்த மாதேகு ளிர்ந்தருள்வாய்

மாதவிக்குப் பொன்தோற்று வாழ்வணிகர் தன்னுடனே
காதலித்துப் பின்போன கன்னிகு ளிர்ந்தருள்வாய்

குளுர்த்திப் பாடல் பாடிமுடிந்ததும் அந்த வருடத்திற்கான இறுதிப் பூசை நடைபெறும். இப்பூசையின் போது பலர் கண்ணகி தங்களில் உருக்கொண்டதாக ஆடுவர். தங்களைக் கண்ணகியாகவே பாவனை செய்து ஆட்டக்கோலங்களை வெளிப்படுத்துவர். இதில் ஆண்கள் பெண்கள் இரு பாலருமே ஆடுவர். சிலர் கையில் சிலம்போடும் கண்ணகியின் கோபத்தை வெளிப்படுத்துவர். கண்ணகியின் மீது பக்தி கொண்டவர்கள் தங்களுக்குக் கண்ணகி ஏதாவது சொல்ல மாட்டாளா என ஏங்குவர். கண்ணகி உருக் கொண்டவர்கள் வரப்போகிற நன்மை தீமைகளைப் பற்றி வேண்டுகிறவர்களுக்குச் சொல்வார்கள். இது அவர்களைத் திருப்திப்படுத்துவதாக அமையும். இறுதியில் பாடப்பட்ட குளுர்த்திப் பாடல்களினால் குளிர்ச்சி அடைந்த கண்ணகி மீண்டும் அடுத்த வருடம் வருவாள் என்ற நம்பிக்கையோடு சடங்குகள் நிறைவடையும்.

சடங்குகள் நடைபெறுகின்ற ஏழு நாட்களிலுமே கூத்துக்கள் ஆடப்படுவது வழக்கம். அதுபோலக் கண்ணகி வழக்குரை என்ற காவியம் படிக்கப்படுகின்ற மரபு காணப்படுகிறது. கூத்துக்கள் கண்ணகி கோயில்களில் அமைக்கப்படுகின்ற வட்டக்களரியில் ஆடப்படும்.

கிழக்கு மாகாணத்தில் ஆடப்படுகின்ற கண்ணகி கோயில்களில் ஆடப்படுகின்ற கூத்துகள் கண்ணகி கதையாக இருப்பதில்லை, பெரும்பாலும் மகாபாரதம், இராமணத்தை ஒட்டியே ஆடப்படுகின்றன. கிழக்கு மண்ணுக்கே தனித்துவமான வடமோடி, தென்மோடிக் கூத்துக்களே ஆடுவது மரபாகும்.

சடங்குக் காலங்களில் பல்வேறு விதமான நேர்த்திக் கடன்கள் நிறைவேற்றப்படுகின்றன. பால் சொம்பு எடுத்தல், காவடி என இந்நேர் கடன்கள் அமையும். இதனைவிட வெள்ளியிலான பொருட்கள் தங்கத்திலான பொருட்கள், ஆடு, மாடு, கோழி எனக் காணிக்கைப் பொருட்கள் ஆலயங்களில் கையளிக்கப்படுகின்றன.

ஏழு நாட்கள் சடங்குகளிலும் இந்த மக்கள் தங்களை மீட்டுருவாக்கம் செய்து கொள்வதற்காகவே எண்ணவேண்டி உள்ளது. வருடம் முழுவதும் தாங்கள் பட்ட கஷ்டங்களுக்கான வடிகால்களை இச்சடங்குகள் மூலம் பெற்றுக் கொள்வார்கள் போலத் தெரிகிறது. கண்ணகி இவர்கள் உள்ளே ஆழமாக

வேரூன்றி இருக்கும் ஒரு நம்பிக்கைப் பொருளாக உள்ளாள். என்ன துன்பம் வரினும் கண்ணகி காப்பாற்றுவாள் என்ற நம்பிக்கை இவர்களிடம் உள்ளது. கிழக்கு மாகாணத்தில் வேறு எந்தத் தெய்வத்திற்கும் இல்லாத மதிப்பும் மரியாதையும் கண்ணகிக்கு உண்டு.

கண்ணகி இவர்களது காவல் தெய்வமாகவே பார்க்கப்படு கிறாள். ஒரு நாள் சடங்கு நடைபெறுகின்ற கண்ணகி கோயில்கள் பெரும்பாலும் காடுகள் அண்டிய பிரதேசத்திலேயே காணப்படு கின்றன. ஊர் எல்லையில் இருந்து காவல் காப்பவளாகக் கண்ணகி போற்றப்படுகிறாள். கண்ணகி வேறு தாங்கள் வேறு என்று இவர்கள் பிரித்துப் பார்த்தது இல்லை.

சில இடங்களில் பல வருடங்களுக்கு முன் கண்ணகி கோயில்களில் உயிர்ப் பலி கொடுக்கின்ற வழக்கம் இருந்துள்ளது. ஆடு, கோழி போன்ற உயிர்களைப் பலிகொடுத்து இந்த வழிபாடு நிகழ்த்தப்பட்டமைக்கான சான்று உள்ளது. குறிப்பாகச் சேனையூர் சம்புக்களி பத்தினி அம்மன் கோயிலில் இவ்வழக்கம் இருந்து வந்துள்ளதையும் பின்னாளில் அந்த வழக்கு ஒழிந்துபோனமையும் அறிய முடிகிறது.

வயல் செய்கையும் கண்ணகி வழிபாடும் முக்கியம் பெறுகின்றன. குளக்கட்டுப் பத்தினி என்ற மரபு இங்குக் காணப்படுகிறது. வயல் செய்கைக்குப் பயன்படுகின்ற குளங் களையும் பாதுகாக்கிற தெய்வமாகக் கண்ணகி மதிக்கப்படு கின்றாள். வருடந்தோறும் வேளாண்மை செய்கை முடிவடைந்த உடன் குளக்கட்டில் உள்ள பத்தினிக்கு மடை வைத்து வழிபடுவது வழக்கமாக உள்ளது. இந்த மடையில் பச்சைப்பழம், பச்சைப் பாக்கு, பச்சை வெற்றிலை என்பனவே படையல் பொருட்களாக இருக்கும். இந்த வழிப்பாட்டு முறையைப் பார்க்கிற போது இன்று நாம் உரத்துப் பேசுகின்ற சூழலியலோடு இது சார்ந்துள்ளது போலத் தெரிகிறது. அதாவது இதனை ஒரு சூழலியல் குறியீடாகக் கூடக் கொள்ளலாம். ஏனெனில் ஊருக்குப் பசுமையைக் கொடுக்கக்கூடிய பசுவையும், வயலையும் பாதுகாப்பவளாகக் கண்ணகி கருதப்படுகிறாள்.

ஈழத்தில் கண்ணகி வழிபாடு பற்றிப் பேசுகிற போது மட்டக் களப்பு கண்ணகி கோயில்களில் படிக்கப்படுகின்ற ஊர்

சுற்றுக் காவியம் பின்வரும் விவ்ரங்களைப் பாடல்கள் மூலம் வெளிப்படுத்துகிறது.

அங்கண மைக்கடவை காரேறு நகர்எருவில்
ஆனதம் பிலுவிலோடு வீரமுனை தன்னிலும்
பங்குசேர் பட்டிமேடு உயர்செட்டி பாளையம்
வந்தாறு முறையொடு மற்றுமுள பதியும்
திங்கள்நேர் ஒத்தநுதல் எங்குமி திற்பெரிய
தெய்வீக மென்னவிளை யாடியெப் பொழுதும்
எங்குமாய் நிற்குமொரு பங்கமா தின்பெருமை
எந்தன் விற்கனவில் என்றுமக லாதே

பத்தியொடு தொழுவோர்கள் இடரகல வருள்கொண்டு
பண்டுசெறி தம்பிலுவில் பட்டிமா நகரம்
மொய்த்தபுகழ் வீரமுனை கல்முனைகல் லாறு
மகிழூர்செட்டி பாளையம்எருவில்மண் முனையூரும்
வைத்தமகி ழடிச்சோலை முதலைக் குடா
வளமைவரு புதுக்குடி நகரமொடு வந்தாறு முலை
இத்தனை தலங்களிலும் அங்கண மைக்கடவை
எனவந்து காரைநகர் இனி திருந்தவளே.

பட்டிநகர் தம்பிலுவில் காரைநகர் வீரமுனை
பவிசுபெறு கல்முனைகல் லாறுமகி ழூரெருவில்
செட்டிபா ளையம்புதுக் குடியிருப்பு மண்முனை
செல்வமுத வனைக்குடா கொக்கட்டிச் சோலை
அட்டதிக் கும்புகழ் வந்தாறு மூலை
அன்பான சிற்றுண்டி நகரதனில் உறையும்
வட்டவப் பூங்குதல் மண்முனைக் கண்ணகையை
மனதினில் நினைக்கவினை மாறியோ டிடுமே

ஈழத்தமிழ் மக்களிடையே எழுந்த கண்ணகி இலக்கியங்கள்

கண்ணகி கலாச்சாரத்தின் நீட்சியாகி ஈழத்தமிழ் மக்களிடையே கண்ணகியொடு தொடர்புபட்ட பல்வேறு இலக்கியக்ஙள் எழுந்துள்ளன. தமிழல் சிலப்பதிகாரம் மிக முக்கியமான காப்பியமாக வெளிப்படுகிற அதேவேளை அதற் கடுத்து கண்ணகி பற்றிய பெருநூலாக ஈழத்தில் எழுந்த கண்ணகி வழக்குரை உள்ளது. சிலப்பதிகாரம் மானுடப் பெண்ணை தெய்வமாகக் காட்ட வழக்குரை காதை தெய்வப் பெண்ணை மானிடப் பெண்ணைக் காட்டி நிற்கிறது.

மொத்தமாக 2226 செய்யுட்களடன் வரும் பெறு காதை கப்பல் வைத்த காதை, கடலோட்டு காதை, கலியாண காதை, மாதவி அரங்கேற்று காதை, பொன்னுக்கு மறிப்புக் காதை, வழநடை காதை, அடைக்கலக் காதை, கொலைக்களக்காதை, வழக்குரைத்த காதை குளிர்ச்சிக்காதை என பதினொரு காதைகளுடன் முடிவடைகிறது.

வரம்பெறு காதை கண்ணகியின் பூர்வீகம் பற்றி புராண ஐதீக மரபுகளுடன் இணைத்துச் செல்கிறது. கோவலனார் பிறந்த கதை, அம்மன் பிறந்த கதை என இரண்டு பகுதிகளைக் கொண்ட இக்தையில் கோவலன் பிறப்புப் பற்றி மாசாத்துவானுக்கு பிறந்த மகவு என சிலப்பதிகாரத்தைப் போலவே பேசுகிறது. ஆனால் கண்ணகி பிறப்பை அம்மன் பிறந்த கதை என கண்ணகியை பிறப்பிலேயே அம்மனாக சித்தரித்துச் சொல்லப்படுகிறது.

கப்பல் வைத்த காதை, கடலோட்டு காதை ஆகிய இரண்டு காதைகளும் சிலப்பதிகாரத்திலிருந்த வேறுபட்டு சோழநாடு ஈழநாடு மீகாமற், வெடியரசன் என புதிய பாடல் களங்களையும் புதிய பாத்திரங்களையும் அறிமுகப்படுத்தி சம்புலப்புனைவுகளின் மூலம் கண்ணகியன் காற்சிலம்பிற் மணிப்பரல்கள் பற்றியதான சிறப்புக்களைக் கூறுவதோடு இக்காப்பியத்தைப் பாடிய புலவர் தான் சார்ந்த சாதியினரின் பெருமையை விளக்க இந்தச் செய்திகளை செய்தரோ என ஐயுற வேண்டியுள்ளது. ஏனெனில் இங்கு கோவலன் பற்றியதான செய்திகள் அத்தகைய ஐயத்தை

ஏற்படுத்துகின்றன. அதாவது குருகுலத்தார் முக்குவர் ஆகிய இரண்டு சாதியினரின் வரலாற்றுச் சிறப்பினை மறைமுகமாக கூறுகின்ற தன்மையினை அவதானிக்கமுடிகிறது. முக்குக வர்ண குல கரையாரும் இப்பகுதிகளில் சிறப்பிக்கப்படுகின்றனர்.

வழக்குரைக் காதையில் வருகின்ற அணிகலன்கள் பற்றிய செய்திகள் மட்டக்களவில் புழக்கத்திலுள்ள பழமையான அணிகலன்களை பற்றிய செய்திகள் மட்டக்களப்பில் புழக்கத்தில் உள்ள பழமையான அணிகலன்கள் பற்றிய செய்திகளைத் தருகிறது. கொப்புவாளி, மேல்வாளி, உட்கட்டு காறை, கைக்கட்டு, தண்டை, காலாழி, பீலி முதலிய நகைகள் கிழக்கு கிராமங்களில் அணிகின்ற வழக்கம் காணப்படுகின்றது.

மாதவி அரங்கேற்று காதை கிழக்கு மாகாணத்தில் தனித்துவமாக பேசப்படுகின்ற கூத்து மரபின் பண்புகள் வெளிப் படும் படியாக மாதவியின் ஆட்டச்சிறப்புப் பேசப்படுகிறது. வடமோடி கூத்தின் வருகின்ற பாத்திரங்களை கூறுகின்ற தன் மேம்பாட்டுரைகள் மாதவியின் பேச்சில் வெளிப்படுகிறது. கூத்துத்தாளக் கட்டுக்கள் பல இங்கு நேரடியாகவே பயன்படுத்தப் படுகிறது.

மாதவி அரங்கேற்று காதையில் வருகின்ற பின்வரும் பாடல் பகுதிகளை உதாரணங்களாக கொள்ளமுடியும்.

தத்தித் தோம் ததிங்கிண தோம்
    தக்குண தக்குண தக்கிண தோம்
தித்தத் திகுதிகு தெங்கிட தங்கிட
    செங்கிட செங்கிட தாகிட தோம்

ஒற்றைச் சுற்றுடன் உய்ப்ப முழாவோடு
    உற்ற இடக்கையுடன் விதமும்
வைத்துச் சித்திர வுற்ற நடிப்பொடு
    மாதவி சோழன் முன்னொடிகளை

(அரங்கேற்று காதை 283)

தக்க கெக்கி றீங்கு தடீங்கு
    தாத திங்கிண தரிகிணதோ
திக்குட திக்குட திமிகிட திக்கு
    திக்கிண செககிண செககிணகோ

தொக்குட தொக்குட தோ தொக்கிட
கொகிட கொகிட கோவெனவே
கர்ப்பமதாடின கோலமதென்னச்
சுற்றியே மாதவி ஆடினளே
(அரங்கேற்று காதை 284)

திதத்தித்தோம் ததிங்கிணதோம்
ததிங்கிணத் திகண திகணத் தோம்
திகு திகு திகு திகு திகு திகு திகு திகு
செங்கிட நங்கிட தெகிண தோம்

ஒற்றைச் சுற்றாம் ஒலிப்பாம் உரவொடு
ஒற்றத் தமையுடன் விதமும்
வைத்துச் சித்திரமொற்ற மடிப்பொடு
மாதவி சோழன் முன்னொடினளே
(அரங்கேற்று காதை 282)

தகதக திகுதிகு திமிக திமிகிடதாந்
தளங்கு தளங்கு தளங்கு திமித தோம்
திகுதக திகுதக திக்குட தரிகிட
திக்குண தகுசெக செக்கிண தோம்

தொகுதொகு நகுநகு தொங்கிட நங்கிட
தோதகு தத்தியென சவதம்
வபைல வரியதோர் தாளவடிப்படி
மாதவி சோழன் முன்னொடினளே
(அரங்கேற்று காதை 253)

இப்பாடல்களில் பயன்படுத்தப்படுகின்ற மாதவி ஆட்டத்தோடு தொடர்ப்புட்டு நிற்கிற தாளக்கூடுகள் இன்னும் மட்டக்களப்பு வடமோடி ஆட்டங்களில் பயன்படுத்தப்படுகின்றன.

மட்டக்களப்பிலே பேச்சுவழக்கிலே உள்ள சொற்கள் பல கையாளப்படுகின்றன உதாரணமாக

விடுப்புப் பண்ணுதல்
பணிவிடை
அடசுதல்
வாண்டிச்சைப் பட்டிருத்தல்
கழிசறை
அடிச்செருப்பினார்ப்போல
கிளப்பிவிட்டு

ஆகிய சொற்களைக் குறிப்பிடலாம்.

சிலப்பதிகாரத்தை கற்றுணர்ந்த ஒரு புலவரே இந்த நூலை யாத்திருக்க வேண்டும். அதேவேளை மட்டக்களப்பின் தமிழர் பண்பாட்டின் கூறுகளின் வெளிப்பாடுகளை நாம் இந்நூலில் பல இடங்களில் பரவிக்கிடப்பதால் மட்டக்களப்பைச் சேர்ந்த ஒருவரே இதனை இயற்றியிருக்க வேண்டும். அத்தோடு பழமையான மரபுகளின் தொடர்ச்சியை வெளிப்படுத்துவதோடு மட்டக் களப்பின் பூர்விகம் பற்றிய தகவல்களை அறியக் கூடிய வெளிச்சங்களையும் தருகிறது.

சிலப்பதிகாரம் சிலம்பை முதன்மைப்படுத்தி சிலப்பதிகாரம் என்ற பெயரைத் தாங்கி நிக்க கண்ணகி வழக்குரைத்த பகுதியை முதன்மைப்படுத்தி கண்ணகி வழக்குரைச் சிறப்புப் பெறுகிறது.

சிலப்பதிகாரம் நீர்ப்படைக் காதையின் மூலம் கண்ணகிக்கு விழாவெடுத்து கோயில் கட்டி வழிபடுதலோடு முடிவடைய கண்ணகி வழக்குரை கண்ணகியை பத்தினி தெய்வமாக போற்றி இவள் கோபத்தை தணிவிப்பதாக குளிர்ச்சிக் காதையுடன் முடிகிறது.

சில குளிர்ச்சிக் காதைப் பாடல்கள் பின்வருமாறு அமையும்.

அமுதுண்டு பூசியபின் ஆயிழையை இடைச்சியர்கள்
குமுதவாய் தான் திறந்து குளிர்ச்சி மொழி கூறியபின்
திமிதியென மழை பொழியத் தேசமெல்லாம் மிகத்
தழைக்க
மழை வேணும் என் தாயே மதுரைநகர் தழைக்க
வென்றார்

என்றவர்கள் கொன்னதற்காய் ஏந்திழையார்
மனந்திரும்பிக்
குன்றெடுத்து மழை காத்த கோவிந்தர்க்கு இளையாளும்
மன்றயரும் விழியாலே வந்துதித்த கண்ணகையார்
அன்றுமனந்தாள் திரும்பி அருள்மாரி சொரிந்ததுவே
(கண்ணகி வழக்குறை குளிர்ச்சிக் காதை 26-27 பாடல்கள்)

தழைத்துலகங்கள் தெளிந்தது அங்கு
தளர்கொள்ளுகின்ற விலங்கு நிலங்கள்
குளிர்ந்துலகங்கள் தழைத்திடவென்று
குளிர்ந்திடிமாரி சொரிந்ததுவே

செழுந்திவலைக்கரை மாறனூர் தன்னிற்
செந்நெல்களும் விளைவானதுமே
பொழிந்திடு மாரியில் உலகமதேழும்
பொங்கி மகத்தழை வானதுமே
(கண்ணகி வழக்குறை குளிர்ச்சிக் காதை 28-29 பாடல்)

மாதாவே நீயிரங்கி மக்களுக்கு வேளையைத் தா
மூதேவி போயகல மொய்குழலே வேளையைத் தா
சீதேவி வந்த நிற்க திருந்திழையே வேளையைத் தா
பார்தார விந்தமுற்றோம் பத்தினியே வேளையைத்தா
(கண்ணகி வழக்குறை குளிர்ச்சிக் காதை 48ஆம் பாடல்)

'கண்ணகி வழக்குரை', 'வழக்குரை', 'வழக்குரை காதை' எனும் பெயர்களால் பொதுமக்களால் வழக்கில் உள்ள இந்த இலக்கியம் மட்டக்களப்பின் ஊர்கள்தோறும் உள்ள கண்ணகை கோயில்களில் சடங்கு நடைபெறும் காலங்களில் தொடர்ச்சியாக படிக்கப் பெறுகின்ற கண்ணகி கதை யாழ்ப்பாணப் பகுதயில் உள்ள கண்ணகி கோயில்களிலும் இக்கதை படிக்கப்பட்டாலும் மட்டக்களப்பில் படிக்கப்படுகின்ற கண்ணகி வழக்குரை அவற்றிலிருந்து வேறுபடுகிறது.

கண்ணகி வழக்குரையைத் தவிர மட்டக்களப்பில் கண்ணகியோடு தொடர்புடைய இலக்கியங்கள் வழக்கில் உள்ளன. அவை கண்ணகி வசந்தன் பாடல்கள், குளுத்திப் பாடல் உடுக்குச் சிந்து, அல்லது ஊர்ச்சுற்றுக் காவியம், மழைக்காவியம், கண்ணகி அம்மன் ஊஞ்சல் என்பனவாகும். இவற்றை விட ஒவ்வொரு ஊரில் அமைந்திருக்கின்ற கண்ணகி ஏற்றி தனியான ஊஞ்சல் பாடல்களும் காவியங்களும் இயற்றப்பட்டுள்ளமையும் இங்கு குறிப்படத்தக்கது.

கண்ணகி வழக்குரையின் கலியாணக் காதை

விருத்தம்

சீர்கொண்ட பாரதம ருப்பொன்றி னாலே
சிகரவரை தனில்எழுது சித்திரமா முகிலே
பார்கொண்ட மாதுபயி லாயமுரு கோனே
பதினாலு புவனமும் பணியுமைங் கரனே
ஏர்கொண்ட வணிகேசன் மாசாத்தார் கோவலர்
இயல்மண முடித்ததை இன்புட னுரைக்கக்

கார்கொண்ட வீரமுள விகடதட மும்மதக்
கயமுக னேவந்து காத்தருள்செய் வாயே 1

செவ்வாளை தாவுவயல் சூழ்செந்தி வேலோனே
தெய்வானை கேள்வனே உருவாறு முகனே
மைவார் தடங்குறவர் சேரிதனி லேயன்று
வாழ்கின்ற வேங்கையுரு வானமுரு கோனே
மெய்யான் வணிகேசன் மாசாத்தார் கோவலர்
வியன்மண முடித்தகதை விரைவுடன் உரைக்க
ஐயா திருக்கதிரை யம்பதி யமர்ந்துவாழ்
அரியவே லாயுதா அடியேன்முன் னுதவாய் 2

முன்னுலக முண்டவர் தமக்கரிய முகிலே
முத்திக்கு வித்தான் முழுமுதற் பொருளே
மன்னுகடல் தஞ்சையமு தாகஉண் டவனே
மன்றினி லேநின்று நடமாடு சிவனே
கன்னிகரில் லாதவணி கேசர்கோ வலனார்
தமதுகலி யாணமது தாமுரைத் திடவே
தென்னவன்முன் னேநரிப ரிக்குதவு சிவனே
சீரான சொல்லுகந் தாய்வந் தருள்வாய் 3

நடை

ஆராயும் நாவலர்க்கு அரும்பொருள்சேர் மாசாத்தார்
சீராருங் கோவலர்க்கு இனதிருக்கச் செய்யிழையாம்
ஏராருங் கண்ணகை யினிதுமண முடித்த கதை
பாரோர்முன் உரைத்திடுவேன் பரிவினுடன் கேட்டருள்வீர் 4

அருள்கொண்ட கிரியதனில் ஆனதொரு பெருந்தேனைப்
பொருள்கொடை வினைப்பயனாற் போலுமிகக் கால்முடவன்
இருள்கொண்ட தனது மனத்திரும்பசியைத் தீர்க்கவென்று
மருள்கொண்டு கைநீட்டும் வண்மைதனக் கொக்குமிதே 5

கொக்கினங்கள் அன்னமுடன் கூண்டிருக்கும் தன்மையொக்கும்
தக்ககடல் தன்னுடனே தடங்கொள்வாலி சொல்வதொக்கும்
மிக்கதமிழ் நாவலர்முன் வெள்காதே யானொருவன்
இக்கதையை யானுரைக்க எண்ணுகின்ற வண்ணமிதே. 6

வண்ணமிகு தன்குழவி மதலைமொழி தனைவளர்த்தோன்
எண்ணமுடன் பிரியமுற்றங் கனுதினமுங் கேட்கையினால்

திண்ணமுட னானுரைத்தேன் சிறப்பிதனை நானறியேன்
எண்ணமிதஞ் செந்தமிழோர் இதழாதீர் இக்கதையை 7

இகழாத படிசிவனை யிருநிலத்தில் தூதுகொண்டோன்
புகழாரும் பூவையர்கோன் புலவர்திறல் மறைவாணன்
மகிழ்வாக இக்கதையை மானிலத்தோர் தங்கள்முன்னே
முகிழ்மலைவெண் டாமரையாள் முதிர்பனுவ வாயுரைப்பான் 8

சிந்து

முதிரா முலைச்சியர்கள் மாமதன ராசன்
மூவரா லுந்தேடற் கரியமுக் கண்ணன்
கதிரோன் பகற்போக வொருதூது விட்டே
காசினி தனிற்புகழ் படைத்தகாங் கேசன்
மதுராசர் தன்வருண சொற்பிற தாபன்
வண்டமிழ தெரிந்துகவி பாமாலை யாலே
சதிராக இக்கதைத னைக்கட் டுரைத்தான்
தமிழாகக் கொண்டான் தனிமைதீர்த் தானே. 9

ஆனபுக ழாபரண மேன்மைமீ காமன்
அடலாகும் நாகமணி யதுகொணர்ந் துய்ப்ப
வானவர்கள் கோவென விளங்குமா னாகர்
மானில மதித்திட மனப்பிரிய முற்றுக்
கானென வளர்ந்தகுழல் மாதுகன் னகைதன்
கடிமண மினிதுநிறை வேறவே யெண்ணி
மானமுட னக்கசா லைதனை அழைத்து
வம்மினென என்றுஓர் ஆளை விடுத்தான். 10

விடுத்துரை செய்திட அக்கசா லைமன்னன்
வீறான பணிமுட் டேடுத்துடன் கட்டி
கடித்தவிசை யிற்கடிதெ ழுதுமடினை வாசற்
கடிதாக வந்தங் கடிதாள் வணங்கற்
தொடுத்தகண் மாளர்தெரு விட்டுவணி கேசர்
தொக்கதெரு வூடுசென் றக்கணந் தன்னில்
அடுத்தகுண ரெட்ணபொன் வைத்தமா னாக
ராடலழ கியகூட மதனில்வந் தனனே. 11

வெண்பா

ஆடுவார் கோடி அவதரிப்பார் நாற்கோடி
பாடுவா ரெங்கும் பலகோடி - கோடியே
நீடூழி காலமட்டும் நேரிழையுங் கோவலரு
மன்னி விளங்கிடுக மற்றும். 62

ஆங்குநின்ற கோவலற்கும் அழகுதிகழ் கண்ணகைக்கும்
தாங்குபுகழ் சீதனமுந் தாளெழுதி - ஓங்கவென
வள்ளலெனும் மானாகர் மருகனெனுங் கோவலற்கு
உள்ளபடி உவந்தார் தான். 63

கூந்தல் வெளுத்தாலும் கூறு மழகுபணிந்
தேந்துமுலை ஆலிலைமேல் வீழ்ந்தாலும்-சேர்ந்துடனே
என்னாளுங் கண்ணகையார் ஈடேற இன்பமுற்று
மன்னாக வாழும் மகிழ்ந்து 64

கலியாணக் காதை முற்றும்

சிங்களவர் மத்தியில் கண்ணகி கலாச்சாரம்

ஈழத்தில் வடக்குக் கிழக்குப் பிரதேசவாழ் தமிழ் மக்கள் மத்தியில் கண்ணகி வழிபாடும் அதனோடு இணைந்த கலாச்சார மரபுகளும் தொடர்ச்சியாகப் பயில்நிலையில் உள்ளன. சிங்களவர்கள் கண்ணகியைப் பத்தினித் தெய்யோ என்று அழைக்கின்றனர். கி.பி. 112 தொடக்கம் 134 வரை அனுராதபுரத்தைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்த கஜபாகு என்கிற மன்னனே கண்ணகி வழிபாட்டை சிங்கள மக்கள் மத்தியில் பரப்பியதாக அவர்கள் மத்தியில் உள்ள நம்பிக்கைகள், கதைகள் கூறுகின்றன. பத்தினி வழிபாடு சிங்களக் கிராமங்களில் இன்று வரை காணப்படுகிறது. பௌத்தர்களின் பெண் தெய்வமாகச் சித்திரிக்கப்பட்டு வழிபடுவது இங்கு குறிப்பிடத்தக்கதாகும். பெரும்பாலான பௌத்தத் தேவாலயங்களுக்கு அண்மையில் பத்தினி வழிபாட்டிற்கு உரிய சின்னங்கள் காணப்படுகின்றன. தென் இந்தியாவில் இருந்தே இந்த வழிபாட்டுமுறை வந்ததாக இவர்கள் நம்புகிறார்கள்.

சிலப்பதிகாரம் என்னும் தமிழ்க் காப்பியத்தின் ஊடாகவே கண்ணகி பற்றிய வரலாற்றை தாம் அறிய முடிந்ததாகவும் இவர்கள் நம்புகின்றனர். சிங்களவர்கள் மத்தியில் பத்தினி ஒரு அவதாரமாகக் கருதப்படுகிறாள். ஏழு முறை எடுத்த பிறப்புக்களின் ஊடாகப் பத்தினியின் அவதாரத் தன்மை இங்குப் புனிதமானதாகப் போற்றப்படுகிறது. நீரிலிருந்தும் யானையிலிருந்தும் மலரிலிருந்தும் பாறையிலிருந்தும் நெருப்பிலிருந்தும் துணியிலிருந்தும் மாம்பழத்திலிருந்தும் இவளுடைய அவதாரங்கள் பேசப்படுகின்றன.

தமிழிலும், ஈழத்தவர்கள் மத்தியிலும் கண்ணகி மாங்கனியிலிருந்து பிறந்ததாக ஒரு நம்பிக்கை உண்டு. சிங்களத்தில் சத்பத்தினி எனக் கண்ணகி அழைக்கப்படுகிறாள். கண்ணகி-கோவலன் பற்றியதான கதைகள் சிங்கள மக்கள் இடையில் வாய்மொழி மரபாகவே வழக்கில் உள்ளன. சிங்கள மக்கள் மத்தியில் பிரபலமான கதைகள் ஊடாகக் கண்ணகியின் வரலாறு

அறியப்பட்டுள்ளது. குறிப்பாக வயந்த மாலா, பத்தினி ஹெல, இலங்கு ஹெல, பிலங்க ஹெல முதலான கிராமிய இலக்கியங்கள் வழக்கில் உள்ளன. பௌத்த மக்களின் தங்களுடைய வழிபாட்டு முறைகளில் பத்தினியை மிக முக்கியமான நோய்களைத் தீர்க்கும் தெய்வமாகக் கருதுகின்றனர். குறிப்பாகச் சின்னம்மை, பெரியம்மை, பல்வேறு விதமான தொற்று நோய்கள் என்பனவற்றை நீக்கக்கூடிய சக்தி கண்ணியமான பத்தினியிடம் உண்டு என இவர்கள் நம்புகின்றனர். இந்த நோய்களிலிருந்து நீங்கிக் கொள்வதற்கு நேர்த்திக் கடன்களை வைத்து வழிபடு கின்றனர். குறிப்பாக இந்த நோய்களிலிருந்து விடுபட்டமைக்காகக் காணிக்கையாகத் தங்கள் தோட்டங்களிலும் வீடுகளிலும் பெறப்பட்ட முதல் கனிகளைக் கொடுக்கின்றனர்.

பெரும்பாலான சடங்குகள் பத்தினி தெய்வத்தை அடிப்படையாக வைத்தே சிங்களக் கிராமங்களில் நிகழ்த்தப் படுகின்றன. இலக்குமி, சரஸ்வதி, காளி முதலிய பெண் தெய்வங்களை வழிபடும் போது இந்து தெய்வங்களாகவே வழிபடுகின்றனர். ஆனால் பத்தினியை மாத்திரம் பௌத்த நெறிமுறைகளுக்கு உட்பட்ட தெய்வமாக வழிபடுகின்றனர். குறிப்பாக, கம்மடுவச் சடங்கு அறுவடையின் பின்பு அந்த அறுவடையைப் பத்தினிக்குக் காணிக்கையாக்குவதாகவே அமைகிறது.

இதைப்போலவே ஏனைய பல சடங்குகள் பத்தினி தெய்வத்தை அடிப்படையாக வைத்தே நிகழ்த்தப்படுகின்றன.

மிகப் பிரபல்யமான பத்தினி கோயில் கொழும்பிலிருந்து 20 கி.மி. தொலைவிலுள்ள 'நவகமுவ' பிரதேசத்தில் அமைந்துள்ளது. இதை முதலாம் ராஜசிங்கன் அமைத்ததாகச் சொல்வார்கள். இதனைவிடக் கண்டியில் உள்ள தலதா மாளிகைக்கு அருகாமையும் மிகப் பிரசித்தமான பத்தினி கோயில் உள்ளது. கதிர்காமத்திலும் கண்ணகிக்குக் கோயில் உள்ளது. சிங்களவர்கள் மத்தியில் பத்தினி வழிபாடோடு சேர்ந்து பல்வேறு விதமான விளையாட்டு நிகழ்ச்சிகளும் பத்தினியை மகிழ்விப்பதற்காக நடத்தப்படுகின்றன.

சிங்கள மக்களிடையே உள்ள கண்ணகி இலக்கியங்கள்

கயபாகு அல்லது கஜபாகு காலத்திலிருந்து சிங்கள மக்களிடையே 'பத்தினித் தெய்யோ' என்ற பெயரில் கண்ணகி வழிபாடு முக்கியமான கிராமியப் பௌத்த வழிபாட்டோடு இணைந்த ஒரு முறையாக வளர்ந்து வந்துள்ளது. அதன் வெளிப்பாடாகப் பல சிங்களமொழி மரபிலான பத்தினி பற்றிய கதைகள் பெருவழக்காகச் சிங்கள மக்களிடையே நிலவி வருகிறது.

வயந்திமாலா

சிங்களமொழி இலக்கியமாகப் பேணப்பட்ட பத்தினி கதைகள் கோட்டை காலத்தில் எழுத்து வடிவிலான இலக்கியங் களாகின. அவற்றில் 'வயந்திமாலா கதை' எனப்படும். பத்தினி கதை முதல் எழுத்துருப்பெற்ற இலக்கியமாக உள்ளது. இதில் 119 செய்யுட்கள் உள்ளன. கோவலன் மாதவியிடமிருந்து பிரிந்து கண்ணகியை அடையும் வரையிலான கதையை இது கூறுகிறது. இதன் ஆசிரியர் சிங்களக் கவிஞரான விசாகம திரி என்பவராகும்.

வயந்திமாலா கவிநயம், மாதவியின் நடனத்தைச் சிறப்பித்துக் கூறுகிறது. மாதேவி என மாதவி அழைக்கப்படுகிறாள். மாதேவி எட்டுவித நடனக் கலைகளைப் பயின்றாள். சோழமன்னர் அவள் நடனத்தைப் பாராட்டிப் பொற்கொடி ஒன்றைப் பரிசாகக் கொடுக்க அதனை விற்று வரும்படி வயந்திமாலையை அனுப்ப அந்த மாலையை வாங்கிய பாளங்கன் (கோவலன்) மாதேவியிடம் வந்து அவளோடு இன்பமுற்றிருந்தான் எனப் பல பாடல்கள் மூலம் விவரிக்கின்றது.

மாதவி அரசவை நடனக்காரி. பின்பொருநாள் அரசவை சென்ற அவள் நேரம் கழித்து வந்ததுகண்டு கடிந்து கொண்ட பாளங்கன் மாதவியைப் பிரிகிறான். பாளங்கனைப் பிரிந்த மாதேவி மிகுந்த பிரிவுத்துயர் கொள்கிறாள். இந்தப் பகுதியில் பிரிவுத்துயரை இருபத்தைந்து செய்யுட்களில் உணர்வுப்பூர்வமாக விளக்குகிறார். பாளங்கன் விரும்பாவிட்டால் தான் அரசவை வேலையிலிருந்து விலகுவதாக மாதவி கூறுகிறாள். வயந்தமாலைமூலம் கோவலன் கொடுத்த பொருட்களை அனுப்புகிறாள். கோவலன் அதனை ஏற்க

மறுக்கிறான். பின்னர்க் கண்ணகியை நாடிச் சென்ற பாளங்கனைக் கடிந்துகொண்டு ஏற்றுக் கொள்வதாகக் கதை முடிகிறது.

மாதேவி கத்தாவ

இது 419 செய்யுட்களைக் கொண்டது. இதன் ஆசிரியர் சிங்கள கவிராஜ பண்டிதர். இவர் தாம் ஒரு பிராமணர் எனக் குறிப்பிடுகிற அதே வேளை தமிழிலிருந்த இக்கதையின் மூலத்தை எடுத்துரைப்பதாகச் சொல்கிறார். இவர் தமிழ்ப் பௌத்தராக இருக்கலாம் போலத் தெரிகிறது. 'வயந்திமாலா'வில் சொல்லப் பட்ட கதையே இதிலும் சொல்லப்படுகிறது. ஆனால் இடையிடையே சில மாற்றங்கள் இவர் செய்துள்ளார். இதில் மிக நீண்ட பிரிவு நிலைச் செய்யுட்கள் காணப்படுகின்றன.

கோள் முறை சாகித்தியம்

கண்டி காலத்தில் (1480-1815) பத்தினி வழிபாடும் தமிழ் இலக்கிய ஈடுபாடும் சிங்கள மக்கள் மத்தியில் மிகுதியாக இருந்ததைக் காணமுடிகிறது. இக்காலத்தில் தமிழ் நூல்கள் தழுவியதான பல சிங்கள இலக்கியங்கள் வெளிவந்தன. பத்தினி வழிபாட்டின் மூலமாகக் 'கோள்முறை' சாகித்தியம் என்ற புதிய இலக்கியம் சிங்கள மரபில் தோன்றியது. கோள்முறை என்பது காவல்முறை எனப்படும். நோய் நொடிகளிலிருந்தும் பஞ்சம் வரட்சி முதலியவற்றிலிருந்தும் தங்களைப் பாதுகாத்துக் கொள்ளும் முகமாகப் புலவர்கள் இக்காவியங்களை இயற்றியிருக் கின்றனர். இதனைக் காவல்முறை இலக்கியம் என்றழைத்தனர்.

தேவாந்துறையில் அமைந்துள்ள பத்தினி தேவாலயத்து அடியொற்றி முப்பத்தியைந்து சிங்கள நூல்கள் பத்தினி பற்றி வெளிவந்துள்ளன. இந்த நூல்கள் பத்தினி சடங்கு நடக்கும் நாட்களில் பூசை வேளைகளில் பத்தினியின் அருள் வேண்டிப் படிக்கப்படுகின்றன. இவை 'பன்திஸ்ஸ கோள்முறை' என அழைக்கப்படுகின்றன.

'பாண்டி நளுவ', 'மெரிம'

இந்த இரு நூல்களும் கொழும்பு அருங்காட்சியக நூல் நிலையத்தில் கையெழுத்துப் பிரதிகளாக உள்ளன. இதன் மூலப்பிரதிகள் ஏட்டு வடிவில் சென்னை சுவடிகள் நிலையத்தில்

இருப்பதாகவும் அவற்றிலிருந்து படியெடுக்கப்பட்ட பிரதிகளே இவையென்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

'மெரிம' என்கிற நூல் 588 பாடல்களைக் கொண்டு கிட்டத்தட்ட சிலப்பதிகாரத்தின் மொழி பெயர்ப்பாகவே உள்ளது. இடையிடையே பௌத்த மத கருத்துகளையும் இணைத்து இந்த நூல் செய்யப்பட்டுள்ளது அத்தொடு சிங்கள பிரதேசத்தில் பத்தினி பற்றி பரவியிருக்கின்ற கதைகளையும் இணைத்துள்ளமையையும் நாம் காணலாம். சிங்களத்தில் எழுந்த மிகச் சிறந்த காவியமாக இதனை சிங்கள இலக்கியத் திறனாய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். ஆனால் இதன் ஆசிரியர் யார் என்பது தெரியவல்லை.

பாளங்க ஹெல

இக்கதையில் மாதவி பரத்தையாக சித்தரிக்கப்பட்டு செல்வந்தரின் செல்வங்களை பறித்தெடுக்கும் விலைமகளாக வர்ணிக்கப்படுகிறாள். கோவலன் தன் செல்வமெல்லாம் இழந்து நிற்க மாதவி அவனைத் துன்புறத்துவதாக இக்கதை அமைகிறது. பின்பு பத்தினி பாளங்கனாகிய கோவலனை மீட்பதாக பின் கதை சிலப்பதிகாரத்தைப் போலவே உள்ளது.

பத்தினி ஹெல

பத்தினி கனவு காணுதலுடன் இக்கதை தொடங்குகிறது. கனவின் மூலம் தன் கணவனுக்கு ஏற்பட்ட கதியை உணர்ந்து தோழியுடன் கணவனைச் தேடச் செல்கிறாள் சிலப்பதிகாரக் கதையுடன் இங்கு பௌத்த ஜாதகக்கதைகளும் இணைத்துச் சொல்லப்படுகிறது. பத்தினி கடைசியில் தீயினால் நகரை அழிக்கும் பொழுது பௌத்த விகாரங்களையும் பீடங்களையும் தர்ம உபதேச சாலைகளையும், தங்கு மடங்களையும் சுட்டெரிக்காமல் கடைசியில் புத்த பதவியை எய்துவதற்கு மறுபிறப்பில் ஆணாகப் பிறக்க வேண்டிக் கொண்டதாக கதை முடிகிறது.

வித்திய

பத்தினி கதையை 280 செய்யுட்களில் கூறுகிறது. பத்தினி பாண்டிய மன்னனைக் குற்றம் சாட்டியமையும் மதுரையை எரித்து பின்னர் பால் தெளித்து எரியை அனைத்தையும் விவரிக்கும் இந்த நூல் சோழ மன்னர்களின் பெருமையை பல பாடங்களில் விவரிக்கிறது.

சத்பத்தனி கதாவ

இது முற்றிலும் இலங்கையில் சிங்கள மக்களின் சூழ்நிலையை மையப்படுத்தி உருவான கதையாக உள்ளது. ஏழுபத்தினிகள் பற்றியதாக இது அமைகிறது. நீர், தீ, மலை, மாங்கனி, பூ, தந்தம், சால்வை (துணி) என்பனவற்றிலிருந்து அவதரித்ததாக குறிப்பிடுகிறது.

பத்தினி தொடர்பான இந்த கதைகளைத் தவிர அம்பபத்தினி உபத்த, அம்ப விதுமன, பத்தினி யாதின்ன, தெத ரத்தின மாலய, தொனஸ ரெஸ சாந்திய, பாண்டி நெத்த எமக்கு உபத்த, கண்ணூரன் கத்தூல, நெத்பத்தினி ஆகிய இலக்கியங்களும் பத்தினிகளுக்கான சிங்கள மரபில் வெளிப்படுத்துகின்றன.

வடக்கில் கண்ணகி கலாச்சாரம்

கஜபாகு மன்னன் காலத்திலேயே யாழ்ப்பாணத்தில் கண்ணகி கோயில்கள் ஸ்தாபிக்கப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. முதலாவது கண்ணகி கோயில் அங்கணங்கடவையில் ஸ்தாபிக்கப் பட்டதாகச் சொல்லப்படுகிறது. பின் நாட்களில் ஒல்லாந்தர் காலத்தில் அழிக்கப்பட்டதாக வரலாற்றுச் செய்திகள் கூறுகின்றன.

யாழ்ப்பாணப் பகுதியில் இருந்த பல கண்ணகி கோயில்கள் பின் நாட்களில் ராஜராஜேஸ்வரி அம்மாள், முத்துமாரி அம்மாள் என பெயர் மாற்றம் பெற்றதாகச் சொல்வர். ஆறுமுக நாவலரால் முன் எடுக்கப்பட்ட தீவிர சைவ வாதம் இதற்குக் காரணமாக அமைந்திருக்கலாம். ஆனால் இன்றும் இளவாலை, பளை, மண்டைத் தீவு, வீமன் காமம், தெல்லிப்பளை மாசியம் பட்டி, கச்சாய், பருக்கித் துறை, புலோலி, காரை நகர் ஆகிய இடங்களில் கண்ணகி கோயில்கள் காணப்படுகின்றன.

யாழ்ப்பாண சரித்திரம் என்னும் நூலில் அதன் ஆசிரியர் மூத்த தம்பியும் முதலாவது கண்ணகி கோயில் நாகர்கோயிலில் உள்ள வேலாம்பாடியில் தோன்றியது எனக் குறிப்பிட்டுள்ளார்.

சேரன், செங்குட்டுவன் கண்ணகிக்கு விழா எடுத்த போது அந்த விழாவில் கலந்து கொண்ட கஜபாகு மன்னன் தான் பெற்றுக் கொண்ட கண்ணகி சிலை காற்சிலம்பு ஆகியவற்றோடு தன் பரிவாரங்களுடன் யாழ்ப்பாண மாதகலுக்கு அருகே உள்ள சம்புக்கோளம் என்னும் பகுதியில் இறங்கி, யாழ்ப்பாணம் திருவடி நிலைக்கு அருகாமையில் உள்ள அங்கணங் கடவையில் முதலாவது ஆலயத்தை அமைத்தான் என்றும் யாழ்ப்பாணத்தில் இருந்து பூநகரி ஊடாக அனுராதபுரம் செல்லும் சாலை வழியே பல ஊர்களில் கண்ணகிக்குக் கோயில்கள் அமைத்தான் எனவும் யாழ்ப்பாணச் சரித்திரம் என்னும் நூல் குறிப்பிடுகிறது. தற்போதைய நிலைமையில் அங்கணாங் கடவையில் கண்ணகி கோயில்களுக்கான அடையாளங்கள் காணப்படவில்லை. ஆனாலும் கந்தரோடைக்கு அருகாமையில் உள்ள கதிரமலைக்கு அண்மையில் அந்தக் கோயில் இருந்ததாக நம்பப்படுகிறது.

அண்மைக் காலங்களில் வைகாசி மாதத்தில் அந்த இடத்தில் பொங்கல் இட்டு வழிபடும் பழக்கம் உள்ளது.

காரைநகரில் உள்ள கண்ணகி கோயில் பதினேழாம் நூற்றாண்டில் ஸ்தாபிக்கப்பட்டதாகவும் இங்குச் சந்தன மரத்திலான கண்ணகி அம்மன் இடம்பெற்றுள்ளதாகவும் வருடா வருடம் சித்திரை வருடப் பிறப்பை அடுத்து வருகிற முதல் வெள்ளிக்கிழமை கும்பம் வைத்துத் தொடர்ந்து ஒன்பது நாட்கள் இங்குக் கண்ணகிக்கு விழா நடைபெறுகிறது.

இத்தி அடிப்புலம், பூங்குடுதீவு, கண்ணகிகோயில் பல நூறு வருடங்களுக்கு முன் உருவக்கப்ட்டதாக நம்பப்படுகிறது. இந்த ஆலயம் பற்றிய ஸ்வாரஸ்யமான கதை உள்ளது. 'தனது கால்நடைகளை மேய்ச்சலுக்கு விடுகிற இடையன் ஒருவன் தன்னுடைய கால் நடைகள் வீட்டுக்குத்திரும்பாதது கண்டு அவற்றைத் தேடிச் சென்றான். அப்படி சென்ற போது அவனுடைய கால் நடைகள் அல்லது பசுமாடுகள் ஒரு பேழையைச் சுற்றிப் படுத்திருப்பது கண்டு ஆச்சர்யப்பட்டான். பேழையைத் திறந்து பார்த்தபோது அந்தப் பேழைக்குள் ஒரு கண்ணகி சிலை இருப்பது கண்டு, கண்ணகி மீது பக்தி கொண்டான். அந்தச் சிலையும் அந்த இடமும் கண்ணகி கோயிலாயின. சித்திரை மாதத்தில் தொடர்ந்து பதினைந்து நாளைக்குச் சித்திரை பௌர்ணமியை ஒட்டிக் கண்ணகிக்கு விழா நடைபெறுகிறது.

மட்டுவில் வடக்குப் பன்றித்தலைச்சி கண்ணகி அம்மன் இங்குக் கண்ணகி கோயில் கொண்டதற்கு விசேஷித்த கதை சொல்லப்படுகிறது. இப்போது ஆலயம் அமைந்திருக்கிற இடத்தில் பல சிறுவர்கள் கூடிவிளையாடியதாகவும் அந்த வேளையில் அங்கு வந்த ஒரு மூதாட்டி அந்தப் பிள்ளைகளைத் தன் தலையில் பேன் இருப்பதாகச் சொல்லிப் பிரித்துப் பார்க்கும்படிச் சொல்லப் பிரித்துப் பார்த்தபோது தலை முழுவதும் கண்களாகக் காட்சி அளித்ததாகவும் அதைக்கண்ட சிறுவர்கள் பயந்து நடுங்கியதாகவும், அந்தக் கிழவி பயப்பட "வேண்டாம் எனக்கு இந்த இடத்தில் பொங்கல் வைத்துப் பூசை செய்தால் போதும்" என்றும் சொன்னதாகவும் அதனைத் தொடர்ந்து அவ்வூர் மக்கள் ஒன்று கூடி வருடம் தோறும் கண்ணகிக்குக் கோயில் இயற்கை எழில்வாய்ந்த சூழலில்

அமைத்துள்ளார். வருடந்தோறும் கண்ணகியுடைய வரலாறு இங்குப் படிக்கப்பட்டு மக்களால் போற்றப்படுகிறது. இங்குப் படிக்கப்படுகிற கண்ணகி கதையில் சில ஸ்வாரஸ்யமான சம்பவங்கள் உள்ளன. மாதவியிடம் சென்ற கோவலன் தன் பணம் பொருள் எல்லாவற்றையும் இழந்து மீண்டும் கண்ணகியிடம் வருவதற்குப் பல கஷ்டங்களை எதிர்நோக்கியதாகச் சொல்லப்படுகிறது. தன் கணவன் இறந்த செய்தி கேட்ட கண்ணகி மதுரையை எரித்து அதன் பின் ஒவ்வொரு ஊராகச் சென்று காட்சி கொடுத்து அந்த இடங்களில் கண்ணகி கோயில்கள் உருவானதாகச் சொல்லப்படுகிறது.

இந்தக் கண்ணகி மீது பற்றுக் கொண்ட ஒருவனுடைய தோட்டத்தில் மாடு ஒன்று வந்து அடிக்கடி பயிர்களை அழித்துச் சென்றது. ஆத்திரம் அடைந்த அந்தக் தோட்டக்காரன் அந்த மாட்டைக் கொலை செய்து அந்தத் தோட்டத்திலேயே புதைத்து விட்டான். இதை அறிந்த அந்த மாட்டு உரிமையாளன் கிராம அதிகாரியிடம் முறையிட விசாரணை நடைபெற்றது.

தோட்டக்காரன் கண்ணகி அம்மனை வேண்டிக் கொண்டு மாடு புதைத்த இடத்தைத் தோண்டினான். அப்போது மாடு புதைக்கப்பட்ட இடத்தில் பன்றியினுடைய தலை வெளிப் பட்டதாம். அதனாலேயே இதற்குப் பன்றிச் தலைச்சி அம்மன் என்ற பெயர் வெளிப்பட்டது.

வற்றாப்பளைக் கண்ணகி அம்மன் கோயில்

வற்றாபளை கண்ணகி கோயில்

ஈழத்திலுள்ள கண்ணகி அம்மன் கோயில்களுள் புகழ் பெற்ற கோயிலாக விளங்குவது வற்றாப்பளைக் கண்ணகி அம்மன் கோயிலாகும். இக் கோயில் வன்னிப் பிரதேசத்தில் முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ளது. வற்றாப்பளை என்னும் கிராமத்தில் அமைந்திருப்பதால் கண்ணகை அம்மன் கோயிலும் ஊரை அடைமொழியாகக் கொண்டு அழைக்கப்படுகின்றது.

இக்கோயில் இயற்றகை வளங்கொழிக்கும் சூழலைக் கொண்டதாக விளங்குகின்றது. இக்கோயில் அமைந்துள்ள இடத்திற்குக் கிழக்காகவும் வடக்காகவும் நந்திக்கடல் நீரேரித் தீர்த்தம் காணப்படுகின்றது.

வற்றாப்பளைக் கண்ணகி அம்மன் தோற்றம் பெற்ற வரலாறு ஐதிகமானது. கர்ணபரம்பரைக் கதைகளை ஆதாரமாகக் கொண்டது. வற்றாப்பளைக் கிராமத்தில் வசித்த மக்கள் விவசாயிகளாகக் காணப்பட்டதோடு கால்நடைகளையும் பெருமளவில் கொண்டிருந்தனர். இக்கால்நடைகளை நந்திக் கடல் நிரேரியைச் சூழவுள்ள பகுதிகளில் மேயவிடுவது வழக்கம். அதிகாலையில் பால்கறந்த பின்பு கால்நடைகளை மேய்ச்சலுக்கு விட்டுக் கண்ணாகித்து, பின்பு மாலையில் பட்டியடைப்பது போன்ற வேலைகளை இளைஞர்களும் சிறுவர்களுமே செய்துள்ளனர். ஒருநாள் அச்சிறுவர்கள் நடையை மேய்த்துக் கொண்டிருக்கும் சமயம் வயது முதிர்ந்த மூதாட்டி ஒருவர் வெள்ளைச்சேலை கட்டி ஊன்றுகோல் ஊன்றியவண்ணம் சிறுவர்களை நோக்கி வருவதைக் கண்டனர். அப்போது சிறுவர்கள் மூதாட்டியின் அருகில் சென்று "எங்கே ஆச்சி போகிறீர்கள்? என்று கேட்க. . . அதற்கு மூதாட்டி நான் நடந்து களைத்துவிட்டேன் பசிக்கிறது ஏதாவது சாப்பிடத் தாருங்கள் என்று கேட்டவாறு அமர்வதற்கு ஓரிடத்தைத் தேடிக் கொண்டிருந்தார். அப்போது சிறுவர்கள் தங்கள் இடத்தில் ஒன்றும் இல்லை என்றும், வேண்டும் என்றால் வீட்டிற்குப் போய் அரிசி கொண்டு வந்து பொங்கல் செய்து தருகிறோம் என்றும் சொல்லிவிட்டு அப்படியே பால் கலசத்தில் பொங்கல் செய்து முடித்தனர்.

சிறுவர்களின் இச்செயல்களை அருகிலிருந்த மரக் குற்றியிலிருந்து கவனித்த மூதாட்டி சிறுவர்களை நோக்கப் பொங்கலைப் படையுங்கோ என்று கூறினார். சுற்றும் முற்றும் பார்த்த சிறுவர்கள் 'படைப்பதற்கு இலை இல்லையே' என்று கூற அருகில் இருந்த ஒரு விடத்தல் மரத்தினைச் சுட்டிக்காட்டி 'விடத்தல் மர இலைகளைப் பிடுங்கி அதில் படையுங்கள் என்று கூறினார். விடத்தல் இலைகள் மிகமிகச் சிறியவை. எனினும் மூதாட்டியிடம் இலைகளைக் கொண்டுவந்து கொடுத்தபோது அதனைப்பரப்பிய மூதாட்டி அந்த இலைகளில் பொங்கலைப்

படைக்குமாறு கூறினார். அவ்வாறே சிறுவர்களும் பொங்கலைப் படைத்து மூதாட்டியை உண்ணுமாறு கேட்டனர். அப்போது மூதாட்டி 'விளக்குக் கொளுத்துங்கோ' என்று கூறினார். 'விளக்கு வைப்பதற்குரிய எரிபொருள் இல்லை என்று சிறுவர்கள் கூற அருகில் இருந்த நந்திக்கடலைக் காட்டி அதிலிருந்து தீர்த்தத்தைக் கொண்டுவருமாறு கூறினார். அவ்வாறே சிறுவர்களும் அருகிலிருந்த நந்திக்கடல் நீரேரியிலிருந்து நீரைக் கொண்டு வந்தனர். அப்பொழுது மூதாட்டி தனது சேலையில் சிறிது துண்டாகக் கிழித்துத் திரியாக்கித் தீபத்தை ஏற்றினார். பின்னர் அனைவரும் பொங்கலை உண்டு களித்தனர். அதன் பின்னர்ச் சிறுவர்களை நோக்கித் 'தலையிலே கடிக்கிறது பேன் பார்த்து விடுங்கோ' என்று கேட்டார்.

சிறுவர்களும் சம்மதித்துப் பேன் பார்க்கத் தலைமுடியை விரித்தபோது தலை முழுவதும் ஓட்டையாகவும் அதிலே கண்கள் இருக்கக் கண்டு ஆச்சரியப்பட்டார்கள். மூதாட்டியை நோக்கி 'என்ன ஆச்சி தலைமுழுக்க ஓட்டையாகக் கண்கள் இருக்கின்றதே' என்று சிறுவர்கள் கூறத் தான் யார் என்பதை அச் சிறுவர்களுக்குத் தெரியப்படுத்தினார். 'பிள்ளைகளே நான்தான் கண்ணகி. மதுரையிலிருந்து வருகிறேன். ஒவ்வோரிடமாகச் சென்று வருகிறேன். இது நான் வந்த பத்தாவது இடம். ஒவ்வொரு வருடமும் இத்தினத்தில் இங்கு வருவேன் என்று கூறினார். இவ்வாறு சிறுவர்களுக்குக் காட்சி கொடுத்த தினம் வைகாசி மாதத்திலே வரும் விசாகமும் பருவமும் ஒன்றிணைந்த பூர்வபட்ச சப்தமி திதியில் வரும் திங்கட்கிழமையாகும்.

சிறுவர்கள் தமக்கேற்பட்ட அனுபவத்தை வீட்டிலுள்ள பெரியோர்களிடம் கூறியபோது அவர்கள் இக்கதைகளை நம்ப மறுத்தார்கள். ஆனால் அன்றிரவு கண்ணகித் தெய்வம் அவர்கள் கனவில் தோன்றித் தான் யாரென்பதை உணர்த்தினார். இதன் பின்னர் ஊரிலுள்ளோர்க்கு இக்கதை பரவ அனைவரும் சிறுவர்கள் பொங்கிப் படைத்த இடத்திற்குச் சென்றனர். பொங்கிப் படைத்த அடையாளங்களைக் கண்டு உண்மையை உணர்ந்தனர். அத்தோடு மூதாட்டியார் அமர்ந்திருந்த வெட்டப்பட்ட வேப்ப மரக் குற்றியில் தளிர்விட்டுக் காணப்பட்டதைக் கண்டு வியப்படைந்தனர். இச்சம்பவத்தின் பின்னர் அவ்விடத்திலிருந்த வேப்பமரத்தடியில் சிறிய கோயிலொன்றை அமைத்து அதில்

கண்ணகிக்குச் சிலை வைத்து வழிபட்டு வந்தார்கள். இவ்வாறான நிலையிலேயே வற்றாப்பளைக் கண்ணகி அம்மன் ஆலயம் தோற்றம் பெற்றதென வாய்மொழிக் கதைகள் மூலம் அறிய முடிகின்றது.

இவ்வாறு பாம்பு கடிக்கு வேம்பின் பாகங்கள் மருந்தாகப் பயன்படும். இப்பகுதி மக்கள் தங்கள் நோய்க்கேற்ப இம்மரத்தின் பாகங்களைப் பயன்படுத்துவர்.

ஈழத்தில் காணப்படும் கண்ணகி அம்மன் வழிபாடு மற்ற கிராமியத் தெய்வ வழிபாட்டிலிருந்து வேறுப்பட்டது. கண்ணகி அம்மன் வழிபாடு வைகாசி மாதத்தில் நடைபெறும். பொங்கலுக்கு முன் கண்ணகி அம்மன் கோயில் திறக்கப்பட்டு, கண்ணகி கதை படிக்கப்படும். அந்த நாட்களில் புதுப்பானை, பொங்கல், பாற்சொம்பு போன்றவை பல்வேறு இடங்களிலிருந்து வந்து சேரும். இந்தப் பூசை வழிபாடு கண்ணகி அம்மன் வழிபாட்டில் உண்டு. ஆனால் வற்றாப்பளை அம்மன் வழிபாடு இவற்றிலிருந்து வேறுபடுகின்றது.

வற்றாப்பளைக் கண்ணகி அம்மன் வழிபாடு வைகாசி மாதத்தின் முதல் மூன்று திங்கள் கிழமைகளிலும் முறையே பாக்குத்தெண்டல், தீர்த்தம் எடுத்தல், பொங்கல் வைத்தல் என்ற சடங்கு நடைபெறும். பாக்குத்தெண்டல் என்பது ஒவ்வொரு வீடாக ஏழு வீடுகளுக்குச் சென்று வெற்றிலை, பாக்கு, மஞ்சள் போன்றவற்றைத் தட்சணையாகப் பெறுவர். இதனைக் காட்டா விநாயகர் கோயில் ஆட்களே விரதம் இருந்து நந்திக்கடல் நீரேரியிலிருந்து திர்த்தம் எடுப்பர். அங்கே நீரில்லாத காலத்தில் சிலாவத்தைக் கடலில் தீர்த்தம் எடுப்பர். பரம்பரையாகத் தீர்த்தம் எடுப்பவர் பல கிரியைகளை முடித்துப் பின்பு முள்ளியவளை, வற்றாபளை வீதி, பள்ள வெளி பொதறிகுடா, நீராவிப்பிட்டி, முல்லைத்தீவு பிரதான வீதி ஆகிய வீதிகள் வழியாகப் பத்து மைல் கால்நடையாகவே சிலாவத்தைக் கடலில் சென்று பூசைகள் செய்து தீர்த்தத்தைக் குடத்தில் நிரப்பி எடுத்துக் கொண்டுவரப் பட்டு வற்றாப்பளை கண்ணகி அம்மன் வழிபாடு நடைபெறும்.

தற்காலத்திலே வற்றாப்பளை என அழைக்கப்படும் கிராமம் ஆரம்பக் காலத்தில் கண்ணகி ஆலயம் தோன்றிய காலந் தொட்டுப் பத்தாம்பளை என்ற காரணப் பெயராலேயே

அழைக்கப்பட்டது. கண்ணகி சிறுவர்களை நோக்கி அவ்விடத்திற்குப் பத்தாவது இடமாக வந்துள்ளேன் என்று கூறியபின் அக்கால மக்களால் பத்தாம்பளை என்றே அழைக்கப்பட்டது. பின்னர் இப்பெயர் வற்றாப்பளை என மாறியதற்கும் காரணம் கூறப்பட்டுள்ளது.

பொங்கல் காலங்களில் பெருந்திரளான மக்கள் இங்கு வருகை தந்து பொங்கலிடுவதால் அன்றைய தினம் மாலையில் இப்பகுதியில் காணப்பட்ட கேணியில் நீர் குறைந்து மக்கள் பெரிதும் அவதிப்பட்டனர். இதனால் 1949ஆம் ஆண்டளவில் இப்பகுதியை ஆய்வு செய்த நீர்ப்பாசனப் பொறியியலாளர்கள் அண்மையிலுள்ள குளம் வறண்டு கிடப்பதைக் கண்டறிந்தனர். அதன் பின்னர் அதனைத் திருத்தி அருகிலுள்ள கேணிக்குள் நீர் பெருக ஏற்பாடு செய்யும் வடிகால் முறையை அமைத்தனர். அதன் பின்னர்ப் பொங்கல் காலங்களில் மட்டுமின்றி வறட்சிக் காலங்களிலும் இக்கேணியில் நீர் வற்றுவதில்லையென்றும் இக்காரணத்தினால் 'நீர் வற்றாத ஊர்' என்ற கருத்தில் வற்றாப்பளை என அழைக்கப்பட்டதாகக் கூறப்பட்டுள்ளது. இச்சம்பவத்தின் பின்னர்ப் பத்தாம்பளை என்பது மறைந்து வற்றாப்பளை என அழைக்கப்படுகின்றது.

இவ்வாறாக நோய்கள் ஏற்படும்போது நோயுற்றோரைத் தனிமைப்படுத்தி அவர்களைப் பரிசுத்தமாகப் பேணுவர். அத்தோடு நோயுற்றவர் தங்குமிடமெங்கும் வேப்பிலைகளைப் பரவி வேப்பிலைப் படுக்கையிலேயே படுக்கவைப்பர். நோயுற்ற காலத்தில் புலால் உண்ணுதலைக் தவிர்ப்பர். நோய் குணம் அடைந்ததும் கண்ணகி அம்மனைச் சந்தித்துத் தரிசித்து பின்பே வெளியிடங்களுக்குச் செல்வர்.

பவனியாகக் கொண்டு வரப்பட்டு, தீர்த்தத்தில் விளக்கேற்றும் வைபவம் நடைபெறும். கடல் நீரில் தீபம் ஏற்ற முடியுமா? எனக் கேள்வி எழுப்பியோர் இச்செயலை நம்ப மறுத்தனர். எனவே இச்செயலை விஞ்ஞான ரீதியாகப் பரீட்சித்துப் பார்க்க முயன்றனர். ஆய்வுகள் பலமுறை நடந்தன. 1964அம் ஆண்டு கொழும்பிலிருந்து வந்த ஆய்வாளர் தீர்த்தத்தில் தீபம் எரிவதைப் பற்றி ஆய்வு செய்தார். எவ்வித முடிவும் இல்லை. 1970ஆம் ஆண்டு ஆய்வில் கடல் நீரில் உள்ள உப்புக்

கரைசல் நெருப்பு எரியும் ஒரு பொருளாக மாறுகிறது என்ற ஆதாரமற்ற கருத்தை முன் வைத்தனர். இன்றுவரை தீர்த்தத்தில் தீபம் எரிவது எப்படி என்ற உண்மை விளங்காமலே உள்ளது. அறிவுக்கும் மனித ஆற்றலுக்கும் மேற்பட்ட அற்புதமென்றே இதனைக் கொள்ள முடியும்.

வைகாசி மாதத்தின் மூன்றாவது திங்கட்கிழமை பொங்கல் வைத்தல் நடைபெறும். அத் திங்கள் இரவு 'வளந்து நேருதல்' என்னும் நிகழ்வு நடைபெறும், பூசாரியார் பானை ஏந்தி ஆடுவார். ஆட்டத்தின் உச்சக்கட்டத்தில் வளந்தினை அறிந்து ஏந்துவார். பின் பொங்கலிட்ட அரிசியை ஏந்தி ஆடுவார். ஏந்தி ஆடும் அரிசியையும் மேலே எறிவார். அந்த அரிசி கீழே விழுவது இல்லை. பானையை நெருப்பிலிடுவார். ஆனால் அது சாம்பலாகாது. இவ்வாறு காணப்படுவது மிக அதிசயமானது.

இப் பொங்கல் காலங்களில் பூசாரிக்கு உதவி செய்பவரை நோன்புக்காரர் என அழைப்பர். இவர்கள் கோயிலோடு நெருங்கிய தொடர்புடையவர்களாகவும், கண்ணகி பக்தர்களாகவும் இருப்பர். இவர்கள் கோயில் மூலகிரகத்திற்குள் செல்லாது மண்டபத்திலிருந்த படியே சகல உதவிகளையும் செய்வர்.

சிலாவத்தைக் கடற்கரையிலிருந்து கொண்டு வரப்பட்டுக் காட்டாவிநாயகர் ஆலயத்தில் தீபம் ஏற்றப்பட்டதும் கண்ணகியின் சிலம்பு கூறல் ஏட்டினை இங்கேயே வாசிக்க ஆரம்பிப்பர். இக் கோயிலில் பொங்கல் நடைபெறும் காலத்தில் சிலம்பு கூறல் படலம் ஏட்டிலிருந்து வாசிக்கப்படும். இக்காலத்திலே கண்ணகி-கோவலன் கதை, பாண்டிய மன்னன் சபையில் வழக்குரைத்தல், கண்ணகி மதுரையை எரித்தல், மதுரையை விட்டு வெளியேறி இலங்கைக்கு வருதல், இலங்கையின் பல இடங்களிலும் தங்கியிருந்த பின் பத்தாம்பளையை அடைதல், பத்தாம்பளையில் சிறுவர்களுக்குக் காட்சி கொடுத்தல் போன்ற சம்பவங்கள் நடைபெறும். இங்குத் திங்கட்கிழமை அதிகாலை வரை வாசிக்கப் படும். மீதியை வற்றாப்பளைப் பொங்கல் தினத்தன்று வற்றாப் பளைக் கண்ணகி அம்மன் கோயிலிலேயே வாசித்து முடிப்பர். சிலம்பு கூறல் ஏடு வாசிப்பதையே கேட்கச் சுற்றுப்புறக் கிராமங்கள் அனைத்தும் பெருந்திரளாக வரும். வைகாசிப் பொங்கலோடு பங்குனியிலே வருகின்ற திங்கட்கிழமைகள் யாவும் கண்ணகி அம்மனுக்கு உரிய சிறப்பு நாட்கள் ஆகும்.

பொங்கல் காலத்தில் பக்தர்களை நோய், பிணி அணுகாமல் இருக்கப் பரிகலம் கட்டுதல் என்னும் நிகழ்வு நடைபெறும். பரிகலம் என்பது பரிவாரப் பேய் அல்லது பேய் பிசாசைக் குறிக்கும் சொல். இன்றும் கிராமத்தில் ஒருவருடைய பிடிக்காத செயலைக் குறிக்கப் 'பரிகலப்பேய் மாதிரி' என்ற சொற்பதம் பயன்படுத்தப்படுகின்றது. திருவிழா முடிந்த பின்னர்ச் கட்டிய காப்பை நீக்கி விடுவதும் உண்டு. பரிகலம் கட்டப்பட்ட காலங்களில் மரணச் சடங்கு நடந்தால் பறை மேளம் அடிப்பது இல்லை, களியாட்டங்கள் இல்லை. சூடு மிதித்தல் இல்லை. இவ்வாறு பாரம்பரியங்களைக் கடைப்பிடிப்பது வற்றாபளையைச் சுற்றிக் காணப்படுகின்றது.

வற்றாப்பளை கண்ணகியின் பொங்கல் திங்கள் இரவு முடிவடைந்த பின்னர் மறுநாள் செவ்வாய்க் கிழமை அதிகாலை பரிகலம் வழிவிடுதல் என்னும் நிகழ்ச்சி நடைபெறும். பூசாரியார் வேப்பங்குழையால் தீர்த்தத்தினை எடுத்து எல்லா இடங்களிலும் தெளிப்பார். பின் மீதித் தீர்த்ததினையும் வேப்பங் குழையையும் நந்திக்கடலில் சேர்த்து விடுவார். இந்நிகழ்ச்சியின்போது குளுர்த்திப் பாடல்கள் பாடப்படும். பரிகலம் வழிவிடுதல் நிறைவேறியபின் கிராமங்களில் ஐதீகமாக நிறுத்தி வைத்த வேலைகள் யாவும் நடைபெறும். அத்தோடு கால்நடையாகக் கதிர்காமம் செல்வதற்காகத் தங்கியிருக்கும் அடியார்கள் தமது பயணத்தினையும் மேற்கொள்ளுவார்கள்.

இவற்றோடு தொடர்புடைய பொங்கல் ஒன்று நாவற் கோட்டு வைரவர் கோயிலில் நடைபெறும். இதனை எட்டாஞ் சடங்கு என்றுங் கூறுவர். இச்சடங்கு பரிகலம் வழிவிடுதல் நடைபெற்ற பின்வரும் திங்களன்று இடம்பெறும். இப்பொங்கல் பரியலங்கட்கு உணவளிப்பதற்காகப் பொங்கப்படுவதாகக் கூறுவர். பொங்கல் பொங்கிப்படைத்த பின்னர்க் கொள்ளி எறும்புகள் எனப்படும் ஒருவகை எறும்புகள் மொய்த்து அப்பொங்கலை உண்ணும். இவற்றைப் பரிகலங்கள் எனக் கருதுவர்.

வற்றாப்பளையைச் சுற்றியுள்ள கிராமங்களில் கோவலன் கூத்தும், வற்றாப்பளை, முள்ளியவளை, தண்ணீரூற்று, நெடுங் கேணி, புதுக்குடியிருப்பு போன்ற பகுதியில் அண்ணாவிமார் கூத்தினைப் பழக்கி மேடை ஏற்றுவார். வற்றாப்பளைக் கண்ணகி அம்மனின் பெருமைகளைக் கூறுவது வசந்தன் பாடல், மழைக்காவியம் அம்மானை ஆகும்.

கொம்பு விளையாட்டு

கிழக்கில் கண்ணகி வழிப்பாட்டோடு மிக நெருங்கிய தொடர்புடையதாக இந்தக் கொம்பு விளையாட்டு கருதப் படுகிறது. உலகில் கண்ணகி வழிபாட்டுக்கு அதிக முக்கிய இடம் வழங்கியவர்கள் மட்டக்களப்பார் என்று சொல்லலாம். கண்ணகியின் வருடாந்திர உற்சவமாகிய சடங்கு வைகாசி மாதத்தில் நடை பெற்றாலும், கொம்பு விளையாட்டு ஆடி, ஆவணி, புரட்டாசி மாதங்களிலேயே நடைபெறுகிறது. கோடை முடிந்து முதல் மழை அல்லது தலைமழை வருவதை எதிர்பார்த்து இந்த விளையாட்டு நடைபெறும். இந்த விளையாட்டிற்கெனப் பயன்படுத்தப்படுகிற பொருட்கள் கண்ணகி கோயில்களிலேயே தொட்டலைகள் அமைக்கப்பட்டு அதில் வைக்கப்பட்டிருக்கும். இந்த விளையாட்டில் ஈடுபடுகிற வடசேரி தென்சேரி என்னும் இருபிரிவினரும் இதைப் பாதுகாத்து வைத்திருப்பர். சில இடங்களில் கண்ணகி கோயில் இல்லாதபோதும் அவ்விடங்களில் கொம்பு விளையாட்டு நடைபெறுவதுண்டு. மண்டு, கழுதாவளை, தேற்றத் தீவு ஆகிய ஊர்களைக் குறிப்பிடலாம்.

கிழக்கில் கண்ணகிக்குச் சடங்கு செய்வதும் கொம்பு விளையாடுவதும் கண்ணகியின் கோபத்தைத் தணித்துச் சாந்தத்தை ஏற்படுத்தும் என நம்புகின்றனர். கொம்பு விளை யாட்டின் தொடக்கம் பற்றி இங்கு ஒரு கதை சொல்லப்படுகிறது.

மதுரையை எரித்தும் கண்ணகியின் சீற்றம் தணிய வில்லை. இந்த நிலை இடையர் சேரிக்குச் சென்றனர். இடையர்கள் கண்ணகியின் சீற்றத்தைத் தணிக்கப் பல முயற்சிகள் செய்தனர். அங்கு உள்ள இடைச் சிறுவர்கள் இரண்டு பிரிவாகப் பிரிந்து மஞ்சள் கொம்புகள் இரண்டு எடுத்து ஒன்றோடு ஒன்று கொளுவி இழுத்தனர். ஒரு கொம்பு முறிய மறு கொம்பு வென்றது வென்ற கொம்புக்குரியவர்கள் அது கண்ணகியின் கொம்பு என்று ஆடிப்பாடி மகிழ்ந்தனர். இதைக் கண்ட கண்ணகி கோபம் தணிந்து குளிர்ந்ததாகச் சொல்லப்படுகின்றது.

ஆண்டுதோறும் கொம்பு விளையாடிக் கண்ணகியின் சீற்றத்தைத் தணிக்க வேண்டும் என இங்குள்ளவர்கள் நம்புகின்றனர். அப்படி செய்யாவிட்டால் அவளுடைய கோபம் கொடிய வறட்சியையும், நோய்களையும், வறுமையையும் ஏற்படுத்தும் என அஞ்சுகின்றனர்.

இலங்கையில் சிங்களவர் மத்தியிலும் இக் கொம்பு விளையாட்டு நடைமுறையில் உள்ளது.

பாணமையில் உள்ள வேடுவர் மத்தியில் இந்தக் கொம்பு விளையாட்டு சிறப்பானதாக உள்ளது. வைகாசி மாதத்தில் தொடர்ந்து எட்டு நாட்கள் ஒரு சடங்காகவே இது நடத்தப்படு கிறது. எட்டு நாட்களில் ஆண்கள் கண்ணகி கோயில்களிலேயே தங்கியிருந்து விரதமிருந்து இந்தக் கொம்பு விளையாட்டை நிகழ்த்துகின்றனர். பாணமையில் உள்ள வேடுவமக்கள் அச்சத்திற்குரிய தெய்வமாகக் கருதுகின்றனர்.

கண்ணகிக்குரிய வழிபாட்டுக் கடமைகளைச் சரிவரச் செய்யாவிட்டால் தாம் நிம்மதியாக வாழமுடியாது என்று நம்புகின்றனர்.

மட்டக்களப்பில் காணப்படுகிற கொம்பு விளையாட்டில் மரம் முக்கியக் கருவியாக உள்ளது. இந்த வழிபாட்டில் சங்க காலத்தில் மக்கள் நம்பிக்கைக்குரிய வழிபாட்டில் ஒன்றாக மரம் இருந்ததாகச் சொல்லப்படுகிறது. கொம்பு விளையாட்டுக்கு என நாட்டப்படுகிற தாய் மரம் அத்தோடு கொம்பாக பயன்படுத்தப் படுகிற மரக் குட்டிகள் வழிபாட்டுக்குரியனவாகப் பயன்படு கின்றன. தாய் மரத்தோடு பிணைக்கப்படுகிற கொம்பு பெண் குறியாகவும் அதனோடு வந்து புணரும் கொம்பு ஆண் குறியாகவும் இங்கு யூகிக்கப்படுகிறது. இவ்வகையில் பெண் கொம்பு தென் சேரியைக் காதலியாகவும் வட சேரியைக் காதலனாகவும் கொண்டு கொம்பு விளையாட்டுப் பாடல்கள் பாடப்பட்டு வருகின்றன. இந்த ஆண் பெண் பாவனையை உறுதிப்படுத்துகிற முறையில் கொம்பு இழுவையின்போது தென் சேரியர் கொம்புகளைக் கீழிருந்து மேல்நோக்கி ஏத்துவது போலவும், வட சேரியர் மேலிருந்து கீழ்நோக்கி அழுத்துவதையும் அவதானிக்கலாம்.

கொம்பு வாரம்

வாரம் என்பதற்குப் பிரிவு என்று பொருள். விளையாட்டுகள் இரண்டு பிரிவுகளாகப் பிரித்து விளையாடுவது வழக்கம். கொம்பு விளையாட்டும் இவ்வாறு இரு பிரிவுகளாகப் பிரித்து விளையாடப்படுகிறது. ஆனால் ஏனைய விளையாட்டுகளில் குறுகிய தொகையினரே கலந்து கொள்ள, கொம்பு விளையாட்டில் ஒரு சமூகமே இரண்டாகப் பிரிந்து நின்று விளையாடுவதைக் காணலாம். மட்டக்களப்பில் சேரி என்ற சொல் பெரும்பாலும் வழக்கிலில்லை. கொம்பு விளையாட்டில் மாத்திரமே இச்சொல் பயன்படுத்தப்படுகிறது. சிலப்பதிகார செல்வாக்கால் அல்லது மட்டக்களப்பு கண்ணகி வழக்குரையால் இச்சொல் இங்குப் புகுத்தப்பட்டது. கொம்பு விளையாட்டில் பங்குபெறும் இரு பிரிவினரையும், இங்கு வடசேரி, தென்சேரி என்று அழைப்பர். சேரி என்பது கிராமத்தை அல்லது கிராமத்தின் உட்பிரிவைக் குறிக்கும். எனவே இவ்விளையாட்டு ஆரம்பித்த சூழ்நிலையில் கிராமத்தின் வடக்குப் பக்கம் இருந்தவர்கள் வடசேரியாகவும், தெற்குப் பக்கம் இருந்தவர்கள் தென் சேரியாகவும் புவியியல் அடிப்படையில் இப்பிரிவு தோன்றியிருக்க வேண்டும்.

ஐந்தாம் கஜபாகு மன்னன் காலத்தில் இக்கொம்பு விளையாட்டுப் பிரிவுகள் கிராம ரீதியாகப் பிரிக்கப் பிளக்கப் பட்டதாகக் கூறப்படுகிறது. இவ்வாறு குறித்த பிரிவுக்குட் பட்டவர்கள் தமது குடியிருப்பை மாற்றிக் கொண்டாலும் பழைய பிரிவிலேயே தொடர்ந்து இருந்தனர். சிங்களவர் மத்தியில் தந்தை வழியாக இப்பிரிவு விரிந்து சென்றதென்றும் அறிய முடிகின்றது. சிங்கள மக்கள் இக்கொம்பு விளையாட்டுப் பிரிவுகளை மேற்பக்கம், கீழ்ப்பக்கம் என வேறுவகையாக அழைக்கின்றனர். இவ்வாறு கூறுவதை நாம் முன்பு குறிப்பிட்டதுபோல் ஆண் பெண் பால் வகைகளாகத்தோன்றி இருக்கலாம் எனக் கருதவும் இடமுண்டு.

ஆரம்பத்தில் மட்டக்களப்பில் வடக்கு-தெற்கு என்று புவியியல் அடிப்படையில் தோற்றம் பெற்ற இப்பிரிவினை பின்

தந்தை வழிச் சமூகமாக மாற்றம் பெற்றது. பொதுவாக ஆண்களே கொம்பு விளையாட்டில் தொடர்புடையதாய் இருப்பது சாத்திய மானது. இவ்வகையில் தந்தையுடன் நெருங்கிய தொடர்புடைய ஆண் மக்களே அவர்வழிக் கொம்பு விளையாட்டில் ஈடுபடுத்தப்படுவது தவிர்க்க முடியாததே. அதனால் தந்தைக்குரிய சேரியில் நின்று மக்களும் விளையாடத் தொடங்கியதால் சேரி வாரம் தந்தைவழியாக விரிந்து சென்றது.

மட்டக்களப்பில் தாய்வழி உரிமை பெரிதும் போற்றப் பட்டு வந்தது. சொத்துடைமை ரீதியாகத் தாய்வழியின் முக்கியத் துவத்தை நடைமுறையில் இருந்த முக்கியச் சட்டத்தால் அறிய முடிகிறது. மேலும் சமூக வாழ்வியல் முன் வைக்கப்படும் சாதியும் அதன் உட்பிரிவினைக் குடிகளும் தாய் வழியை சார்ந்ததாகவே இருந்து வருகின்றன. ஒருவரது சமூக அந்தஸ்தும் பாரம்பரிய பதவிகளும் தாய் வழியைப் பொறுத்தே இங்கு வழங்கப்படும். ஆனால் இதற்கு மாறாக மரணச் சடங்கு, துடக்கு, கொம்பு விளையாட்டு ஆகியவற்றில் தந்தைவழி பேணப்படுவது குறிப்பிடத்தக்கது. கொம்பு விளையாட்டோடு தொடர்புடைய சேரிவாரம் மட்டக்களப்பில் எல்லா ஊர்களிலும் இல்லை. கொம்பு விளையாடி வந்த ஊர்களில் மாத்திரமே காணப் படுகிறது. தந்தை வழியாகத்தான் என்ன சேரி என்பதை ஒருவர் தெரிந்து கொள்வர். இச்சேரி வாரம் கொம்பு விளையாட்டின் போது இறுக்கமாகக் கடைப்பிடித்ததால் முறுகல் நிலையை அடைந்து பல பிரச்சினைகளைத் தோற்றுவித்தது. வாய்ச் சண்டைகளும், கைச் சண்டைகளும், இவை முற்றிய நிலையில் கொலைகள் கூடக் கொம்பு விளையாட்டால் நிகழலாயின. இதனால் சிவில் நிருவாக உத்தியோகத்தவர்கள் கொம்பு விளையாடக் கூடாதென ஆணையிடவும் அவசியமாயிற்று. கொம்பு வாரம் என்று பழமொழியும் தோன்றிற்று. எனவே கொம்பு வாரத்தில் முறுகல்நிலை கொம்பு விளையாட்டு மறைந்துபோக முக்கியக் காரணமாயிற்று எனலாம்.

கொம்பு விளையாட்டுப் பொருட்கள்

கொம்பு விளையாட்டு நிகழ்ச்சிகளைஆராய்வதற்குமுன் இதற்குரிய பொருட்களை அறிமுகம் செய்வது அவசிய மாகின்றது. இப்பொருட்கள் மரத்தடிகளாகவும் கொடிகளாகவும் நார்களாகவும் காணப்படுகின்றன. அவை கொம்பு, பில்லி,

அடை

பில்லியுடன் இணைந்து கட்டப்படும் கம்புக்கட்டு அடை எனக் கூறப்படும். இது தாய் அடை, முதலாம் அடை, இரண்டாம் அடை எனக் கொம்பின் பருமனுக்கமையப் பெருத்துச் செல்லும். தாயடைக்கு 4 X 4 அளவிலான நான்கு நீளக்குற்றியுள் சேர்த்துக் கட்டப்படும். சுற்றடைகளுக்குச் சுமார் 10" சுற்றளவான உருண்டைக் கம்புகள் அடுக்கப்படும். அடை பொதுவாக 3½ அடி நீளம் கொண்டதாக அமையும். அளவில் பெரிய கொம்பு களுக்கு இதன் நீளம் மேலும் அதிகரிக்கலாம். பொதுவாக அடைக்கு வெள்ளைக் கருங்காலி, முதிரை, வெடுக்குநளி, காட்டுக் கொக்கட்டி முதலிய பாரமான மரங்களைத் தேடியெடுப்பர்.

ஆப்பு

தெகிழக் கொடியால் வரிந்து கட்டப்பட்ட அடையை மேலும் வலுப்படுத்துவதற்கு ஒரு பக்கம் கூர்மைப்படுத்தப்பட்ட ஆப்பினை இடையில் புகுத்தி ஏற்றுவர். இத்தகைய ஆப்புக்குப் புளியை அல்லது மயிலடிக்குருத்தை மிக்க பொருத்தமானது என்பர். இதனை அடித்து ஏற்றுவதற்கு முதிரை, திருக்கொன்றை, பாலை முதலிய பாரமான மரங்களைக் கொண்ட தட்டுக் குற்றிகளைப் பயன்படுத்துவர்.

நெஞ்சடிப்பலகை

பில்லியுடன் இணைந்து தாயடை கட்டப்பட்ட பின் பில்லியன் மேற்புறமாகவும் அரிப்பின் கீழ்ப்புறமாகவும் செருகப்படும் பலகை நெஞ்சடிப் பலகையாகும். இது ஆறங்குல அகலம் கொண்டதாகவும் இருக்கும். பின்புறம் இரண்டங்குலம் தடிமனாகவும் இப்பலகை கூம்பிச் செல்லும். இதற்கு முதிரைப் பலகையை உகந்ததாகக் கொள்வர்.

தாய்மரம்

கொம்பு விளையாடுவதற்குப் பொருத்தமான மரத்தைப் பொறுத்து இதற்குரிய இடம் தீர்மானிக்கப்படும். கோயில் வீதியில் பொருத்தமான மரம் இருந்தால் அதற்கே முன்னுரிமை வழங்கப்படும். இல்லையேல் நாற்சந்திகளில் வயல் வெளிகளில் வேறு பொது இடங்களில் உள்ள பொருத்தமான மரங்களில்

கொம்பு கட்டுவர். கொம்பு கட்டுகின்ற மரத்தை தாய் மரம் என்றழைப்பது வழக்கம். ஆலை, அரசை, வம்பி, வாகை, காட்டுத் தேங்காய், முதலிய பல சாதி மரங்களிலும் கொம்பு கட்டியதைக் காணக்கூடியதாக இருக்கும் இம்மரம் 6 அடி சுற்றுக் குறைவில்லாமல் இருப்பது அவசியம். மரத்தில் மேல்பகுதி செவ்வாய்க் குற்றி சரிந்து வைக்கக்கூடிய அளவு ஏழு அல்லது எட்டு முழு உயரத்தில் கிளைகள் பரவியிருத்தல் வரவேற்கத்தக்கது. மிகப்பெரிய மரமாக இருந்தால் மரத்தில் துளையிட்டு அதன் ஒரு பகுதியை மட்டும் இதற்குப் பயன்படுத்துவதையும் காணலாம்.

செவ்வாய்க்குற்றி

மட்டக்களப்பு கொம்பு விளையாட்டில் இது மிக முக்கியமானது. எனினும் சிங்களப் பகுதிகளிலும் பாணமை யிலும் இது இல்லாமலே கொம்பு விளையாடுகின்றார்கள். பெரிய கொம்புகளை முறிப்பதற்கு இது மிக அவசியமானது. பனை மரத்தின் அடிப்பகுதியைத் தலைகீழாக நாட்டிச் செவ்வாய்க் குற்றியாகப் பயன்படுத்துவர். பத்து விரலிடை அளவுக்கு உட்பட்ட கொம்புகளுக்குப் பன்னிரெண்டு முழமும் இதன் உயரமாக இருத்தல் போதுமென்பர். செவ்வாய்க் குற்றியின் உயரத்தைத் தீர்மானிப்பதற்குக் கொம்பின் அளவோடு நாட்டப்படும் நிலத்தின் தன்மையும் அவதானிக்க வேண்டும். கிட்டித்த நிலத்தில் இரண்டு முழம்வரை தாழ்ப்பதும் அவசியமாகும். பொய்மண் நிலத்தில் போதுமான அளவு செவ்வாய்க்குற்றி அடியைத் தாள நாட்டாது விட்டால் பின்புறமாகக் குற்றியின் அடி மேலெழுந்து கொம்பு முறியாமலே குற்றிசாய நேரிடும் என்பதால் விழிப்பாக இருக்க வேண்டும். செவ்வாய்க்குற்றி உயரமாக இருத்தலைத் தென்சேரியாரும், உயரம் குறைந்திருத்தலை வடசேரியாரும் பெரிதும் விரும்புவர். கொம்பு விளையாட்டின் ஆரம்பத்திலேயே இதில் உடன்பாடு காணுதல் அவசியமாகும்.

மரவளையம்

கொம்பு இழுவைக்காகத் தாய் மரத்தைச் சுற்றிப் போடப்படும் வளையம் மரவளையமாகும். இது பருமன் கூடிய தெகிழக் கொடிகளைப் பலமுறை சுற்றிப் பின்னப்படுவது.

சாதாரணமாக இதன் சுற்றளவு ஒரு முழத்துக்குமேல் இருக்கும். இம்மரவளையம் போடப்படும் உயரத்தில் இரு சேரியாருக்கும் இடையே இடத்துக்கு இடம் கருத்து முரண்பாடு வருவதை அவதானிக்கலாம் . அடை பிடிக்கும் வசதி கருதித் தென்சேரியார் இதை உயர்த்த முயல்வதையும் வடசேரியார் தாழ்த்த முயற்சிப் பதையும் கொம்பு விளையாட்டில் காணக் கூடியதாகவுள்ளது.

செவ்வாய்க்குற்றி வளையம்

கொம்பு இழுவைக்காக மரவளையம்போலச் செவ்வாய்க் குற்றியைச் சுற்றிப் போடப்படும் வளையம் செவ்வாய்க் குற்றி வளையமாகும். இதுவும் மரவளையைப் பருமன் அளவு கருந்தெகிழங் கொடியால் பின்னப்படும் என்பதும், இது போடப்படும் உயரம் மரவளையத்துக்குச் சமனாக இருக்கும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அரிப்பு

இது பல சுற்றுக் கயிற்றாலாயது. தென்சேரிக் கொம்பை தாய்மர வளையத்துடன், வடசேரிக் கொம்பை செவ்வாய்க் குற்றியுடனும் இணைப்பதற்குக் கொம்பு விளையாட்டின்போது இரண்டு அரிப்புக்கள் பயன்படுத்தப்படும். முன்பு ஆத்தி, நறுபுணி, நார்பட்டு, தெகிளை ஆகிய மரங்களிலும் கொடி களிலுமிருந்து பெறப்பட்ட நார்களைக் கொண்டு புரிவிட்டுத் திரிக்கப்பட்ட பெருவிரல் அளவினதான கயிற்றினால் அரிப்பு வளைக்கப்படும். பொதுவாக இதனுடைய நீளம் மூன்று முழம் அளவில் இருக்கும். கொம்புகளுடன் இணைக்கப்படும் அடைகளின் பருமனுக்கு அமைய இதன் நீளத்தில் வித்தியாசம் செய்யப்படலாம். பன்னிரெண்டு சுற்று முதல் இருபது சுற்று வரை கொம்புகளின் அளவிற்கேற்ப அரிப்பு கனதியாக்கப்படும். இரு சேரியாரும் பயன்படுத்தும் அரிப்புக்கள் சம அளவினதாகத் திட்டம் செய்யப்படும் என்பதும் எல்லாச் சுற்றுக் கயிறுகளும் இழுவையில் சமபங்கு எடுக்கக் கூடிய வகையில் அரிப்பு வளைக்கப்படும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

வடம் தாங்கி

இரண்டு அரிப்புக்களையும் மரவளையத்திலும் செவ்வாய்க்குற்றி வளையத்திலும் உட்புறமாகக் கீழிருந்து மேல்

நோக்கி எடுத்து இழுபடாத வண்ணம் மாட்டிவிடும் தடிகள் "வடம்தாங்கி" எனப்பெயர் பெறும். இதற்கு முதிரை, வெள்ளைக் கருங்காலி, விற்பனை முதலிய உறுதி கூடிய மரங்கள் உகந்தவையாகக் கொள்வர்.

வடம்

செவ்வாய்க் குற்றியின் மேற்புறமாகக் துளையிட்டுப் புகுத்திய ஆப்பில் இரண்டு பக்கமும் கொழுவி இரு சேரியாரும் தனித்தனியாக இழுக்கப் பயன்படுத்தும் கயிறு வடமாகும்.

மரத்தில் கட்டியே கொம்பு இழுக்கப்படுகிறது. சிங்களப் பகுதிகளில் இதற்கு நாட்டப்படும் மரம் பெரும்பாலும் மின்னல் தாக்கிய தென்னைகளாக இருப்பதைக் காணலாம். பாணமையில் வேறு பெரிய மரங்கள் இதற்காக நாட்டப்படுகின்றன. மட்டக் களப்பில் தேவைப்படுவதுபோல அதிகமான உதிரிப் பொருட்கள் ஏனைய இடங்களில் நடைபெறும் கொம்பு விளையாட்டுக்களுக்குத் தேவைப்படுவதில்லை என்றே கூறலாம்.

கொம்பு விளையாட்டு நிகழ்ச்சிகள்

இனிக் கொம்பு விளையாட்டு நிகழ்ச்சிகளை அவதானிப்போம்.

அ. பொருட்களைத் தேடி எடுத்தலும் தயார் செய்தலும்

ஆ. கொம்பு தூது பிடித்தல்

இ. கொம்புகளை வரிதல்

ஈ. கொம்புகளைக் கட்டுதல்

உ. அடைகட்டலும் ஆப்படித்தலும்

ஊ. தாய் மரத்திற்கும் செவ்வாய்க் குற்றிகளுக்கும் இடையில் இணைத்தல்.

எ. அடை பிடித்தலும், வடம் இழுத்தலும்

ஏ. வெற்றி தோல்விகளை தீர்மானித்தல்

பொருட்களைத் தேடி எடுத்தலும் தயார் செய்தலும்

கொம்பு விளையாட்டு தொடங்குவதற்கு ஒரு வாரத்திற்கு முன்னமே இதற்குரிய பொருட்களைச் சேகரிக்கும் பணியை ஆரம்பிப்பர். அரிப்பு வளைப்பதற்குரிய நார் வகைகளைத்

தேடியெடுத்துக் கயிறு திரிக்கும் முயற்சி முதலில் தொடங்கும். இதே காலத்தில் கொம்புகளைத் தேடியெடுப்பதிலும் ஈடுபாடு காட்டுவர். காட்டில் சென்று அடை, ஆப்பு, பில்லி முதலியவற்றுக்குரிய பலதரப்பட்ட மரத்தடிகளும் கொண்டு சேர்க்கப்படும்.

கொம்பு தூது பிடித்தலும் கொம்பு வரிதலும்

இரு சேரியரும் இணைந்து ஒன்றோடு ஒன்றைப் பொருத விடுவதற்குத் தக்க கொம்புகளைத் தெரிந்தெடுக்கும் நிகழ்ச்சி "கொம்பு தூது பிடித்தல்" எனப்படும். பொருந்துகின்ற கொம்புகள் இரண்டுமே ஒரே அளவினதாகவும் ஒரே சாதியை சார்ந்ததாகவும் இருத்தல் வேண்டும். பழைய கொம்புடன் பழைய கொம்புகளையும் புதிய கொம்புடன் புதிய கொம்புகளையும் பொருத விடுவதே முறையாகும். கொம்புகளை (புதிய கொம்புகளை) அளவெடுக்கும்போது விரலிடைக் கணக்கில் அளவெடுப்பதே மரபு. மூன்று விரலிடை- இரண்டு அங்குலம் எனக் கொள்ளலாம். கொம்புகளைப் பொருதல்விடும்போது உருவம், அடிப்பாகம், பாரம், தோள், சுற்றளவு ஆகிய ஐந்து அம்சங்களையும் கருத்தில் கொள்ளவேண்டும் என்ற சிங்கள மக்களின் கூற்று இங்கு நினைவிற் கொள்ளத்தக்கது. இப்படி ஒரு கொம்புதூது பிடித்து அது விளையாட்டு ஆரம்பமாகித் தாய்க் கொம்புவரை கட்டப்படும் கொம்புகளின் அளவு எட்டு விரலிடைக்குக் கூடிய கொம்பு தாய்க்கொம்பாகக் கொண்டு விளையாடுவது பண்டைய மரபு. கொம்பு தூது பிடித்தபின் கொம்பு கட்டுவதற்கு முதல்நாள் இரவு கொம்புகளை நீருள் அல்லது ஈரமண்ணில் புதைத்து வைப்பர். கொம்பு கட்டுகின்ற அன்று அதிகாலை கொம்புகளை பில்லியுடன் இணைத்து வரிக்கின்ற வேலை ஆரம்பமாகும். இதற்கு அடிப்படையாக "நத்தடித்தல்" என்பது நடைபெறும். கொம்பின் கடைக்கால் பகுதியில் பசையைப் பூசி அதில் வெடிப்பஞ்சு அல்லது சணல்பஞ்சு ஐதாக ஒட்டி விடுதலாகும். இதனால் கொம்புகளை வரியும்போது வரிக்கின்ற புரியைக் குறித்த இடத்திலிருந்து விலகாதிருக்க பொருபொருப்பான நிலை ஏற்படும். இதற்குரிய பசை உலராத கடுங்காய், அரை அவியல் பச்சையரிசி, மஞ்சள் ஆகிய மூன்றினையும் அம்மியில் வைத்து அரைத்துத் தயாரிப்பர். கொம்பை வரிப்பதற்கு ஆத்திநாரால் திரித்தெடுத்த புரி

பயன்படுத்தப்படும். ஒருவர் இப்புரியை இழுத்துப்பிடிக்க மற்றவர் பசை பூச, இன்னும் ஒருவர் அருகில் நின்றுமுறையாக இழுத்துக் கொடுக்க வரிபவர் மிக இறுக்கமாக வரிவார்.

கொம்பு பூட்டுதல்

கொம்பு விளையாடுகின்ற மைதானத்தில் முதல் வேலையாக நாம் முன்பு குறிப்பிட்டபடி அரிப்பு வளைத்தலும் அதைக் கொம்போடு இணைத்தலும் நடைபெறும். தொடர்ந்து அரிப்பு போடப்பட்ட கொம்புகள் இரண்டையும் பூட்டி எடுக்கின்ற நிகழ்ச்சி இதையடுத்து இடம்பெறும். கொம்போடு இணைந்து வரியப்பட்ட பில்லிக்கும் அரிப்புக்கும் மேலே கொம்புத் தலைக்கிடையே மற்றவர் கொம்பைப் புகுத்தி இறுக்கமாகப் புணரச் செய்வது கொம்புபூட்டுதலாகும்.

கொம்பு முறிப்பு நல்லபடி நடைபெறுவதற்குக் கொம்பு பூட்டுவது இறுக்கமாக அமைந்திருப்பது அவசியமாகும். மேலும் இறுகல் இணைந்து விலகாதிருப்பதற்குப் பில்லிகளுடன் இணைந்து அடைக் கட்டும் வேலை ஆரம்பமாகும். முதலில் தாயடை வைத்துப் பில்லியுடன் இணைந்து தெகிழக் கொடியால் வரிந்து இறுக்கித் திருக்கு வைக்கப்படும். இதன்பின் நாம் முன்பு குறிப்பிட்ட நெஞ்சடிப் பலகை புகுத்தி ஏற்றப்படும். அடுத்த தேவைக்கேற்ப இரண்டாம் அடை, மூன்றாம் அடையென அடைகள் வைத்து வரிந்து மராப்பு திருக்குவைப்பர். இது மேலும் இறுகல் அடைய அடைகளுள் ஆப்புக்காகப் புகுத்தி அடிக்கப்படும்.

கொம்பு இழுத்தலும் வெற்றி தோல்வி தீர்மானித்தலும்

தாய் மரத்திற்கு முன்பக்கமாக ஐந்து முழு அளவில் செவ்வாய்க் குற்றி நாட்டப்பட்டுத் தாய் மரத்தில் சார்த்தி வைக்கப்படும். இந்நிலையில் அடைகளுடன் இணைக்கப்பட்ட கொம்புகளை இருசேரியாரும் தூக்கி எடுத்துச் சென்று தாய்மர வளையத்துடனும் செவ்வாய்க் குற்றி வளையத்துடனும் அரிப்பைக் கொடுத்து வடம் தாங்கிப் போடுவதற்காக ஒரு சேரியரை மறுசேரியார் முந்தி முயற்சிப்பதைக், காணலாம். இதன்பின் செவ்வாய்க் குற்றியின் மேற்பகுதியில் கொழுவியிருக்கும் வடத்தைப் பிடித்து இரு சேரியாரும் தனித்தனியாக முன்பக்கம் நோக்கி இழுப்பர். இவ்வாறு இழுக்கும்போது

தாய்மரத்தின் இடப்பக்கமாகவுள்ள வடத்தை வடசேரியாரும் வலப்பக்கமாகவுள்ள வடத்தைத் தென்சேரியாரும் பிடித்து இழுப்பர். இவ்வாறு கொம்பு இழுக்கும்போது இரு சேரியாரும கொம்பு விலகாமல் இருக்கத் தம் அடைகளைப் பிடித்துக் கொள்வர். கொம்பு பிடிப்பதில் தலா எட்டுப் பேர் நிற்பர்.

தாய் மரத்தையடுத்து மேல் கீழாகக் கொழுவப் பட்டிருக்கும் தென்சேரியடையை உயர்த்திக் கொடுப்பதிலும் செவ்வாய்க் குற்றியை அண்மித்துப் பக்கவாட்டில் கொழுவப் பட்டிருக்கும் வடசேரி அடையை அமர்த்திப் பிடிப்பதிலும் அடை பிடிப்போர் கவனம் எடுப்பர். இவ்வாறு கொம்பு விளையாட்டில் யாருடைய கொம்பு முறிகிறதோ அவர்கள் தோற்றவர்களாவர். முறியாத கொம்பு வெற்றிக் கொம்பாகக் கொண்டாடப்படும். மேலும் கொம்பு விளையாட்டின் போது கொம்பு இரண்டும் முறியாத நிலையிலும் வெற்றி தோல்விகளைத் தீர்மானிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுவதையும் அவதானிக்கலாம். இச்சந்தர்ப்பங்களில் கொம்பு முறியாத நிலை ஏற்படுவதற்கு யார் காரணமாக இருந்தார்களோ அவர்கள் தோற்றவர்களாகக் கொள்ளப்படுவர். தென்சேரியாரது மரவளையம் அறுதல், அரிப்பு அறுதல், கொம்பிலிருந்து பில்லி விலகுதல் முதலிய காரணங்களால் கொப்பு முறியாத நிலை ஏற்பட்டாலும் சேரியார் தோற்றவராவர். அதேபோல் செவ்வாய்க்குற்றி வளையம் அறுதல், வடசேரி அரிப்பு அறுதல், வடசேரி கொம்பு பில்லி விலகுதல் முதலிய சந்தர்ப்பங்களில் வடசேரியார் தோற்றவர்களாவர்.

விளையாட்டுக் கால வேறு கலை நிகழ்ச்சிகள்

மட்டக்களப்பு கொம்பு விளையாட்டைப் பின்வரும் கிராமியக் கலைகளும் அதனோடு இணைந்து பெருவிழாவாக்கின.

அந்நிகழ்வுகள் :

அ. போர்த் தேங்காய் அடித்தல்

ஆ. மாலைவேளை பூசையும், வெற்றிக் கொம்பு முறித்தலும்

இ. வசந்தன் ஆடல்

ஈ. ஏடகம் கட்டி ஊர் சுற்றுதல்

உ. கொம்புக்கு மந்திரக்கிரியை செய்தல்

ஊ. கொம்புத் தட்டெடுத்தல்

எ. வசைப்பாடல் (கொம்பு விளையாட்டு பாடல்கள்)

ஏ. குளிர்த்தி ஆடல்

அ. போர்த் தேங்காய் அடித்தல்

தென்னிந்தியாவிலும் இலங்கையிலும் போர்த் தேங்காய் அடித்தல் ஒரு வீர விளையாட்டாகப் பேணப்பட்டு வந்தது. இந் நிகழ்ச்சியில் இடத்திற்கிடம் சிறுசிறு வேறுபாடுகளை அவதானிக்கலாம். இலங்கையில் யாழ்ப்பாணத்திலும், சிங்களவர் மத்தியிலும் போர்த் தேங்காய் அடித்தல் கவர்ச்சிகரமான ஒரு தனி நிகழ்ச்சியாக நடத்தப்பட்டு வந்தது. யாழ்ப்பாணத் தமிழர் மத்தியில் நல்ல நாள் பெருநாட்களில் இரு குடும்பங்களிடையே அல்லது இரு போட்டிக் குழுக்களிடையே இந்நிகழ்ச்சி வீர விளையாட்டாக விளையாடப்பட்டு வந்தது. இன்றைக்கு அரை நூற்றாண்டுகளுக்கு முன் யாழ்ப்பாணத்தில் போர்த் தேங்காய் அடித்தல் எவ்வாறு நிகழ்த்தப்பட்டதென்பதை "நவீன விடை தோய்தல்" எனும் நூலில், போர் எனும் தலைப்பு அழகாய் சித்திரிக்கிறது. மட்டக்களப்பு தென்னை மரங்கள் நிறைந்த தென்னைக் கலாச்சாரத்தைப் பேணி வந்த ஒரு பிரதேசமாக இருப்பதனால் போர்த் தேங்காய் அடித்தல் இங்கே ஒரு மரபாக உள்ளது. தேங்காய்களை உருட்டுவதிலும் அடிப்பதிலும் கையாளப் படும் கையாண், விடுவாண் முறைகள் யாழ்ப்பாணத்தைப் போலவே இங்குக் கையாளப்படுகின்றன.

(ஈ) ஏடகம் அமைத்து ஊர்வலம் நடத்துதல்

ஏடகம் என்பது தூக்கிச் செல்லக்கூடிய தேர். இது எல்லா இந்துக் கோயில்களிலும் இருக்கக்கூடிய ஒன்று. மட்டக் களப்பில் ஏடகம் அமைக்கும் கலையை வளரச் செய்ததில் கொம்பு விளையாட்டிற்கும் முக்கிய பங்குண்டு. இரு சேரியாரும் கொம்பு ஊர்வலத்திற்காகப் போட்டி மனப்பான்மையோடு ஏடகங்களைக் கலையம்சம் பொருந்தியதாக அமைப்பர். இரு சேரியாரும் ஏடகத்திலும் தம்சேரி ஏடகம் சிறப்பாக இருக்க வேண்டும் என்பதிலும் மிகுந்த அக்கறைகாட்டுவர். 20ஆம் நூற்றாண்டின் ஆரம்பக் காலத்தில் களுதாவளை கிராமத்தில்

கொம்பு ஊர்வலத்திற்காகக் கட்டுத்தேர் கட்டி உருட்டிச் சென்றதாகக் கூறுவர். இத்தேர்களின் முடிவுகள் மிக அண்மைக் காலத்தில் கூட காணக்கூடியதாக இருந்தது.

கொம்பு விளையாட்டு மூன்று வாரங்கள் நடப்பது பொது வழக்கம். இதில் பத்தாவது நாள் அளவில் ஏடகத்தில் கொம்பெடுத்து ஊர்வலம் நடத்தத் தொடங்குவர். ஏடகத்தில் வைக்கப்படும் கொம்பு ஆரம்பத்தில் நேர்த்தியாக வைத்த கொம்பாகவோ அல்லது வேறு கொம்பாகவோ இருக்கலாம். இவ்வேடக ஊர்வலம் ஒரு வாரம் வரை ஒன்றாகவும் பின் சில நாட்கள் தனித்தனியாகவும் நடத்தப்படும். வசந்தன் கூத்தோடு வேறு கலை நிகழ்ச்சிகளும் இவ் ஊர்வலத்தில் இடம்பெறுவது வழக்கம். தனித்தனி ஊர்வலம் நடத்தும்பொழுது ஒருவர் ஊர்வலத்திலும் மற்றவர் ஊர்வலம் சிறப்புற அமையச் செய்வதிலும் மிக்க ஈடுபாடு காட்டுவர்.

உ. கொம்புக்கான மந்திரச் சடங்குகள்

மட்டக்களப்பு மனித வாழ்வில் மந்திரம் சம்பந்தப்படாத அலுவல்களே இல்லையெனலாம். இவ்வகையில் கொம்பு விளையாட்டில் மந்திரங்களின் செல்வாக்கைப் பெரிதும் காணலாம். மட்டக்களப்பு மந்திர ஏடுகளில் கொம்பு விளையாட்டோடு தொடர்புடைய பல மந்திரவாதிகள் வருவது பெரிதும் அவதானிக்கப்பட்டது. வடசேரி மந்திரவாதி வந்தால் தென்சேரிக் கொம்புகள் முறியும் என்றும் தென்சேரி மந்திரவாதி வந்தால் வடசேரிக் கொம்பு முறியும் என்றும் ஆருடம் கூறுவர். கொம்பு விளையாட்டில் தாய்க் கொம்புகளுக்குச் செய்யும் மந்திரச் சடங்கு மிக முக்கியமாகும். இதனை எதிர்தரப்பார் காணாதபடி இரகசியமாகப் பெருந்தொகை பணச்செலவில் பல மந்திரவாதிகள் சேர்ந்து முதல் நாள் இரவு செய்வர். கும்பாபிஷேக கிரியைகளில் பல அந்தணர்கள் சேர்ந்து மந்திரம் ஓதுவதுபோலத் தாய்க்கொம்புக்கு மந்திர ஆற்றல் கொடுக்கும் சடங்கில் பல மந்திரவாதிகள் கலந்துகொள்வர். இவர்கள் எல்லாம் ஒன்றுபட்டு தம்மை மறந்து உணர்ச்சிவசப்பட்டு மந்திரங்கள் சொல்லும்போது கொம்புகள் தானே எழுந்தாடும் என்பர்.

ஊ. கொம்புத் தட்டெடுத்தல்

தாய்க் கொம்புகளை மந்திரச் சடங்கு செய்த பின் பில்லியுடன் இணைந்து வரிந்து அங்கிருந்து கொம்பு கட்டும் இடத்திற்குக் கொண்டு வருதல் கொம்புத் தட்டெடுத்தல் என்று கூறப்படும். இதனைக் கொம்பை "எழுந்தருளப் பண்ணுதல்" என்றும் கூறுவர். இதற்காக அழகிய பந்தங்கள் தயார் செய்யப்படும். தாய்க்குத் தலைமகனாகப் பிறந்த ஒரு வாலிபன் தலைப்பாகை வாய்ச்சீலை கட்டிய நிலையில் கொம்பைத் தூக்கி வருவார். இவருக்கு இரு மருங்கிலும் இரண்டு வாலிபர்கள் பில்லியைப் பிடித்த வண்ணம் வருவர். இவர்களுக்கு முன்பாக மூன்று வாலிபர்கள் வட்டா மடைகள் பெண்களும் பெருந் தொகையாக சூழ்ந்து வருவதைக் காணலாம். இவ்வூர்வலத்தில் வசந்தன், குரவை சூழ்ந்துவருவதைக் காணலாம். இவ் வூர்வலத்தில் வசந்தன், குரவை முதலிய கலைகள் முக்கியமாக இடம்பெற்றிருக்கும்.

எ. கொம்பு விளையாட்டுப் பாடல்கள்

மட்டக்களப்பில் கொம்பு விளையாட்டு படிப்படியாக மறைந்து வந்தாலும் இங்குப் பாடப்பட்டு வந்த கொம்பு விளையாட்டுப் பாடல்கள் தொடர்ந்து உயிர் வாழ்ந்து வருகின்றன. கிராமத்து மக்கள் மத்தியில் வாய்மொழி இலக்கியமாகப் பேணப்பட்டு வந்த இப்பாடல்கள் தற்போது கிராமிய இலக்கிய வரிசையில் பலராலும் வெளியிடப்பட்டு உள்ளன. இக் கொம்பு விளையாட்டுப் பாடல்கள் ஏடகம் எடுத்து இருசேரியாரும் தனித்தனி ஊர்வலம் நடத்துகின்ற போதும் வெற்றிபெற்று அதைக் கொண்டாடுகின்ற போதும் பாடப்பட்டு வந்தன. இப்பாடல்கள் பல குறித்த ஒரு சேரியை ஏற்றுவதாகவும் மற்ற சேரியை தூற்றுவதாகவும் அமைந்துள்ளன.

வடசேரியான் கொம்பு எங்கே எங்கே
மணமுள்ள தாழையின் மேலே மேலே
தென்சேரியான் கொம்பு எங்கே
செம்பரப் பற்றைக்கு உள்ளே உள்ளே
வடசேரியான் கொம்பு எங்கே எங்கே
வண்ணான்டை சாடிக்கு உள்ளே உள்ளே

என்னும் பாடல்களை இதற்கு உதாரணமாகக் கூறலாம். நாம் முன்பு கூறியது போலத் தென்சேரியைப் பெண்ணாகவும், வடசேரியை ஆணாகவும் கொண்டு காதல் முறையில் பாடுவதை இப் பாடல்களில் காணலாம்.

பால்போல் நிலவெறிக்கப்
படலை திறந்தவர் ஆர் தோழி
நான்தாண்டி வடசேரியான்
உனக்கு நாழிபணம் கொண்டுலாவுகிறேன்
மானே மரகதமே மாணிக்கமே
புவி ஆணிமுத்தே
தேனே திரவியமே எந்தன்
செம்பொன் மோதிரத்தை நான் தாறேன்
மோதிரத்தின்மேல் ஆசையில்லை
உன்முகத்தைப் பார்க்கவும் நேரமில்லை
பெண்பாசம் என்மேல் கொள்ளாதேயடா
பண்பு கெட்ட - வடசேரியான்

கொம்பு விளையாட்டுப் பாடல்களுள் இவ்விளையாட்டோடு தொடர்பற்ற சில பாடல்களும் சேர்த்துப் பாடப்பட்டு வந்துள்ளன. இத்தகைய பாடல்கள் முருகன், வள்ளி, காதலைக் குறிப்பனவாகவும் வேறு வகையானவையாகவும் உள்ளன. மண்டூரில் வழக்கில் உள்ள கொம்புப்பாடல் அவ்வூர்க் கோயிலில் நடைமுறையில் உள்ள கம்புகனார் வழிபாட்டு முறையைச் சுட்டுகின்றது.

கம்புகனார் நிதம் அர்ச்சனை செய்ய
கரிமிசை வாறலர் ஆர்தோழி
செம்பு முலைக் குறத்தி பங்கன்-அந்தச்
செவ்வேல் முருகனடி மானே

தற்பொழுது இக்கொம்பு விளையாட்டுப் பாடல்கள் பல்வேறு கிராமிய, ஆயர் பாடிக் குரவைக் கூத்து, குன்றக் குரவை, முதலியனவெல்லாம் தீமையைப் போக்கத் தோன்றியன என நம்பப்பட்டது. மட்டக்களப்பில் வசந்தன் கூத்து கண்ணகியை மகிழ்விக்கும் என இன்றும் நம்பப்படுகிறது. இவ்வாறே பாணமையில் கொம்பு விளையாட்டையடுத்துக் "கூ" போட்டு எழுந்த மானத்தில் ஒன்று கூடி ஆடும் ஆட்டம் செழுமையைத் தரும் என நம்பப்பட்டது. சங்க காலத்தில் தமிழ்

நாட்டவர் மத்தியில் இத்தகைய வழிபாட்டு முறை பல இருந்ததாக அறிய முடிகிறது.

கொம்பு விளையாட்டில் மட்டக்களப்பில் காணப்படும் திராவிட மரபு, மர வழிபாட்டுக்குப் பெரிதும் முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. பாணமையிலும் சிங்களவர் மத்தியிலும் அதற்கென வெட்டி எடுத்து நாட்டப்பட்ட மரத்தில் கொம்பு கட்ட மட்டக்களப்பில் நிலையான மரங்கள் இதற்காகப் பயன்படுத்தப்படுகின்றன.

மேலும் சில கொம்பு விளையாட்டுப் பாடல்கள்.

1. கோலாப்பணிச் சோலை கொடுத்துக்
கொம்பு விளையாட்டுக்குப் போகையிலே
வேலப்பர் வந்துமடிபிடித்து
மெத்தவுஞ்சிக்கொண்டார் தோழி.

2. கர்ப்பணிமங்கையார் மன்மதவேள்
கந்தன் குமரன் அருள்வேலன்
சிப்புடன் மல்லிகைப்பூ மாலைதந்து
சேர்வமென்றாடி தோழியரே

வேறு

3. தோழியொரு வசனம்
சொல்கிறேன் கேளடி நாற்றோழி
வாளி தந்தென்னையும் மேயிங்கு
வரச்சொன்னாரடி மானாரே

4. மஞ்சள்குரவிபோல மடிநிறைந்தார் மல்லிகைப்பூ
சிந்தித் தெருவீல்வாற சிறுக்கனல்லோடி சென்சேரியான்

5. முலைகுறத்திக்கு மையல்கொண்டு
மணிப்பவளம் வளையலவிற்றுத்
தினைப்புனத்திலே கண்டவுடன் கந்தர்
வேங்கைமரமானார் தோழியரே

6. ஆற்றோறம் போறமயில்
ஆண்மணிலோ பெண்மயிலோ
வேர்த்து வாறான் வடசேரியான்
பாவற்பழம்போல மாலைதாறேன்

7. ஆற்றோரம் சிறாம்பிகட்டி
ஆங்குநின்று படைபொருது
சேர்த்து வாறான் வடசேரியான் - நல்ல
வெள்ளி மடல்கொண்டு வீசுங்கடி

8. ஆற்றோரம் சிறாம்பிகட்டி
ஆங்குநின்று பனைபொருது
தேற்றுவாறான் வடசேரியான்
துடைப்பங்கட்டா வடியுங்கடி

9. வடசேரியான் கொம்பு எங்கேஎங்கே
மணமுள்ளதாளையின் மேலேமேலே
தென்சேரியான் கொம்பு எங்கேஎங்கே
செம்பரப்பற்றைக்கு உள்ளேஉள்ளே

10. தென்சேரியான் கொம்பு எங்கேஎங்கே
சித்திரத்தேருக்கு மேலேமேலே
வடசேரியான் கொம்பு எங்கேஎங்கே
வண்ணாண்டச்சாடிக்கு உள்ளேஉள்ளே

11. தவிட்டங்காயான் தென்சேரியான்
தன்மானம்சற்றும் இல்லாண்டி
அவிட்டுத்தலைப்பாகை கையில்எடுத்து
அஞ்சி அதோ ஓடிப்போறாண்டி

12. வாழைக்காயான் வடசேரியான்
மானஈனம் கெட்டவண்டி
பெண்பிள்ளைப் பேச்சுக்கு ஆற்றாமலே அவன்
பேரழிந்தே வெட்கிப்போறாண்டி

13. பால்போல் நிலவெறிக்கப்
படலைத்திறந்தவன் ஆர்தோழி
நான் தான்டி வடசேரியான்
உனக்கு நாழிப்பணம் கொண்டுலாவுகின்றேன்

14. மலையோரம் வேட்டைக்குப் போய்
மானடி பார்த்துவருகையிலே
கலையே கலைமானோ
காடேறிமேய்ந்ததோர் பெண்மானோ

15. புல்லாந்திப் பற்றைக்குள்ளே
புலிகிடந்து உறுமுகுது
ஒக்கமதிப்பாய் புல்லாந்தி
ஒருகுத்தாய்குத்தாய் புல்லாந்தி

16. கப்புகனார்நிதம் அர்ச்சனைசெய்ய
கரிமிசைவாறவர் ஆர்தோழி
செப்புமுலைக்குறத்தி பங்கன் – அந்தச்
செவ்வேல் முருகனடிமானே.

ஏ. கொம்பு விளையாட்டின் நிறைவு

தாய்க்கொம்பு முறிந்தபின் பிரிவினையை மறந்து ஊர் ஒன்றுபடும். வெற்றிபெற்ற எந்தக்கொம்பு என்று பாராது இரு சேரியாரும் ஒன்றுபட்டு வெற்றிக் கொம்பை ஏடகத்தில் வைத்துக் கண்ணகியம்மன் குளுர்த்திப்பாடி ஊர்வலம் நடத்துவர். அதைத் தொடர்ந்து கொம்பு விளையாட்டுக்காக விரதம் இருந்த பின்பு கோயிலில் விசேட பூசை நடத்திக் கண்ணகி அருள் கிடைக்கும் என்ற திருப்தியோடு விழாவை நிறைவு செய்வர்.

இப்படிக் கொம்பு கட்டும் நிலையான மரம், வழிபாட்டு முக்கியம் கருதித் தாய்மரம் என அழைக்கப்பட்டது. மட்டக்களப்பு சிறுதெய்வ வழிபாட்டில் நாற்சந்திகளிலும் கோயில் விதிகளிலும் பொது இடங்களிலும் உள்ள மரங்கள் தெய்வங்கள் உறையும் இடங்களாக மதிக்கப்படுகின்றன. இது பூர்வீக வழிபாட்டு மரபாகும். சிந்துவெளி அகழ்வாராய்ச்சியில் மரத்தின் கீழ்க் காணப்படும் பெண் தெய்வம் தாய்த் தெய்வமே மரம் என்பதைக் காட்டி நிற்கிறது. இம்மரமாகிய அன்னையை மகிழ்விக்கச் செய்யும் ஒரு சடங்காகவும் கொம்பு விளை யாட்டை இங்குக் காணலாம். இயற்கைப் பொருட்களுக்கும் ஆசாபாசம் உண்டு என்பது தொல்குடி மக்களின் நம்பிக்கை. இதற்கமையத் தாய்மரத்தோடு பிணைக்கப்படும் கொம்பு ஆண்குறியாகவும் இங்கு ஊகிக்கப்படுகிறது. இவ்வகையில் பெண் கொம்பு தென்சேரியைக் காதலியாகவும், வடசேரியைக் காதலனாகவும் கொண்டு கொம்பு விளையாட்டுப் பாடல்கள்பாரம்பரியமாகப் பாடப்பட்டு வருகின்றன.

இந்த ஆண் பெண் பாவனையை உறுதிப்படுத்துகின்ற முறையில் கொம்பு இழுவையின்போது தென் சேரியார் கொம்புகளைக் கீழிருந்து மேல் நோக்கி உயர்த்துவதையும், வடசேரியார் மேலிருந்து கீழ் நோக்கி அமர்த்துவதையும் அவதானிக்கலாம்.

இக்கொம்பு விளையாட்டு கிழக்கில் மட்டக்களப்புப் பிரதேசத்தில் பெருவழக்காக இருப்பதோடு திருகோணமலை மாவட்டத்தில் பள்ளிக்குடியிருப்புப் பிரதேசத்தில் அண்மைக் காலம் வரை பெருவழக்காய் இருந்து வந்துள்ளது. பள்ளிக் குடியிருப்பை மையமாக வைத்து நடைபெற்ற கொம்பு விளையாட்டில் மூதூர் பகுதியில் தமிழ்க் கிராமங்களைச் சேர்ந்த மக்கள் ஒன்று கூடி மகிழ்வர். மேலும் இது மாணவர்கள் மத்தியில் கூடப் பிரபல்யம் அடைந்து வருவதையும் அவதானிக்க முடிகிறது. இவற்றைத் தேடி எடுத்து வெளிக்கொணர்வதும் கிராமிய இலக்கியத்துக்குச் செய்ய வேண்டிய ஒரு முக்கியக் கடமையாகும்.

ஈழத்தில் கூத்து மீளுருவாக்கம்

மரபுக் கலைகளின் மீளுருவாக்கம் என்பது எல்லா நாடுகளிலும் எல்லாப் பண்பாடுகளிலும் நடைபெற்று வந்துள்ளது. மீளுருவாக்க முயற்சிகளை நாம் நான்கு அடிப்படைகளில் வகைப்படுத்தலாம்.

1. மரபுக் கலைகளின் முன்னுள்ள நிலைமைகளை ஆய்ந்தறிந்து அதற்கேற்ப அதன் பழமைத் தன்மையை மீட்டெடுத்துப் பேணுவது.
2. இப்போதுள்ள நிலைமைகளை மாற்றிச் செம்மைப் படுத்துவது.
3. மரபுக் கலைகளில் கூறுகிற நவீன நாடகங்கள் கலை வடிவங்களில் பயன்படுத்தாமை.
4. மரபுக் கலை வடிவங்களிலிருந்து புதியதொரு வடிவத்தை உருவாக்குவது.

இந்த நான்கு வகைச் செயற்பாடுகளுக்கும் உதாரணமாக நாம் ஜப்பானிய நாடகங்களையும் ஔத்து மீகிங் ஒரோ மரபையும், இந்தியாவின் கதகளி, யக்ஞசாலைப் பரதநாட்டியம் என்பன வற்றையும் குறிப்பிடலாம்.

ஈழத்திலும் தமிழ்மக்கள் மத்தியில் உள்ள மிகப் பழமையான கூத்து மரபுகள் இந்த நான்கு அடிப்படைகளிலும் மீளுருவாக்கம் பெற்றுள்ளன.

1950ஆம் ஆண்டுக்குப் பின்னர் இலங்கையில் சிங்களவர்கள் மத்தியில் ஏற்பட்ட தேசிய உணர்வு அவர்களது தேசியக் கலைகளின் தேடலுக்கும் மீட்டுருவாக்கத்திற்கும் உந்து சக்தியாக அமைந்த பேராசிரியர் சரத் சந்திரர் சிங்கள அரங்கக் கலைகளின் மீட்டுருவாக்கத்தின் பிதாமகராகக் கருதப்படுகிறார்.

ஈழத்தமிழர்களின் கூத்து மீட்டுருவாக்கத்தின் தந்தையாக நாம் பேராசிரியர் சு. வித்தியானந்தனை பார்க்க முடியும். அவர் – பல்கலைக்கழகத் தமிழ்த்துறை பேராசிரியராகக் கடமையாற்றிய காலத்திலும் அதன் பின்னரும் ஈழத்தமிழர் கலைகளின் மீட்டுருவாக்கத்திற்கு மிகுந்த பங்களிப்பாற்றியுள்ளார் என்பதை நாம் இங்கு மனங்கொள்ளத் தக்கதாகும்.

பிற்சேர்க்கை - 1

கண்ணகை அம்மன் ஊர்சுற்றுக் காவியம்

மட்டக்களப்புத் தமிழகமெங்கும், கண்ணகை அம்மன் சடங்கு நடைபெறும் நாட்களில் பூசனை வேளைதோறும் படிக்கப் பெறும் அதிமுக்கியம் வாய்ந்தவை இந்த ஊர்சுற்றுக் காவியப் பாடல்கள். உடுகுச் சிந்து என்றும் ஊர்சுற்றுக் காவியம் வழங்கப்பெறும்.

காப்பு

வீசுகர மேகநிற வேதநுத லாள்கருணை
மேவுமத வாரண விநாயக வினோதா
சேசுருதி மேருவினிற் பாரதமிழ் கோடுகொடு
சேமமுற வேயெழுது சேர்கருணை யோனே
கூசுமதி சேர்நுதலி கோமள வலிக்கோர்
கொஞ்சுமத லைக்களப குஞ்சர முகத்தோய்
பேசுதமி ழின்கதைக ளேபாடு தற்கு'உறு
பிழைகள்வா ராமல்அருள் பேழைவயி றோனே

நூல்

ஒற்றைநவ ரெட்ணமணி ஒப்பரிய சுத்தனை
ஒப்பெமு தவப்பெரிய தொப்பைவயி றப்பனை
சித்திரமெ னத்தகுதி யப்பெரிய வெற்பனைச்
சித்தியென அத்திமுக வித்தக மருப்பனை
முத்தக மெனத்தகு முருப்பான மூர்த்தியை
மூவருக் கருளும்வகை செய்தருளு மூர்த்தியை
மத்தமத மொத்தபனை யொப்பனைய கையனை
மகாகணப திக்கடவுள் தன்னைமற வேனே 1

சீரிதா னபணி யாரமவல் எள்ளுண்டை
செந்தே னுடன்பயறு செவ்விள நீரும்
வாரியே குடவயிறு தன்னிலே வைக்கின்ற
வள்ளலே யானைமுக வரதநற் பயனே
நாரிபா கன்திருக் கொம்பனைய நம்பியே
நாளுமடி யார்கள்வினை போயகல வேணும்

பாரிதா யெம்மைப் பரிந்தென்று மாளுவாய்
பாரதங் கோடதனி னால்எழுது வோனே 2

மட்டெனக் குற்றருள் சுப்பிர[2]மணி யப்பன்
மற்புயப் பொற்குற மடந்தைமீ தருள்வோன்
விட்டதிற் பத்திவைத் தட்டமைச் சித்திர தமிழ்
வெற்பினிற் பத்திவைத் தேற்றுகா ரணனே
கட்டெனச் சர்க்கரைக் கொக்கமுக் கியகையில்
கொட்பரைச் சிற்பரத் துற்றவேள் முகனே
பட்டெனப் பொற்பரிக் கற்பகப் பிள்ளைபொற்
பக்கிசத் துற்றிறற் பக்திவைத் திடுமே 3

வேறு சீர்

திங்கட் செறித்தவட கொம்பைப் பிடித்துவளர்
செம்பொற் பொருப்பிலூற நம்பிப் பொறித்தவா
[3]வெங்கட் கழுத்தசுரர் மங்கிக் கெடச்செருவில்
வெம்பித் துறந்ததொரு தும்பிக்கை வெற்பே
சங்கைக் கரத்திலணி சங்கைத் தரித்தமுகில்
தங்கைச்சி தங்கவட [1]மங்கைக்கு மதலை
கங்கைச் சுளிச்சடைகொள் எந்தைக்கு மைந்தனே
கம்பக் கரிமுகவனே காத்தருள் வாயே 4

இந்தைத்திற லங்க்ப்புண ரங்கப்பிரி யன்புற்று
இன்புற் றடைந்தசடை யன்புற்ற மதலாய்
திந்தொத்த மென்றொத்தி என்றொத்தி அம்பொற்
சிலம்பைப் புலம்பவரு சேவடி யோனே
வந்தொத்த சந்தத்திரள் வம்பட்டொரு துய்ய
வங்கப்புணர் செங்கைச்சிலை துங்கக்கரி முகவர்
கந்துற்ற சந்தத்திரள் களம்பற்றி யன்புற்று
கஞ்சப்புவி வாழும்கற் பகப்பிள்ளை யாரே 5

வேறு சீர்

மத்தகனை விகடதட கடகசெந் தூரனை
மால்மரு கோனைமயி லேறிமுன் னோனை
வித்தகனை கனகசா மரைகள்போ லென்னை
விரதணன் குலதிலக வேள்தன்மைத் துனனை
அத்திகனை யன்றுரித் தம்பலத் தேயாடும்
அரனார்தன் மதலையை ஐங்கரத் தோனை

முத்திதரு வேழமுக னைப்பழ மருந்தியை
முந்தியே பாடவினை சிந்திஓ டிடுமே

முண்டக மலர்ந்ததுபோ லேதிரு முகத்தனை
முடியவுங் கமலமலர் தேடியுங் காணா
அண்டர்தொழு தம்பிரான் என்தம்பி ரானே
ஐங்கரனே துங்கமத ஆகுவா கனனே
வெந்திறற் சூலமும் பாசமும் கைக்கொண்டு
வெங்கால தூதர்கள் வந்தாலு மிப்பேர்
தண்டையுங் காலுஞ் சதங்கையு மாய்வந்த
தம்பிகண பதியேநீ அஞ்சல்என் னாயே

மாதுலஞ் சேர்காவல் மாறாமல் மாறியிட
மாயையாய் வந்தகலை யூர்தியை நிறுத்தி
ஆதவர்க ளுய்யவே பூதனை முலைப்பால்
ஆவிய தருந்திஉழல் சகடற வுதைத்து
மோதுமத மாமோது மல்லரை முருக்கியிடர்
முன்னின்ற மாமனை முடித்தலை துணித்தே
பூதல மதிக்கவரு மாதவா கேசவா
புன்னாலை நாரணா பொதுவர்நா யகமே 8

கேசவா என்றமொழி நாமுமுரை செய்திடில்
கேடகலும் அவ்வுரை கேட்டிருந் தோரும்
நாசமிலை யாரேனும் ஆயிரத் திருநாமம்
நவில்இந் திரர்பதம் நல்கிடும் பெருமை
தூசுரர் தெலுங்கர்மக தேசர்பன் னிருநாடர்
துளுவர்கங் காளர்மழு வர்சீனர் கபிலாடர்
பூசுரரொப் பாதவர்கள் புகழவரும் அச்சுதா
புன்னாலை நாரணா பொதுவர்நா யகமே 9

வந்துமுன் னேநடன சகலகலை வல்லவீ
சக்ரவட மீதுகண் வளருந் தலைவி
உந்திமலர் மீதினில் உதித்தவன் தலைவி
ஒளிசிறந் தருள்பளிங் கொத்தவள நிறத்தி
இந்துநுதல வஞ்சரசி யேஉனை நினைப்பவர்க்கு
இயலாக பாடவரம் இனிதினருள் வாயே
சிந்துசாகை புழுகுபன் னீர்களப கஸ்தூரி
சுற்றுங் கருங்குழற் சந்தரசரசு பதியே 10

பரகதியை யாவிலுற நாவிலும் நிறுத்திய
பங்கயச் செல்வியைப் பவளவா யாளைக்
சுருதில்வரு பிழையேது போதுகண் ணாளைக்
கற்பூர மேனியழ கொப்பவரி யாளைக்
கருமுகி லனையாமைக் குழலியைக் குங்குமப்
படியிரு சங்கிராமப் பாரமுலை யாளைச்
சரஸ்வதியை யென்னுடைய நாவிலும் கனவிலும்
தமிழ்வளர்த் தாளையொரு சற்றுமற வேனே 11

இதம்பட இரண்டருகு வேதமிசை பாட
இளங்கமுகு குங்கும குளிங்குமுக மென்ன
சதங்கையொடு தண்டைகள் அலம்பவடி மீதே
சலஞ்சல் சலமெனும் கோடுகள் ததும்ப
பதங்களொடு தொந்ததோம் தொம்மென விசைப்ப
பதஞ்சலி வியாக்கிர பதத்துமுனி காணச்
சிதம்பர சிதம்பரவெ னுங்கொடிய வன்கோடு
திரண்டடசி வந்வினை சிந்தியோ டிடுமே 12

கப்பான சூலுத்தனைக் கொண்டு குத்தியே
காலன் கயிற்றினாய் கட்டிப் பிடித்து
தப்பாம லுயிர்வந்து கொடுபோகு முன்னே
தாடான மயிலேறி வரவேணும் முருகா
முப்பாலு மொக்கக் கலந்துதவு தேனே
முருகேச னேநல்ல முத்திக்கு வித்தே
அப்பா திருச்செந்தி யீசாவடி வேலா
அடியேனை வினைவந்து அணுகாமற் காப்பாய் 13

தடவரைள் கிடுகிடென வடவைமுக மதனில்
சஞ்சலப் படமுடி சற்பரா சன்றன்
உடலது நெறுநெறென விழியது பிதுங்கி
உலகுதிசை கிடுகிடென உம்பருக் கெல்லாம்
அடையலர்கள் பொருதுடைய திமிலமிடை யிந்திரன்
அழகுசெறி அழகுபுய மானமயி லேறிக்
கடவியிலை வடிவுடைய வடிவேலை ஏவுந்தி
சுந்தர்திரு மலரடிகள் கனவில்மற வேனே 14

கருணைகொண் டெதிர்மலைந் திடுசூரன் பொடிபடக்
ககனமெண் டிசையிலுங் கழலினை நினைந்து
உருகுமன் பர்கள்மனம் பரமடைந் திடநினைந்து
உலகுதனி லுனையன்றி யொருதெய்வ முளதோ

முருகுசெறி கொக்கொட்டிச் சோலைநகர் உள்ளாய்
முந்துதவு ஐந்துகர வைந்துநிற வண்ணல்
இருபதமும் அருள்பரவு தான்தோன்று மப்பனார்
என்னவினை முன்னமுதல் இருபதமு மறுமே 15

நாடோறும் அமுதாகி நன்கோயி லுள்ளே
நற்றேகிப் பின்நின்ற நவரெட்ண மலைபோல்
காடுசெறி வள்ளிமலை தேடியிரு தாமரைக்
கால்நோக வந்ததொரு கடவுள்வே லவனே
தோடேறு மதுவுண்டு வண்டினம் மகிழ்ந்தேறு
சுருதிபா டும்கடம்பின் தொங்கலணி மார்பா
மாடேறு சிவயோகி மகனாகி யவனே
வள்ர்தோகை மயிலேறி வந்துமுன் னடவாய் 16

வேறு சீர்

பலகனிகள் சொரிதினைகள் விளைபுனம தடரும்
பகர்கிளிகள் புறவினொடு கலைகள்கடி கூர
அலைகயலை நிகர்னைய கலகவிழி வள்ளியார்
அவரைமண மருளவொரு தவசிவடி வெனவே
வலைகுறவர் எதிர்கிழவர் எனுமிகுதண் அடிபூதிபூசி
வரும்அவர்கள் இருகைதொழு வளமைகொடு
தொடுபார்
உலகுபுகழ் செறிகதிரை நகரில்வரு குமரன்
ஒருமுருக னெனன[22]வினைக ளுறுதிசெடி புகுமே 17

திருவையுமை யவளும்வேள் விடையரனு மொருநாள்
தெளியஉப தேசமறி வடவைமுக மதனின்
கருவரிய மதுகரம் தேனுமைக் குழலின்மிசை
சொலுமொழிகள் இருசெவியில் விழஅரனு முனியச்
சருவலையில் மிசையெறிய மகரமொடு வலைகயிறு
தனையுமி தவிடுபொடி செய்துஉயர் வரையை
உருவஅயில் விடுகுமர னுறுதிசெறி கதிரைநகர்
ஒருமுருக வெனவினைகள் ஒருவியோ டிடுமே 18

வேறு சீர்

மூவா யிரத்தொருவ ரானசிவ னிங்கே
முப்பத்து முக்கோடி தேவர்களு மிங்கே

பாவாண ரைப்போய் அழைத்தசிவ னிங்கே
பஞ்சவர்கள் வந்தடி பணிந்தசிவ னிங்கே
நாவாணர் தன்கவி நணித்தசிவ னிங்கே
நாரதரை ரெட்சித்த நான்முகனு மிங்கே
தேவாதி தேவனார் மாடேறு மீசனார்
செல்வனார் வாழ்கின்ற சிவலோக மிதுவே 19

வேறு சீர்

பருவகம் புயதனம் பொலியுமங் கையரிடம்
பலவிதந் தனில்விழுந் தகமெலிந் திடுமேனும்
குருவெனும் அருள்நினைந் திருபதம் பெறவேணும்
கொடியமலந் தடியவந் தடிமைகொண் டருள்வாய்
இருதடங் குவடுதன் கிரியெழுந் துலகில்வந்து
இலகுசெஞ் சடையிலம் புலிபுனைந் திடுவோன்
திருவுநம் பலவுமம் பிகைநடந் திடநடம்
திகழ்பொனம் புரிதொழுஞ் சிவசிதம் பரமே.

மாறுபடு சூரனை வதைத்தவே லொன்றுண்டு
வள்ளியிரு கொங்கையை மணந்தபுயம் உண்டு
ஆறுமுக வேடுவர்கள் அடிபரவு தாளுண்டு
அதுவன்றி யேநமக் காறுமுக முண்டு
நாறுசெறி யுங்கமல வூர்திசெறி யுங்கதிர்
காமநக ருண்டுசர வணைப்பொய்கை யுமுண்டு
ஏறுமயி லுண்டுபடை வேலுண்டு யாமுண்டு
இனிமறலி படைகள்வினை என்செய்ய லாமே 21

மன்னுமல ர்ப்பாதி மாதங்கி திரிசூலி
மாகாளி மாதருக் கரசான தாயார்
மின்னுமணச் சிலம்பொன்று கரமீதே பெற்று
வீரமுட னேபணிந் தாரமுட னேந்தி
தென்னன் தெறித்துவிழ நூபுரங் கொண்டு
சிக்கெனவே படிஅடித் தக்கினி எரித்த
சுன்னங் கறுத்தமுகில் ஒத்தகுழ லம்மையென்
கண்ணகைதன் இருபாத கமலமற வேனே 22

திங்கள்போ லுந்திரு நுதலையுடை யாளைச்
செந்தா மரைமுகத் தாளைஒப் பாளைப்
பொங்குபுக ழாலுயர்ந் தபொற்றி ருவைப்
பொய்யென்ன மெய்யாக வந்துதித் தவளைக்

தங்கள்பழி கொள்ளென்று பாண்டியன் முன்னே
சத்துரு தனைமுடித் துயிர்மீள வந்து
அங்கணாமைக்கடவைதன்னில்வாழ்கண்ணகையார்
அடித்தாம ரைப்பாதம் நாளும்மற வேனே 23

உன்னைநெஞ் சாரவே நினையாத வாறோ
ஓதுமறை யோனெழுதும் ஊழிவினை தானோ
என்னவினை யென்றறியேன் எனதுசென் னிக்குள்
எய்திய பிணித்துயரம் நீகளைந் தருள்வாய்
தென்னவனை யன்றுபழி கொண்டதிரு மாதே
தேசிகர் குலத்திலே வந்ததெள் ளமுதே
அன்னநடை மாமயிலே தெய்வநா யகமே
அங்கணா மைக்கடவை மருவுகண் ணகையே 24

சிவனா ரிடந்தனி லிருந்துவிளை யாடியே
சிலநாளில் ஒருபொழுது சிந்தையில் நினைந்து
பவமான பிணிதீரப் படிமீதில் வந்து
பாண்டியன் கூடலின் உள்ளே புகுந்து
துவமான மானாகர் மகளான கண்ணகை
தாரணி தனக்கொரு காரணம் தான்
நவமான அங்கணாமைக்கடவை வாழ்கின்ற
நாயகிதன் நாமமொரு நாளுமற வேனே 25

வட்டவா ரிக்கடல் சூழ்உலக மீதினில்
வாழுமூ லத்தான தேவதைக் கெனவும்
இட்டமாய் நற்கனிசொ ரிந்திடும் பெண்பனையை
இன்றுமுதல் ஆண்பனைய தெனநினைந் தவளே
பட்டதொரு கோவலனை யும்பிழைப் பித்தாய்
பாண்டியனை வென்றுபணி மீண்டுபுகழ் கொண்டாய்
மட்டுலவு சோலைசூழ் அங்கணா மைக்கடவை
மருவுகண் ணகையையொரு நாளுமய ரேனே 26

வண்டைநிக ரானவிழி கண்டைநிக ரானமொழி
வாலைமதி சேர்நுதல் மடந்தையர்கள் கூடி
தண்டிய வழக்கதனம் இன்றுசெய் பாண்டியன்
தன்னைஎரி செய்திடையர் தன்சேரி காப்பாய்
எண்டிசையில் மன்னர்பரி வாரமொடு போடிமார்
இயல்வீரர் மற்றுமுள வெல்லோரும் நாளில்

கண்டுபணி கின்றதொரு காரேறு சோலைவாழ்
கண்ணகையை யனவரத காலமய ரேனே 27

வாசமலர் மருவுகோ தைமா னனையவிழி
மாதரார் தான்மருவு மாலைதா னகல்வார்
நேசமா மதில்களெழல் வேயனே யுனதுபதம்
நீடுமா தவப்பெருமை கூறுவா ரகல்வார்
தேகலா வியவிழ ஒரமரோ புகலவரு
சீதளம் திகளெழில் தேவர்நா யகனே
ஆசையா லுதவியகண் நேசனே தான்தோன்றும்
அப்பனே அடியவர்க் கருள்கோணா தவனே 28

சிலையொத்த புருவத்தி கயலொத்த நயனத்தி
தெரிசித்திர வடிவேற்பொரு திருமுத்து நகையார்
மலையொப்பென நவரெத்தின வடமிட்டிடு தனத்தி
வனசக்கொடி யிடைச்சி மதுரச்சொல் லழகார்
அலைவுற்றிடு மிடிமிக்குள அவையுற்றட ரும்மிக்க
அடிமைகளும் நின்கழல் நித்தம் நினைவார்
கலைமுத்த மிழ்மிகுத்த காரேறு சோலைவாழ்
கண்ணகையை நெஞ்சினில் கருதவினை யறுமே 29

அரவின்மணி யாலே சமைத்த பொன் னூபுரம்
அன்றுமது ரைப்பதியில் விற்றகோ வலரைப்
பெரியமழு வாலே பிளப்பித்த பின்பு
பேசரிய வல்வழக் குப்பேசி வென்று
திருகிவல முலைதென்னவன் மேல்விட் டெறிந்தே
சினமாறி யே இடையர் தெருவீதி வந்து
கருதரிய காரைநகர் தன்னில்வாழ் கின்ற
கற்புடைய கண்ணகை தனக்கடைக் கலமே 30

பொன்னுலவு வணிகர்குல திலதமென வேவந்த
புருஷர்கோ வலர்கையில் பொருளுள்ள தெல்லாம்
மின்னுலவு மாதவி தனக்களித் தேமீள
மிக்கதொரு மணிச்சிலம் பைக்கொண்டு சென்று
தென்னுலவு வழுதியைக் கொலைபடுத் தினைமுலை
திருகிமது ராபுரி எரித்தகற் புடைய
கன்னலெனு மென்மொழித் துடியிடைக் கயல்விழிக் 31
காரைநகர் அகலாத கன்னிகண் ணகையே

பொற்புலவு வணிகர்குல மின்னாகி மாறனைப்
புழ்வழக் கிட்டனல் புகைகொண் டெழுப்பி
வெற்பனைய வடகரைய தாறுநூ றாயிரம்
மேற்கோடி ராசர்தமை வென்றுகைக் கொண்டு
கற்பதனை உயர்வான இளங்கோ வடிகள்
சொற்கொண்டு தாபித்த கருணைமட மயிலே
கற்கரட விக்கிரம உக்ரமுக மின்னே
காரைநக ரகலாத கன்னிகண் ண்கையே 32

மேருவரை யுற்றதன பாரமா தவிதந்த
மெய்யன்பு தீரவொரு கைமுதலில் லாமல்
பாரமா நூபுரம் தனைவிற்க வென்றே
பன்னுதமிழ் மதுரைமன் பதியதனில் வந்து
மாரவேள் ஒத்தவடி வானகோ வலன்றன்
மதுரைமன் கொன்றபழ வாங்கிவரு கின்ற
காரைதீ விற்கோயில் கொண்டுவாழ் கின்ற
கண்ணகை கமலபதம் கனவிலுங் கருதுவனே 33

மட்டுலவு பொற்பரி புரத்தைமது ரைப்பதியில்
மாறுமுயர் செட்டியை வதைத்தி அறிந்தும்
இட்டபெரு மட்டகிரி யைச்சரிசொல் வட்டமுலை
யைத்திருகி விட்டுநகர் சுட்டர சழித்தாய்
பெட்டெனைய கத்தடிமை யைப் பணி விடைக்குதவி
இடைச்சுவடு தன்கிருபை நின்கருணை புரிவாய்
க்கட்டு னடக்குமுயர் காரேறு சோலைவாழ்
கண்ணகையை நெஞ்சினில் கருதவினை யறுமே 34

கார்பெற்ற விரிதிரைக் கடல்மீது பெட்டகம்
கண்டுமா னாகருடன் மாசாத்து வாரும்
நேர்பெற்ற பெட்டகம் எனக்கெனவும் உள்ளான
நிதியெனக் கென்னமா னாகரு முரைக்க
பேர்பெற்ற மாசாத்தா ரைக்கண்டு நாணிமிகப்
பின்னிடவும் மானாகர் முன்னிட மயக்க
சீர்பெற்ற தம்பிலுவில் நகர்வாழ வருகின்ற
செல்விகண் ணகையையொரு நாளுமற வேனே 35

அரிபிரமர் தொழவரிய அருள்ரூப மாய்வையை
ஆறதை அடைக்கமண் ணதுசுமந் தவனைக்
குருசிலென மதியாமல் முதுகுற வடித்த
கோமகனை மதுரைசுட் டதிரவிட் டவளே

தரிசுபுனை பரிபுரச ரோசரசப் பாவை
தன்னையன் றித்தாம ரைதனி லிருந்தும்
கருதுதமிழ வளமைசெறி வீரமுனை வாழவரு
கண்ணகையை யனவரத காலமய ரேனே 36

சேரமுனி யிற்திரவி யங்களோடு இனிய
மாதவிக் களிக்கமுட் டெனமறிப் பிடவே
ஆரமுனை யிற்சவடி பொற்பணிகள் செப்பிலிட்டு
அவர்கையிற் கொடுவென்ற அன்னமின் னிடையே
36பாரமுலை யைத்திருகி மாறனை வதைத்துமுன்
பணிவார்கள் பிணிதீர வருபேடை மயிலார்
வீரமுனை யூர்வாழ வருகின்ற கண்ணகை
மென்கமல பாதமொரு நாளுமய ரேனே 37

கட்டியா முயர்பொன்னி ஆறுதனில் மூழ்கியே
தோகைமா தவிமைய லாற்றிஓர் புதுமை
எட்டியே நீர்ச்சுழியில் வண்டுபூ வாசத்தை
இனியுண்ப தற்குவமை ஏதெனப் புகல்வீர்
செட்டிதனை ஓர்மொழியில் அன்றகற்றி யிடஅம்மை
சிந்தையுற் றிங்குவா வென்றழைத் தருளும்
பட்டிமே டதனில்வாழ் கின்றகண் ணகைதிருப்
பாதமலர் நாவிலொரு போதுமய ரேனே 38

வில்முனை நிகர்த்ததிற விழிமுத்து நகைச்சித்திர
மிகரெட்ண மணிசெப்பு முலைமிக்க தமிழார்
சொல்முனைய தென்னதோர் சுட்டுட னடக்கும்
சுகமுற்று வாழ்வுதர வருபொற்கொ டியனையார்
நெல்விளை மிகுத்தறம் பெருகமுக் கியர்வாழ
நித்தமும் திங்கள்மும் மாரிபொழ கின்ற
கல்முனை நகர்க்குள்வாழ் கின்றகண் ணகைதிருக்
கமலபா தம்கனவி லும்கருது வேனே 39

எத்திசையும் மெய்க்கவே தேருடன் திருநாள்
என்றுமோ ராண்டினில் நடத்தியா வரையும்
குற்றமற முக்குகர்கள் எல்லாரை யும்தினம்
குறைவற நடத்துமொரு குணரெட்ன மயிலே
கொற்றவனை வாதாடி அன்றுமென் றேஆயர்
கோமகளை அஞ்சல்என் றிடும்அன்ன மின்னே
உற்றபுகழ சேர்கின்ற வெற்றிசெறி பாண்டிருப் 40
பூர்வாழ வந்தருளும் உலகமா தாவே

காரணி நாரண காளிகங் காளி
கண்ணன் சகோதரி வண்ணமா மாரி
பூரணி முக்கண்ணி வேதநா யகியே
புகழான மானாகர் மகளான திருவே
ஏரணி முக்கண்ணி வேதநா யகியே
ஏழையடி யார்கள்வினை ஈடேற்று வாயே
வீரமா காளியே தெட்சணா காளியே
மேவரிய கல்லாறு வாழும்நா யகியே 41

புகழான மானாகர் மகளான திருவே
பூவையே உனைநினைந் திடில்வந்த வினைகள்
துகள்போல வேபறந் திடுமுனது கற்பால்
சுந்தரம் சேர்கின்ற சந்தனக் கிளியே
நிகழாமல் அடியேனும் அடியவர் தமக்கின்று
நிறைசெல்வ மேகொடுத் தருளவந் தவளே
மகிழூரின் நகர்வாழ வருகின்ற கண்ணகை
மலரடிகள் ஒருபொழுதும் மனதில்மற வேனே 42

இடமிகுபொன் னாடரங் கதனில்மிகு சோழன்முன்
எழில்கொளணிக் கோலமும் பூட்டிமா தவியும்
குடமுலையில் மேல்நிறைந் திடுவடமு லாவுமுன்
குதிகள்செய் நாடகம் கண்டுகோ வலரும்
மடமினுடன் ஆசைகொண் டரிவைதெரு வீதிமுன்
வருகளம தாகுமென் றிடமன மகிழ்ந்தே
திடமடைவ ரால்உயர்ந் திடும்எருவில் மேவுசெந்
திருவைஒரு நாளம்என் சிந்தைஅய ரேனே. 43

சிந்தைதனி லேஅதிக கோபமது கொண்டு
செப்பரிய ஆயர்மனை தனையும்விட் டேகி
வந்துமன வேகமுடன் பாண்டிய னிடத்தில்
வாதாடி நின்றுபரி புரமதை எடுத்து
பந்திதனில் நிற்கின்ற பாண்டியன் றன்னையும்
பண்பில்லாத் தட்டானை யும்எரி செய்த
கந்தமிகு களுவாஞ்சி நகர்குளக் கட்டில்வாழ்
கண்ணகை என்னவினை காதமோ டிடுமே. 44

தாயும்நீ தந்தைநீ அல்லாம லெங்களிட
சஞ்சலந் தீர்ப்பதற் கேயொருவ ருண்டோ
நீயல்லால் வேறுதுணை தமியேனுக் குண்டோ
நிச்சயம் தாகஅருள் தந்துதவி புரிவாய்

ஏயதோர் செல்வமும் செந்நெல்லின் விளைவும்
இன்பமுட னேதந்து எங்கள் துயர் தீர்ப்பாய்
காயாம்பூ மேனியன் தங்கையென வந்தநீ
களுவாஞ்சி நகரிலுறை கின்றகண் ணகையே. 45

கொந்துலவு தாதிநங் கோவலரும் அப்போ
குலவுபெற சிலம்பது விற்கவரும் நாளில்
இந்துலவு கண்ணகைக் கடையாள மெனவே
இயல்புபெறு மல்லிகைப் பூவொன்று நல்கி
சந்துலவு குடங்குணக் கேவந்த போது
தயங்கிடு மெனச்சொன்ன சபதம தறிந்து
விந்தையுட னேகனவு கண்டபத் தினியே
விரைவுகளு வாஞ்சிநகர் மேவுகண் ணகையே. 46

கருதரிய வேங்கைமா மரநிழலின் கீழே
கவலையுறு கோவலர் இருபிழப் பதனை
திருவனைய மதுரமொழி சரடுசி கொண்டு
சேர்த்தெழுப் பிச்சொன்ன செய்தியை அறிந்து
கருவனைய பொற்சிலம் பதுதனை யெடுத்துக்
கவர்ந்ததட் டானையும் பாண்டியன் றன்னையும்
மருவரிய வெற்றிகொண் டிடுமானே மின்னே
மகிழ்வுகளு தாவளை வந்தநா யகியே. 47

ஏற்றமுட னேஇடையர் வெண்ணையது தடவ
இடதுமுலை யைத்திருகி மதுரைசுட் டழித்தாய்
தோற்றமுட னேபுவியில் வைகாசி பூரணைத்
தொகுதிபெறு திங்கள்தனில் நான்வருவே னென்று
உற்றதொரு பூசைக ளுகந்துலகு தன்னில்
அதிகவர மானது கொடுத்தருளி யேதான்
இட்டமுட னேபழு காமநக ருறைகின்ற
யல்பெறுகண்ணகையென்னாவிலயரேனே. 48

மானமுறு மதுரையை அழித்துவரும் நாளில்
மனதினில் தணல்வேகம் அறியாத வண்ணம்
ஆனதொரு கன்னியர்கள் எழுவரும் கூடி
ஆடலது மஞ்சலின் தேறது எடுத்து
தானமுட னேழுபேர் வெற்றியது கண்டார்
தையலின் கோபமது தானகன் றிடவே
தேனமிர்த மொழிமாதர் உறைகின்ற தேற்றா
வெனுந்தீவு புகழவரு செல்விகண் ணகையே. 49

கலையுநீ சமயங்க ளானதொரு பொருளுநீ
கயிலாயர் பாகநீ குயிலார் மொழிச்சிநீ
அலைசேர் மடந்தைநீ அரியச சனத்திநீ
ஆங்கார றீங்கார ஓங்கார மானநீ
குலமான கோவலரைத் தேடியே வந்தநீ
கூடல்மது ராபுரி வளத்தை யழித்தநீ
தலமான செட்டிபா ளையமீதில் வளர்கின்ற
தையல்கண் ணகையைஅநு தினமும்மற வேனே 50

மறவாம லனுதினமு முனைநினைப் பவர்தமக்கு
வந்தபிணி நோய்கிரக தீவினை யகற்றித்
திறமான வணிகேசர் குலமாக வந்தநீ
திந்தோ மெனநடன மாடுமுத் தமிநீயே
குறையாமல் முத்தமிழ்க் கேஅருள் கொடுக்கும்
குங்குமச் செல்வியே குமுதவா யாளே
நறைமேவு செட்டிபா ளையநகரில் வாழ்கின்ற
நாயகிதன் னாமமொரு நாளுமய ரேனே. 51

மலர்மேவு குளிர்சோலை வளர்கோல மயிலார்
வருகீத மொழிஓசை மருமேவு குயிலார்
தலமேமு மறிவான வணிகேசர் குலமீது
தனிலேயோ ரவதார மெவாழ்பெண் ணரசார்
பலமேளம் உயர்கீதம் முரசோடு தவில்தாரை
பலநாத சுரஓசை பலநாளு மதிர
நலமேவு செட்டிபா ளையமீதில் வாழ்கின்ற
நாயகிதன் னாமமொரு நாளுமய ரேனே. 52

கருணைமுகில் மாவில்வடு வாகியே மீனவன்
கண்ணையூ னாகவே காரியாய் நின்றாய்
தருவனைய கணிதர்வந் தெண்ணியே பார்த்தபின்
தையலிவ ளால்மதுரை தானழயு மென்ன
மருவனைய காவேரி தனிலடைய விட்டபின்
மாநாகர் மகளென வந்தவ தரித்தே
செருவனைய கோவலற் கேபாரி யாய்வந்த
செட்டிபா ளையமேவு செல்வமா தாவே 53

சற்பநற் பாஷையும் கல்லாமல் அறியவு
சத்துருவை வெல்லவும் சித்துவிளை யாடவும்
நற்பரி புகுதவும் பெருவாழ்வு கூரவும்
நல்குமே யுன்னை நினைப்பவர்க் கெல்லாம்

பொற்பணி பாரம் பொறாதசிற் றிடையே
பூவரசு மேவு தொழுவரிடம் புரிவாய்
கற்பக விருட்சமே சொற்பசுங் கிளியே
கன்னியே புதுவையுறை கண்ணகைத் தாயே 54

சோடசக லாமதிய மென்னஅழ கெறிப்பச்
சோதிமுக மண்டலமும் மகரகுண் டலமும்
ஏடவிழ் பசுங்குமுத அமிர்தவா யழகும்
இன்பமங் கலநாணு மிருகுவளை விழியும்
பாடகமும் நூபுரமும் இட்டபொன் னடியும்
பச்சைப் பசுந்தோடும் பத்தினியா ரெனவே
பீடதா மரையுமெப் போதுகண் டுய்வேன்
பேடையே மகிழடித் தீவில்மா தாவே. 55

எண்ணமுறு பரிவார வீரர்களு மேதழைத்து
எழில்பெற்ற ராசசிங்க ராசனும் வாழத்
திண்ணமுற வேபுவிக ளேழுந் தழைத்திடத்
திங்கள்மும் மாரிமழை பொங்கிமிக எங்கும்
வண்மை யுள்ளமுக் குகர்கன்ற காலியும்
வாழவே வரமருள வந்தமண் முனையூர்
கண்ணகையை என்னுடைய கனவிலும் நாவிலும்
கருதவினை யொருகோடி காதமோ டிடுமோ. 56

குங்கும மலர்க்காவில் வண்டிசைகள் பாடக்
கூவுகுயில் மாவின்மிசை யேயிசைகள் பாடச்
சங்குமறை நால்வேத முத்தமிழ்கள் பாடச்
சத்தமுள கடலேழும் ஒன்றென முழங்க
மங்கையர் மலர்க்கைகொடு பணிவிடைகள் செய்ய
வாணர்கவி பாடஇசை பாடமங் கலமும்
பொங்குபுகழ் வந்தாறு மூலைநகர் வாழவரு
பொற்பாத மெனவினைகள் அற்றோடி விடுமே 57

மந்தார மானதொரு வெள்ளம் பெரும்புயல்
மைக்கட லுங்கரிய வானிடி முழக்கும்
சந்தாப மாகிய பெரும்படைகள் நோய்பிணி
சகலவினை இடையூறு சண்டைகல கங்கள்
வந்தாறு மூலைப் பதிக்கொன் றும் என் றும்
வாராம லேகாத்து ரெட்சிக்க வேணும்
செந்தா மரைத்திருவே யன்னநடை யாளே
செகதலத் தோர்கள்வினை தீர்ரமா தாவே. 58

கொந்தாடு மதுமலர்க் குழவிரித் தாயே
கோவலன் படுகளந் தனில்நடந் தாயே
அந்தோ எனக்கதறி யழுதுநொந் தாயே
அவ்வணக னுக்குயிர் கொடுத்தளித் தாயே
செந்தாடு மதுரைநகர் தீயெரித் தாயே
தென்னவன் உயிரழிய வேசினத் தாயே
வந்தாறு மூலைநகர் வாழவந் தாயே
வல்வினை தணித்தகண் ணகைஎனும் தாயே. 59

உற்றபுகழ் சேர்கின்ற செட்டிவெள் ளாளரும்
உயர்வுற்ற முக்கியர்க ளுடன்மற்று முள்ளோரும்
கொற்றவர்கள் பரிவார வீரர்களும் ஆயிரம்
கோடிகா லம்வரை நாடியருள் புரிவாய்
பெற்றதொரு வேளாண்மை மிகவிளைய மழைவெள்ளம்
பெருகிமிக வாழ்வுபெற் றினிதாக வாழக்
கற்றவர்கள் வந்தாறு மூலைநகர் வாழ்கின்ற
கண்ணகையை யநவரத காலமய ரேனே. 60

செட்டிமா னாகர்மக ளாகவந் தாயே
தென்னவன் பதியழிய வேசினந் தாயே
வட்டமுலை யைத்திருகி விட்டெறிந் தாயே
மாசாத்து வார்மகனை நீயுகந் தாயே
பட்டபுல வற்குநற் பயன்உகந் தாயே
பதியில் நீ லாப்பழைப் பதியில்வந் தாயே
எட்டுவரை யுன்புகழ் விளங்கவந் தாயே
இனியகற் புடையகண் ணகையெனுந் தாயே 61

சீர்வணிகர் பெருமான் சிலம்புவிலை கூறத்
தெருவினிடை தட்டானும் எதிர்கொண்டு வரவே
பாராளு மீனவன் கள்வனிவ னென்றே
பரிவோடு கொல்லவே வளவனெதிர் சென்று
ஏர்மேவு தன்கிரி யெறிந்துமது ராபுரி
இந்துகுல மன்னனை யெரித்தநா யகியே
கார்மேவு சோலைசூழ் நீலாப்பழை வாழ்கின்ற
கண்ணகை என்னவினை காதமோ டிடுமே 62

சிதறுபொற் குழல்விரித் தனல்மடுத் தவளே
திகழுபொற் பருமணித் தரிசிலிட் டவளே
வழுதியைக் கொலைபடுத் தனல்மடுத் தவளே
மதுரையிற் பரிபுர வழக்குரைத் தவளே

புதுமணித் திலதமிட் டணிமுகத் தினவே
புயல்மழைக் கினியகற் புடைமடக் கிளியே
கதிர்மதிப் பிறையையொப் பெனுமுகத் தினளே
கதிர்நகர்க் கினியகற் புடையபத் தினியே. 64

அக்கினிமுன் னேபஞ் சிருக்குமோ வானத்
தருக்கன்முன் னேபனிகள் அண்டுமோ கண்டாய்
கொக்கினம் ராசாளி முன்னே யிருக்குமோ
கொற்றவன்முன் னேறுமா றிட்டகுடி உய்யுமோ
மிக்கதுணை நீயென்று நம்பியிசை பாட
வேளையென் றால்எனது வினைநோ யிருக்குமோ
தக்கப்புகழ் மேவுசா காமத்தில் வாழும்
தாயே தமிழ்க்குதவு மூர்க்கமா தாவே. 65

வணக்கமுட னேமல்லி கைத்தீவு தன்னில்
வந்துநின் றெல்லோரும் மாதாவே யின்று
இணக்கமுடன் தேங்கா யொன்றுதான் வேணும்
எங்களா லேஇதற் கேதுசெய் வோமெனப்
பணப்படுவ தில்லையோ தேங்காயொன்று வீழப்
பண்ணுவாய் என்றுபல ரும்துதிப்ப வேதான்
கணப்பொழுதி லேதென் னங்கனியை வீழ்வித்த
கற்புடைய மூர்க்கமா தாவைமற வேனே. 66

பொன்னுலவு மேனியழ குங்களப முலையும்
புண்டரிக மொத்தமுக மும்புருவ அழகும்
மின்னுலவு சிற்றிடையி னிற்துகி லுடுத்த
மென்மையழ குங்கருணை வெண்ணகையி னழகும்
மன்னிய மணிக்கனக பூணால வழகும்
மைக்குழல் முடித்தவழ கும்வடிவு முடைய
கன்னியென வந்தெனது கண்ணைத் துடைத்த
கற்புடைய மூர்க்கமா தாவைமற வேனே. 67

தருவாகி யேமதுரை மீனவனை மாறுசெய்து
தண்டமிழ் விளங்கவொரு சங்கீத மானாய்
பொருநாத கீதவின்ப அவதார மாகியே
பூதல மதிக்கவரு பொன்னகர்த் திருவே
ஒருநாளு மறவாம லேஉவந் தோர்கள்
உள்ளமதி லேஉறையு மோவியமின் னாளே
கருமாலை யன்றுரித் தோர்தமக் கன்பான
கண்ணகை நமக்குவெகு கருணைதரு வாயே 68

அங்கணா மைக்கடவை காரேறு நகர்எருவில்
ஆனதம் பிலுவிலொடு வீரமுனை தன்னிலும்
பங்குசேர் பட்டிமேடு உயர்செட்டி பாளையம்
வந்தாறு மூலையொடு மற்றுமுள பதியும்
திங்கள்நேர் ஒத்தநுதல் எங்குமீ திற்பெரிய
தெய்வீக மென்னவிளை யாடியெப் பொழுதும்
எங்குமாய் நிற்குமொரு பங்கமா தின்பெருமை
எந்தனா விற்கனவில் என்றுமக லாதே. 69

பத்தியொடு தொழுவோர்கள் இடரகல வருள்கொண்டு
பண்டுசெறி தம்பிலுவில் பட்டிமா நகரம்
மொய்த்தபுகழ் வீரமுனை கல்முனைகள் லாறு
மகிழூர்செட்டி பாளையும் எருவில்மண் முனையூரும்
வைத்தமகி ழடிச்சோலை முதலைக் குடா
வளமைவரு புதுக்குடி நகரமொடு வந்தாறுமூலை
இத்தனை தலங்களிலும் அங்கணா மைக்கடவை
எனவந்து காரைநகர் இனிதிருந் தவளே. 70

பட்டிநகர் தம்பிலுவில காரைநகர் வீரமுனை
பவிசுபெறு கல்முனைகள் லாறுமகி ழூரெருவில்
செட்டிபா ளையம்புதுக் குடியிருப்பு மண்முனை
செல்வமுத லைக்குடா கொக்கட்டிச் சோலை
அட்டதிக் கும்புகழ் வந்தாறு மூலை
அன்பான சிற்றுண்டி நகரதனில் உறையும்
வட்டவப் பூங்குழல் மண்முனைக் கண்ணகையை
மனதினில் நினைக்கவினை மாறியோ டிடுமே 71

தளமான சிவசமய முறுதிருக் கோயில்வளர்
தருபோரை தீவுநகர் தான்தோன்று வார்தலம்
சிவஞான குருநாதர் பூசனை புரிந்துபின்
திகழ்கதிர் காமநகர் தில்லைமண் டூரும்
புலிவாழி நீதிமனு நூல்முறைமை வாழி
பூதலம் வாழிபுவி யோர்களும் வாழி
உவராழ சூழ்உலகில் வருகாரை தீவுவளர்
உத்தமியும் வாழநிதம் உதயகிரி எனவே. 72

பிற்சேர்க்கை - 2

கண்ணகை அம்மன் குளுத்திப்பாடல்

கண்ணகை அம்மன் சடங்குகால இறுதிநாளின், இறுதி நிகழ்ச்சியாக நடைபெறுவது கண்ணகை அம்மன் குளுத்தி (குளிர்ச்சி) என்னும் பூசனை, அவ்வேளையிற் தவறாது படிக்கப் பெறும் தனிச்சிறப்பு வாய்ந்த இக்குளுத்திப் பாடல்களாகும்,

காப்பு

வெண்பா

ஏழு நிலைகொண் டெழுந்த திருவாசல்
வாழும் படிநின்ற வாரணமே - தாழுஞ்
சடையான் புலியூர் தனியானைக் கன்றே
கடையான் பிறப்பின்றிக் கார் (1)

விருத்தம்

வீசுகர மேகநிற வேதநுத லாள்கருணை
மேவுமத வாரண வினாயக வினோதா
சேசுருதி மேருவினிற் பாரதமிழ கோடுகொடு
சேமமுற வேயெழுது சேர்கருணை யோனே
கூசுமதி சேர்நுதலி கோமளா வலிக்கோர்
கொஞ்சுமத லைகளப குஞ்சர முகத்தோய்
பேசுதமி ழின்கதைக ளேபாடு தற்குஉறு
பிழைகள்வா ராமல்அருள் பேழைவயி றோனே.(2)

நூல்

சீர்பொருந்து மைங்கரனே திருமாலின் மருகோனே
கார்பொருந்தும் ஆனைமுகக் கணபதியே கற்பகமே
பார்பொருந்துங் கண்ணகையார் பழிவாங்கிக குளுந்தகதை
ஊர்செழிக்கப் பாடுகிறேன் ஒருபிழையும் வாராமல் (3)

ஒருபிழையுஞ் செய்யாத உலகுபுகழ்க் கோவலரைப்
பெருமழுவாற் கொல்லுவிந்த பிழைமாறன் றனைவதைத்துக்
கருதரிய ஆயர்மனை கனல்மூளச் சாபமிட்டு
இருமுலையுங் குளுந்தகதை யானுரைக்கக் காப்போமே.(4)

நூல்

காரணி யுங்கொடை வாழ்வணிகர்
காதல் மிகுத்ததோர் கோவலனார்
சீரணி யுந்திரு மாமணிநங்கை
செல்வி உலகுய்யத் தோன்றினாளே 1

மன்னுயிர் மானாகர் தன்மகளார்
மாசாத்து வாற்கு மருமகளார்
பொன்னள் ளதுமாதவிக் குத்தோற்றுப்
கோகைக் கிசைந்தார் கணவனோடே 2

கொஞ்சிய செஞ்சொற் கிளிப்பிள்ளை தன்னைக்
கொண்டுசென் றங்கவர் கையிற்கொடுத்து
வஞ்சக மின்றி வளருமென்று
வந்தாரே கோவலர் பின்புசெல்ல 3

தீதறு காதம் பலகடந்து
சிறந்த கவுந்தயோ டங்கிருத்தி
மாசறு வல்வினை தீரவென்று
மனதறி வோமெனப் போயினாரே 4

வையைக் கரையதில் மீதிருந்து
மாது வணிகர் நடந்தவாறே
தையல் வருந்தக் கவுந்தியனாருந்
தார்வணி கற்கொரு தாழ்வில்லையென்றார் 5

அன்னங் குருகு புறாவினங்கள்
அவைதுணை யாகவி ருந்தவாறே
பொன்னின் மணிச்சிவி கைதன்னிலேறிப்
போந்தே யிடையர்தெ ருப்புகுந்தாரே. 6

மூதிரும் பழவினை மூழலுமே
மொய்குழ லாள்தம்மை யங்கிருத்தி
மதுரை புகுந்து சிறிதுநாளில்
வாணிபஞ் செய்வோ மெனக்கருதி 7

கண்ணகை காற்பொற் சிலம்பதுகொண்டு
கருத்துடன் நல்லோர் கடைகுறுகி
எண்ணமொன் றறியாத கோவலனாரும்
ஏறாவிலை மாற்றஞ் சொன்னவாறே 8

விற்குஞ் சிலம்புவி லைபெரிதென்று
வேளாளர் கொள்ளாமல் மீண்டபோது
தர்க்கம் பெரியதோர் நட்டானார்க்குத்
தன்கைகச் சிலம்பதைக் காட்டினாரே 9

நிற்கஇவ் வாசலில் நிற்கவென்று
நீணில வேந்தற் கெடுத்துரைத்தாரே
கொற்கைச் சிலம்புகொள் கள்வனாரைக்
கொடுவாரு மென்றவர் கூறினாரே 10

மற்றொன் றறியாத மன்னவனாரும்
வணிகனைக் கொல்வோ மெனநினைந்தாரே
குற்றமொன் றறியாத கோவலனாரைக்
கொடுமழு வாலேபி ளைப்பத்தாரே 11

காதலன் பட்ட கடுந்துயரம்
கனவிலே கண்டாள் கனங்குழலாள்
மாவல யஞ்ஞு முலகறிய
மதுரை யெரிப்போ மெனநினைத்தாரே 12

வேயன்ன தோளி மாதரியும்
மெல்லிநல் லாள்தம்மை யங்கிருத்தி
தூமொழி யாரேநீர் சொன்னமாற்றந்
தொல்குலத் தோர்க்கு முடியாதென்றார். 13

மாறுரை கேட்டு மனங்கலங்கி
மன்னவர் வாசல ருகுசென்றாள்
கூறுவே றானஉட லைப்பொருத்திக்
கொம்பனை யாளுயிர் மீட்டுக்கொண்டாள் 14

பாண்டியன் செய்தகொ டும்பழிபாவம்
பார்மே லெழுந்த பழிமதுரை
மூண்ட வடவனல் தன்னைமூட்டி
முழங்க வெரித்தாளே மொய்குழலாளும் 15

ஆயர் குலக்கொடிப் பாவையாவத்து
ஆயிழை தன்னை யடிபணிந்து
தூயநெய் நூறுகு டம்வாங்கிச்
சுடர்முலை கொங்கையி லப்பினாரே 16

ஆறிய சிந்தை யரிவையர்தன்பால்
ஆனதோர் சித்தலைச் சாத்தர்வந்தார்
நாறிய பூங்குழற் கோதைமாதே 17
நங்காய் நீவருந் திங்களொழிய

ஐயனே உந்த னடிபணிந்தேன்
ஆதுலர் சேரிகு ளிரவென்று
வைகாசி திங்கள் வருவேனென்று
வரிசைக் கிசைந்து விடைகொடுத்தாரே 18

தானுமத் தோழி மாதரியும்
தன்னிலொன் றாகிய தார்கோதையும்
வானோ ரெதிர்கொள்ள வையகமுய்ய
மங்கை மகிழ்ந்துல கேறினாளே 19

ஆறிந டந்தாள் ஆயிழையாள்
ஆன திருப்பதி வாசலூடே
தேறிந டந்தாள்திரு மாமணிநங்கை
செல்வி திருப்பதி வாசலூடே 20

கந்தஞ் செறிந்த கனங்குழலாள்
கணவனு டன்பிரி யாதவாறே
இந்த மனையிடர் தீரவென்று
ஏந்திழை யம்மனை யாடினாளே 21

பூந்தடங் கண்ணியர் தாம்புடைசூழ
பொன்னனை யார்தம்மை யங்கிருத்தி
கூந்தல் மடமயிற் சாயல்நல்லாள்
கோதைநின் றம்மானை யாடினாளே 22

போரான வேல்விழிப் பொன்னனையாள்
புவன முழுதும் புரிகுழலாள்
ஆரண மேத்த அரிவையர்போற்ற
ஆயிழை அம்மானை ஆடினாளே 23

சித்தங் கலங்கிய தென்னவன்கூடலைத்
தீக்கொண்டு வந்து சிறப்பையழித்து
பத்தினி யென்று பலரும்போற்ற
பாவைநின் றம்மானை யாடினாளே 24

விற்புருவ வேல்விழிச் சாயல்நல்லாள்
மேதினி யெங்கு குளிர்ந்துவாழக்
கற்புடை யாளென்று சொற்படைத்த
காரிகை யம்மானை யாடினாளே 25

கந்தஞ் செறிந்த குழலசையக்
காசினி ஏழும் தழைக்களன்று
அந்தர வானத் தரம்பையர்போற்ற
ஆயிழை அம்மானை யாடினாளே 26

நான்மாடக் கூடலில் நான்மறையோத
நாற்றிசை எங்குந் திறைகொண்டவேந்தன்
கோமாறன் தன்னைக் கொலைகுறித்
கோதைநின் றம்மானை யாடினாளே 27

ஆலிலை போலே அணிவயிற்றாள்
அங்கயற் கண்ணுடை யாயிழையாள்
சாலி விளைய மழைபொழயத்
தார்கோதை அம்மானை யாடினாளே 28

கன்னியர் தங்கள் மனைவிளங்கக்
கற்றவர் தங்கிளை வாழவென்று
சென்னி வளவன்றன் மாநகரிற்
சேயிழை யம்மானை யாடினாளே 29

கைமானை யேந்திய காரிகையார்தன்
கணவனு டனபிரி யாதவாறே
அம்மானை யேந்திய அங்கயற் கண்ணியின்
அம்பொற் சிலம்பொலி யென்றலைமேலே 30

வேறு

ஒருமா பத்தினி வந்தாள்
உலகேழுந் தழைத்திட வந்தாள் வந்தாள்
திருமா மணிநங்கை வந்தாள்
தேசந் தழைத்திட வந்தாள் வந்தாள் 31

இப்பா ரிடத்தன்னில் வந்தாள்
இடைச்சேரி வாழ்விக்க வந்தாள் வந்தாள்
ஒப்பான பாலகர்க் கானஅன்பாய்
ஒருமா பத்தினி வந்தாள் வந்தாள் 32

வீறாடும் பத்தினி வந்தாள்
விளையாடும் வீதியில் வந்தாள் வந்தாள்
மாறான பாண்டியன் மாளவென்று
வலமான கொங்கை அரிந்தாள் வந்தாள் 33

பாலாரு மென்மொழி வந்தாள்
பதிந்தோர்கள் தன்கிளை வாழவந்தாள்
மேலான வேல்விழி வந்தாள்
விளையாடும் வீதியில் வந்தாள் வந்தாள் 34

கொற்றவன் முன்னால் பிளந்துபோட்ட
கோவலர் அங்கத்தைக் கூட்டிக்கூட்டி
மற்றுமே தென்று விசனங்கேட்ட
மாதுநல் லாளிவள் வந்தாள் வந்தாள் 35

ஆணிப்பொன் னாலேச மைத்தசிலம்பை
அங்கை வருந்த முறித்தேயெறிந்து
மாணிக்கங் காட்டி வழக்குவென்ற
மாதுநல் லாளிவள் வந்தாள் வந்தாள் 36

மாது பராபரி யாள்அகிலாண்ட
மங்கை திரிபுர பங்கயமாது
ஆதவர் சேரி குளிரவென்று
ஆதிரை யாள்வந்த துதித்தாள் வந்தாள் 37

மாவு லகஞ்சூ ழுலகறிய
மதுரை யெரிப்போ மெனநினைந்து
கோவல ரோடேவி மானமேறிய
கொம்பனை யாளிவள் வந்தாள் வந்தாள் 38

ஏற்ற மிகுந்ததோர் பாண்டியன்றன்னை
இழுக்காடி வென்றவள் வந்தாள் வந்தாள்
மாற்ற மிகுந்ததோர் மன்னவன்றன்னை
வழக்காடி வென்றவள் வந்தாள் வந்தாள் 39

கானாரு மாலைக் குழல்சரியக்
காடுக ரம்புந்தொ டர்ந்துபோந்து
மீனவன் செல்வம் அழித்தகோபம்
வெஞ்சமர் வேல்விழ யாளேயாறாய் 40

கற்றவர் தங்கிளை வாழவென்று
காசினி ஏழும் குளிரஎன்று
கொற்றவன் செல்வ மழித்தகோபங்
கோல மழகிய மாதேயாறாய் 41

கொஞ்சு பரிபுரந் தாளிணைநோவக்
கோவலர் பின்னே மதுரையில்வந்து
பஞ்சவன் தன்னை யழித்தகோபம்
பாலாரு மென்மொழி யாளேயாறாய் 42

வாழுந் துடியிடை நோகநடந்து
வளஞ்சியர் பின்னே மதுரையில்வந்து
கூடலன் செல்வ மழித்தகோபம்
கோல மழகிய மாதேயாறாய் 43

விழிக ளிரண்டும் அருவிபாய
வேக முடனே மதுரையில்வந்து
வழுதி மதுரை யெரித்தகோபம்
வன்சமர் வேல்விழி யாளேயாறாய் 44

ஆமல்ல வென்று மறிந்துபாராமல்
அப்போது செட்டியை வெட்டுவித்த
சோமகுல மன்னன் தனைக்கொன்றகோபம்
தோகை மயிலனை யாளேயாறாய் 45

சிந்தை மகிழ்ந்தவ ணிகேசன்பட்ட
செங்களந் தேடிச்சி னத்தையடக்கி
சந்திரகுல மன்னன் றனைக்கொன்றகோபம்
சாயல் மயிலனை யாளேயாறாய் 46

வேறு

காளி புடைசூழுங் காவிரிப்பூம் பட்டினத்தில்
வாழ்வணிகர் தங்குலத்து மாதேகு ளிர்ந்தருள்வாய் 47

இளவேம்பின் கீழே இருந்து வருந்தாமல்
வளமை பெரிதுடைய மாதேகு ளிர்ந்தருள்வாய் 48

மீகாம னுக்கு மிகுந்தத வரங்கொடுத்து
நாகமணி வாங்க நயந்தாங்கு ளிர்ந்தருள்வாய் 49

சொற்பெரிய மானாகர் துய்யகுலத் தேயுதித்து
சற்பமணி தாளணிந்த தாயேகு ளிர்ந்தருள்வாய் 50

எண்ணியமுன் எண்ணும் இயல்வணிகர் கோவலற்காய்
வன்னி வழிநடந்த மாதேகு ளிர்ந்தருள்வாய் 51

மாதவிக்குப் பொன்தோற்று வாழ்வணிகர் தன்னுடனே
காதலித்துப் பின்போன கன்னிகு ளிர்ந்தருள்வாய் 52

காவிரிப்பூம் பட்டணத்தைரக் கைவிட்ட கன்றபின்பு
பூவிரியுஞ் சோலை புகுந்தாய்கு ளிர்ந்தருள்வாய் 53

சாற்றரிய தவத்துக் கவுந்தியனார் தன்னுடனே
பூத்தமலர்ச் சோலை புகுந்தாய்கு ளிர்ந்தருள்வாய் 54

ஓடத்திலேறி யுயர்காவே ரிகடந்து
தேடரிய தென்மதுரை சென்றாய்கு ளிர்ந்தருள்வாய் 55

கொக்கினமுபுள்ளுங் குயிலோசை யுங்கேட்டுத்
தக்க வழிநடந்த தாயேகு ளிர்ந்தருள்வாய் 56

தென்னம் பழஞ்சொரியத் தேமாங்க னியுதிர
வன்னி மதுரைவிட்ட மாதேகு ளிர்ந்தருள்வாய் 57

கொற்கைப் பதிதனக்குக் கோவலனார் பின்போந்து
துர்க்கைப் பதிநடந்த தோகாய்கு ளிர்ந்தருள்வாய் 58

மடைமீதிற் கயல்பாயும் மதுரைந கர்தன்னில்
இடையரகம் புகுந்த ஏந்திழைகு ளிர்ந்தருள்வாய் 59

கட்டிக் கிடந்ததொரு காற்சிலம்பைக் கைக்கொடுத்துச்
செட்டிக்குக்கோவலரைச் செய்தாய்கு ளிர்ந்தருள்வாய் 60

மற்பொலியும் தோளான் வணிகர்தம்மைக் கொன்றதன்பின்
சொற்பனத்தைக் கண்டெழுந்த தோகாய்கு ளிர்ந்தருள்வாய் 61

தேறிக் கனாவைத் திருந்தவிடைச் சிக்குரைத்துச்
சீறி மதுரையிலே சென்றாய்கு ளிர்ந்தருள்வாய் 62

தன்கணவன் பட்ட களந்தேடித் தான்கண்டு
அன்புடன்வந் தேயுயிரை மீட்டாய்கு ளிர்ந்தருள்வாய் 63

தட்டான்முன் கொன்ற தலைவர்தம்மைத் தான்கண்டு
பட்டீரோ வென்றழுத பாவாய்கு ளிர்ந்தருள்வாய் 64

கூறுமொழி யெல்லாங் கோவலரைத் தான்கேட்டு
ஏறும்வி மானத்தே என்றாய்கு ளிர்ந்தருள்வாய் 65

மன்னிய வேகம் மனத்துள்ளே தானடக்கித்
தென்னவனைப் பூசலிடச் சென்றாய்கு ளிர்ந்தருள்வாய் 66

வாச லதுகடந்து வந்தவத ரித்தபின்பு
பூசலிடப் பாண்டியனைப் போனாய்கு ளிர்ந்தருள்வாய் 67

தீதறியாக் கேவலரைத் தென்னவன்தான் வெட்டுவித்த(து)
ஏது குறையாக என்றாய்கு ளிர்ந்தருள்வாய் 68

நல்லோர்முன் தங்கள்முன்னே நாக மணிகாட்டிக்
கொல்லாமற் பாண்டியனைக் கொன்றாய்கு ளிர்ந்தருள்வாய் 69

வாளை யெடுத்து வலமுலையைத் தானரிந்து
தோலாடை யாகத் துணித்தாய்கு ளிர்ந்தருள்வாய் 70

ஓடியோ ரேழுகத வடைத்தான் பாண்டியனும்
ஏழுதக வுருவி மார்புருவத் தைத்ததுவே 71

பட்டேன் பழியெனவே பாண்டியனும் போய்விழுந்தான்
கொன்றாரே கண்ணகையார் கோவலைக் கொன்றபழி 72

தட்டான் பொடியாகத் தார்வேந்தன் நீறாகச்
சுட்டெரித்துப் போட்டதொரு தோகாய்கு ளிர்ந்தருள்வாய் 73

எல்லைப டும்பழிக்கு எண்ணவொண்ணாப் பழிவாங்கிச்
சொல்லரிய மாமதுரை சுட்டாய்கு ளிர்ந்தருள்வாய் 74

மதுராபு ரித்தெய்வம் வாய்மாற்றந் தான்கேட்டுச்
சதுராக வேகந் தணிந்தாய்கு ளிர்ந்தருள்வாய் 75

மதிகெடு செய்த வாள்மாறன் பதியழித்து
இடைய ரகம்புகுந்த ஏந்திழைகு ளிர்ந்தருள்வாய் 76

அரிந்த முலையோடும் இருந்த தனத்தோடும்
ஆயர்ம னைதனிலே ஆயிழையுஞ் சென்றனளே 77

விரைந்தும னைபுகுந்து வெண்ணெய்தன்னை யள்ளிவந்து
அரிந்தமு லைதனிலே அங்கவரும் அப்பினரே 78

ஆயர்குலப் பாவாய் அன்னமே தார்கோதாய்
தூய வுன்சேரி சுடாதேகு ளிர்ந்தருள்வாய் 79

எச்சேரி வெந்தாலும் இடைச்சேரி வேகாமல்
உன்முலை குளிர்ந்தாற்போல் நீயுங்கு ளிர்ந்தருள்வாய் 80

எண்ணாது செய்த இயல்மாறன் பதியழித்து
நண்ணாவி மானம் நயந்தாய்கு ளிர்ந்தருள்வாய் 81

இன்னபடி யேஇயல் மாறன்த னைவதைத்துப்
பொன்னுலகம் வீற்றிருக்கப் போனாய்கு ளிர்ந்தருள்வாய் 82

தேவர்க ளோடே திருவானத் தேரேறிக்
கோவலரை நீங்காத கொம்பேகு ளிர்ந்தருள்வாய் 83

வாராய் புறாவே வளர்மதியைக் கைதொழுவோம்
ஓதாய் புறாவினமே ஓம்நமசி வாயவென்று 84

கோலப் புறாவே கொடுவாராய் வெற்றிலையே
அன்றணையு நோய்பிணிகள் இன்றே அகன்றோட 85

ஆல்போற் தழைத்து அறுகதுபோல் வேரூன்றி
மூங்கில்போற் சுற்றம் முசியாது வாழியரே 86

கன்று கிளைக்கக் கறவையின முண்டாக
இன்றுள்ளோ ரென்று மினிதூழி வாழ்வாரே 87

கற்பதித்த தூண்போற் கலங்காப் பதியனையார்
நெற்பதித்த தூண்போல நீடூழி வாழ்வாரே 88

பாடினோர் வாழி படித்தோர் மிகவாழி
கேட்டோருங் கேட்டு வளரும் பிணிநீங்க 89

இத்தையை வாசித்த யானும் பிணிநீங்க
எக்காலந் தாமும் இனிதாக வாழ்வாரே 90

தேனாருஞ் செஞ்சொற் சிலப்பதிகா ரக்கதையை
எந்நாளும் போற்றி இனிதூழி வாழ்வாரே 91

ஈண்டு புகழ்படைத்த இன்பப்பெ ருங்கதையை
வேண்டி யிருப்பவர்கள் மென்மேலும் வாழ்வாரே 92

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை - 600 113
அண்மை வெளியீடுகள்

	ரூ.பை.
உலகத் தமிழிலக்கிய வரலாறு கி.பி. 901 - கி.பி. 1300	100.00
உலகத் தமிழிலக்கிய வரலாறு கி.பி. 1851 - 2000	180.00
திருப்புகழ் ஒளிநெறி பகுதி - I	90.00
திருப்புகழ் ஒளிநெறி பகுதி - II	90.00
திருப்புகழ் ஒளிநெறி பகுதி - III	80.00
தொல்காப்பியம்-எழுத்ததிகாரம் மூலமும் நச்சினார்க்கினியர் உரையும்	200.00
தொல்காப்பியம்-சொல்லதிகார மூலமும் சேனாவரையருரையும்	200.00
தொல்காப்பியம்-பொருளதிகார மூலமும் நச்சினார்க்கினியர் உரையும்	325.00
தொல்காப்பியம் - பொருளதிகார மூலமும் பேராசிரியர் உரையும்	300.00
தமிழியல் ஆய்வுச் சிந்தனைகள் - தொல்லியல், வரலாறு, சமூகவியல்	100.00
கவிதையியல்	50.00
பண்பாட்டு நோக்கில் திருமுறைகள்	30.00
கதைப் பாடல்களில் கட்டுப்பாட்டு மீறல்கள்	95.00
Bibliography on Translations	175.00
சங்க இலக்கிய ஆய்வு தெ.பொ.மீ.யும் மேலை அறிஞரும்	60.00
திராவிட மொழி இலக்கியங்கள்	200.00
வா.கீ.ச. கலாநிதி கி.வா.ஜகந்நாதன்	60.00
நாசுதிராதிக்-ஞாலமுதன்மொழிஆய்வுகளுக்குப்பாவாணர் தரும் ஒளி	35.00
தமிழ்ச்சொற் பிறப்பாராய்ச்சி	45.00
மொழி பெயர்ப்பியல்	45.00
தமிழில் தத்துவ நூல்கள்	40.00
சி.வை. தாமோதரம்பிள்ளை	40.00
சொல்லிலக்கணக் கோட்பாடு தொல்காப்பியம் - முதல் பகுதி	70.00
இசுலாமியச் சிற்றிலக்கியங்கள்	40.00
பாவாணர் கடவுள் நம்பிக்கையும் சமயச் சால்பும்	30.00
மகளிர் முன்னேற்றத்தில் "அவள் விகடன்" இதழின் பங்களிப்பு	35.00
திருக்குறள் உரைச் சிந்தனைகள்	50.00
தமிழர் பழக்க வழக்கங்களும் நம்பிக்கைகளும்	120.00
மீனவர் சமுதாய நாட்டுப்புறப் பாடல்கள்	35.00
A Course in Modern Standard Tamil	65.00
இசை மருத்துவம்	45.00
கம்பன் களஞ்சியம்	280.00
குலோத்துங்கன் பார்வையில் சமுதாயம்	70.00
இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்க் கவிஞர்கள் தொகுதி-1	100.00
இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்க் கவிஞர்கள் தொகுதி-2	100.00
நீறணி பவளக் குன்றம் (ஒன்பதாம் திருமுறை ஆய்வுநூல்)	35.00
உலகப் பகுத்தறிவு நீரோட்டத்தில் பெரியார்	35.00
குலோத்துங்கன் கவிதைகள் ஒரு கோபுர தீபம்	60.00
தமிழறிஞர் அடிகளாசிரியரின் சிறுவர் இலக்கியப் பாடல்கள்	30.00
நாமக்கல் கவிஞரின் தமிழ்ப்பணி	30.00

637 ஈழத்தில் கண்ணகி கலாச்சாரம் 30.00